...நகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 23 வியாழக்கிழமை (06.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 161

# நாடாளுமன்றம் செல்லவிடாததால் சரத் பொன்சேகா உண்ணாவிரதம்

## சபாநாயகரின் வேண்டுகோளை நிராகரித்தது இராணுவம்



கொழும்பு,மே6

**முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று நாடாளுமன்றம் செல்வதற்குப் படையினர் அனுமதிக்கவில்லை என்றும் - அதனால் அவர் நேற்று முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக் கிறார் என்றும் - அவரது கட்சியான ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது.**

இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு சரத் பொன்சேகாவை சமுகமளிக்கச் செய்வதற்காக அவரை நாடாளுமன்றத்துக்குச் செல்ல விடாமல் இராணுவம் தடுத்தது.

நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் நாள்களில் இராணுவ நீதிமன்ற விசாரணையை நடத்த வேண்டாம் என இராணுவத் தளபதிக்கு சபாநாயகர் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தபோதிலும், இராணுவம் அதனை நிராகரித்து பொன்சேகா நாடாளுமன்றம் செல்வதைத் தடுத்துள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையை இராணுவம் மீறியுள்ளது என்றும் - பொன்சேகாவின் கட்சி குற்றம் சாட்டியது.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டமையால் சபையில் கடும் அமளிதுமளி ஏற்பட்டது.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் கூட்டம்

பொன்சேகாவை சபைக்கு அழைத்து வர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சபாநாயகர் உத்தரவிட வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சி எம்.பிக்கள் குரல் எழுப்பினர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

கொழும்பு,மே6

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை 118 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனநாயக தேசிய கூட்டணியும் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

எனினும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் (24ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில்....

உள்ளே....

சி.சிறிதரன், அ.விநாயகமூர்த்தி, விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரின் உரைகள் 2ஆம் 23ஆம் 24ஆம் பங்களில்...!

## குடாநாட்டின் சட்ட, ஒழுங்கு நிலைமையை ஆராய இன்று உயர்மட்ட மாநாடு

### மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜா தலைமையில்

யாழ்ப்பாணம்,மே6

யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு தொடர்பில் தற்போது உள்ள நிலைபற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கான உயர் மட்ட மாநாடு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெறுகின்றது.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் குடாநாட்டில் பணியாற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர், சகல பொலிஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

குடாநாட்டில் தற்போது சட்டம், ஒழுங்கு தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அவை குறித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற் காகவும், பொதுமக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்துவதற்காகவும் இந்த மாநாடு கூட்டப்படுவதாக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா உதயனுக்குத் தெரிவித்தார். (50)

## ஊடகப் பிரதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார் மேர்வின்

### ஹெகலியவுடன் பிடுங்குப்பாடா?

கொழும்பு,மே6

ஊடகத்துறை பிரதி அமைச்சர் பதவியை மேர்வின் சில்வா நேற்று இராஜினாமாச் செய்துள்ளார். புதிய ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல உடனான கருத்து வேறுபாடே அவரது பதவி விலகலுக்குக் காரணம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய ஊடக அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அதேவேளையில், மேர்வின் சில்வா தனது பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

மேர்வின் சில்வா தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார் எனவும் அவருக்கு வேறு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டதாகவும் ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வா தனது இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளமையை ஜனாதிபதி செயலகம் உறுதி செய்துள்ளது. அவருக்கு பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

மேர்வின் சில்வாவை ஊடகத்துறை (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான போர் முடிந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாடுகிறது அரசு

கொழும்பு,மே6

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் கடந்த வருடம் மே 18 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்து ஒரு வருடம் கழிவதை அரசு வெகு விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது.

இராணுவ சேவைகள் அதிகாரசபை எதிர்வரும் 18 ஆம் திகதியை பயங்கரவாத ஒழிப்பு தினமாகப் பிரகடனப்படுத்தி உள்ளது.

இக்கொண்டாட்டங்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஒருவார காலம்வரை இடம்பெறும். இறுதி நாளான 18 ஆம் (24ஆம் பக்கம் பார்க்க)

## அகதிமுகாம்கள், உயர் பாதுகாப்பு வலயங்களில் அரசே அவசரகாலச் சட்டத்தை மீறியுள்ளது

### சுமந்திரன் எம்.பி. தமது கன்னி உரையில் சுட்டிக்காட்டு



கொழும்பு,மே6

அகதி முகாம்கள் மற்றும் அதிஉயர் பாதுகாப்பு வலயம் போன்றவை உள்ளிட்ட பல விடயங்களில் அரசு அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகளை மீறியிருக்கின்றது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் தமது கன்னி உரையில் கூறினார்.

நேற்றைய அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகள் பல தளர்த்தப்பட்டிருக்கின்றன என்று வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றில் கூறினார். 1995ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகளில் சில மட்டுமே இப்போது நீக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்காக 2006ஆம் (24ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த, கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கையை உடனடியாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்குக!

### ஐ.தே.முவின் அநுரகுமார வலியுறுத்து



கொழும்பு,மே6

இதுவரை படையினரிடம் சரணடைந்த, அவர்களால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கையை அரசு உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய முன்னணியின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

நேற்றைய அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடமாகின்றது. இனங்களுக்கிடையே ஒற்றுமையைக் கட்டியெழுப்ப அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கான ஆற்றல் அரசிடமில்லை.

சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் பற்றிய நம்பிக்கையை இந்த அரசு தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பத் தவறிவிட்டது. இவை தொடர்பில் அந்த மக்கள் நம்பிக்கை இழந்து காணப்படுகின்றனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குபவர்களுக்கும் அடக்கப்படுபவர்களுக்கும் இடையே ஐக்கியம் நிலவியதாக வரலாறு இல்லை!

## சிறிதரன் எம்.பி. தனது கன்னி உரையில் ஆவேசம்

கொழும்பு,மே06

''அடக்குபவர்களும் அடக்கப்படுவர்களுக்கும் இடையே ஐக்கியம் நிலவியதாக வரலாறு இல்லை. நிம்மதி கிடைத்ததாக உதாரணங்களும் இல்லை. எனவே நாங்கள் நாங்களாகவும் நீங்கள் நீங்களாகவும் கரம் கோர்த்து நின்று எங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்.''

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமனற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தனது கன்னி உரையில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு பிரேரனை மீதான விவாகத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தோற்கடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் தோற்றுப்போனவர்கள் அல்லர், அழிக்கப்பட்டவர்கள் எல்லோரும் அழிந்துபோனவர்களும் அல்லர் என்பதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

துருக்கிய பேரரசாலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளாலும் காலத்திற்கு காலம் அழிக்கப்பட்டு வெறும் கற்குவியலாக்கப்பட்டது உரோமானிய தேசம். அந்தக் கற்களையே தம் மூலதனமாக்கி சீமெந்து உற்பத்தியில் பெரும் சாதனையீட்டி இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. அந்தக் கற்களில் எழுதப்பட்ட சோக காவியங்கள் இன்று வசந்த கீதங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

ஒரு தேசமோ ஓர் இனமோ இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டு பேரழிவுகளுக்கு முகங்கொடுக்கும்போது மீளெழுவதற்கு இன்னுமொரு பாதை உண்டு என்பதை ஜப்பானியர்களும் உரோமானியர்கள் இன்று முழு உலகத்திற்கும் நிரூபித்துவிட்டனர்.

### நாம் பயங்கரவாதிகளாக பட்டம் சூட்டப்பட்டோம்

உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் எமது இராணுவ பலத்தையும் எமது சந்ததியையும் அழிப்பதற்கு உரிய நியாயப்பாட்டை எம்மை பயங்கரவாத பட்டியலில் சேர்த்துக் கொண்டதன் மூலம் ஏற்படுத்திக்கொண்டன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழ்மக்களுக்கெதிராக ஒரு பெரும் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

### பல்லாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்

பல்லாயிரம் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் ஆயிரமவர் ஊனமாக்கப்பட்டனர், காணாமல் போனோரின் தொகை இன்னமும் கணக்கிடப்படவில்லை, பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சூறையாடப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக வெறுங்கைகளுடன் முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டோர் தொகை லட்சங்களாக உயர்ந்தது.

இப்பேரழிவின் பின்னால், இலங்கை அரசுக்கு உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் மறைமுகமாகவும் நேரடியாகவும் பெரும் பங்களிப்பை வழங்கின. இன்று இப்போரின் எம்மீது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன எனவும், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன எனவும் குற்றம் சுமத்தி சிங்கள தேசத்தின் கழுத்தை நெரிக்க, வல்லரசுகள் தங்கள் கரங்களை நீட்டுகின்றன. அதாவது எங்களை அழிக்க உங்களுக்கு தோள்கொடுத்தவர்கள் இன்றுஉங்களை அடிமைப்படுத்த எங்களைப் பாவிக்கின்றனர்.

எங்களுக்கெதிராக உங்களையும் உங்களுக் கெதிராக எங்களையும் பாவித்து எங்கள் எல்லோரையும் அடிமைகொள்ள முயலும் இவர்களின் வழியில் நாம் தொடர்ந்து விழத்தான் வேண்டுமா?

நாம் ஒரு தேசத்தின் இரு தேசிய இனங்களாக அங்கீகரிக்கப்பட்டதுண்டு. நாங்கள் எங்களையும், எங்கள் தேசத்தையும் தற்காத்துக்கொள்ள வேண்டாமா? இரு இனங்களுக்குமிடையேயான புரிந்துணர்வும் நல்லடக்கமும் வேறு இப்போது அவசியம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நமது இராணுவ வலிமை அழிக்கப்பட்ட பின்பு, எமது உரிமைகளுக்கான போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்பு, எங்கள் பலவீனமான நிலைமையை மீறி மேலாதிக்கம் செலுத்துவதன் மூலம் ஓர் ஐக்கியத்தை உருவாக்கிவிட முடியும் என்ற ஒரு தவறான பார்வை உங்கள் மீது திணிக்கப்பட்டிருக்கலாம்.

இத்தகையதோர் பார்வையும் அதன் வேர்களில் இருந்து எழுந்த சிந்தனைப்போக்குமே நமது அறுபது வருட போராட்டத்திற்கும் முப்பது வருட ஆயுதப்போராட்டத்திற்கும் அடிப்படை என்ற உண்மையை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய காலமிது.

மீண்டும் குருதி சிந்தும் நாள்களை உருவாக்கும் காரணிகளை தயவுசெய்து உங்கள் எண்ணங்களிலிருந்து தூக்கி தூர வீசிவிடுங்கள். அடக்குபவர்களுக்கும் அடக்கப்படுபவர்களுக்கும் இடையே ஐக்கியம் நிலவியதாக வரலாறு இல்லை. நிம்மதி கிடைத்ததாக உதாரணங்கள் இல்லை. நாங்கள் நாங்களாகவும் நீங்கள் நீங்களாகவும் கரங்கோத்து நின்று எங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்.

எங்கள் கழுத்தை உங்கள் கரங்கள் நெரிக்க வேண்டாம். உங்கள் கரங்களை எங்கள் பற்கள் காயப்படுத்த வேண்டாம். உங்களுக்கென ஒரு பாரம்பரிய வாழ் நிலம், மொழி, பொருளாதாரம், தனித்துவமான கலாச்சாரம் உண்டு. எமக்கும் இவை அனைத்தும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

இலங்கை மக்களாகிய நாங்களும் நீங்களும் பேரழிவுகளைச் சந்தித்த அதேவேளையில் அந்நிய ஆயுத வியாபாரிகளும் தரகர்களும் கோடிகோடியாக இலாபம் வைத்து எம்மைக் கொள்ளையடித்தார்கள். இதுமட்டுமா? போரின்போதும் அதன்பின்பும் எமக்குப் பலவித நெருக்கடிகளைக் கொடுத்து எமது மூலவளங்களையும் மனித உழைப்பையும் கொள்ளையிடுகின்றார்கள்.

### நாடாளுமன்றில்.....

புல்மோட்டையில் இல்மனைட் வளமும் கொள்ளையடிக்கப்படுகின்றது. வடக்கின் சுண்ணக்கல் வளமும் எண்ணெய் வளமும் இந்தியாவால் அபகரிக்கப்பட திட்டம் தீட்டப்பட்டுவிட்டன. இன்னொருபுறம் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிட ரஷ்யா ஒப்பந்தம் எழுதிவிட்டது. சேது சமுத்திர திட்ட மூலம் எமது கடல்வாழ் உயிரினங்களின் வளம் அழிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் கரங்களுக்கு போய்விட்டது. சுதந்திர வர்த்தக வலயம் அந்நிய முதலீடுகளைக் கவர்தல் என்ற பெயரில் எமது மக்களின் மனித உழைப்பு மலிவான விலையில் கொள்ளையிடப்படுகின்றது.

இலங்கை 'பெண்களின் சொர்க்கம் என்ற விளம்பரம் செய்யப்படும் அளவிற்கு உல்லாசப் பயணத்துறை என்ற பெயரில் கலாச்சார பாரம்பரியமூட்டல்களால் பெண்கள் கேவலப்படுத்தப்படுகின்றனர். பதினான்காயிரத்திற்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் வெளிநாட்டவரின் பாலிய வக்கிரத்திற்கு பலியாகி எதிர்காலத்தை இழக்கின்றார்கள்.

### முள்ளிவாய்க்காலுக்குள் மூன்றரை லட்சம் பேர் முடக்கப்பட்டனர்

ஆம், எங்கள் மூலவளங்களும் மனித உழைப்பும் கொள்ளையிடப்பட்டு எமது தேசம் ஒட்டாண்டி நிலைக்கு தள்ளப்படுகின்றது. இப்பேராபத்தில் இருந்து எம்மை நாம் மீட்க நாம் உரிமை கொண்டு ஐக்கியப்பட்டு எழுச்சிபெற வேண்டும். இந்நாட்டில் பெரும்பான்மை சிறுபான்மை என எதுவுமில்லை என்பது வெறும் வெற்றுக்கோசமாக இருந்துவிடக் கூடாது. இனியும் அடக்குபவர்களோ அடக்கபடுபவர்களோ இல்லை என மிளிரவேண்டும் என்பதே நமது அவாவாகும்.

இப்படியான ஒரு புறச்சூழலில் இப்போரின் கொடுமைகளையும் அதன் பின்னரான காலத்தில் கொடுமைகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட மக்களின் இடர்களை கவனித்து களைவதில் முக்கிய பணி எனக்கு அதிகமாக உள்ளதாகவே நான் உணர்கின்றேன். நாம் போருக்கு நேரடியாகவே முகங்கொடுத்தவர்கள். இந்த போர், எங்கள் மீது விமானங்கள் குண்டுகளை வீசியது, எறிகணைகள் எங்கள் உடல்களை துளைத்தன. துப்பாக்கி வேட்டுக்கள் எங்களை துளை போட்டன. மரணம் எங்களை விரட்ட விரட்ட இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து ஓடினோம், போகுமிடம் தெரியாமலேயே வெட்டவெளிகளில் வீதியோரங்களிலும் கூடார வாழ்க்கையை ஏற்றோம். மீண்டும் மீண்டும் போர் எங்களை துரத்திய போதும் ஓடினோம். இருப்பினும் மரணங்களைத் தவிர்க்க முடியவில்லை. உடலுறுப்புக்கள் இழப்பதை தவிர்க்க முடியவில்லை. இறந்த உடல்களை எடுத்து புதைக்கவும் வழியின்றி ஓடினோம். உணவில்லை; குடிக்க நீரில்லை; இயற்கை கடன்களை கழிக்க இடமில்லை, அடுத்த நிமிட உயிர் வாழ்வு பற்றிய நம்பிக்கைக்கு இடமில்லை, முள்ளிவாய்க்காலுக்குள் மூன்றரை லட்சத்திற்கு மேற்பட்டோர் முடக்கப்பட்டோம்.

உலகின் நற்பண்புகளுக்கும் மனிதாபிமானமாக காட்டப்பட்ட நடவடிக்கைகள் எங்களை மரணக்குழிகளுக்குள் தள்ளின. இறந்தவர் போக எஞ்சியோர் நந்திக்கடல் தாண்டினோம். வவுனியாவில் அகதிமுகாமுக்குள் எங்கள் வாழ்வு முடக்கப்பட்டது.

உணவுக்களஞ்சியமான வன்னிமண்ணில் உற்பத்தியைப் பெருக்கி மற்றவருக்கு உண்டி கொடுத்த நாம் ஒருபிடி சோற்றுக்கு கையேந்தி வரிசையில் நின்றோம். இன்று எம்மில் ஒரு பகுதியினர், ஆறு தகரங்களுடனும் ஆறுமாத நிவாரண பொருட்களுடனும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டோம். ஏனையோர் இன்னும் முகாம்களில். போர் முடிந்து ஒரு வருடம் ஓடிப்போய்விட்டது. எம் துயரங்கள் முடிய இன்னும் எத்தனை வருடங்கள் போகும் என்பது எமக்குள்ள கேள்வி. போராளிகள் என்ற பெயரில் இன்னமும் பல ஆயிரம் பேர் தடுப்புமுகாம் அவலங்களுக்குள் தவிக்கின்றனர். பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பார்த்துவிட மணிக்கணக்காக மழையிலும் வெயிலிலும் காத்துநிற்கின்றனர். இன்னும் எத்தனையோ பெண்களும் பிள்ளைகளும் எங்கேயென்று அறியமுடியாது உறவினர் அலைந்து திரிகின்றனர். ஒவ்வொரு நாளும் காயப்பட்டு சிகிச்சைக்காக ஹெலிகொப்டரில் ஏற்றப்பட்ட எத்தனையோ பேரை தேடி விளம்பரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இச்சபையில் பெருமைக்குரிய உறுப்பினர்களே ஒரு ஜனநாயக தேசத்தில் இதுதான் எங்கள் வாழ்வு. இதிலிருந்து நாம் மீளெழ வேண்டும். அந்நிய தேசங்கள் நமது நாட்டின் மூலவளங்களையும் மனித வளங்களையும் கொள்ளையடிப்பதுடன் எமது இறைமையை நிறைவேற்றுவதுடன் பாதுகாக்கவும் நாம் உங்களுடன் ஒன்றிணைய காத்திருக்கின்றோம். ஆனால் நாம் மனிதர்களாக வாழும்போது மட்டும்தான் அது சாத்தியப்படும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எல்லோரும் இந்நாட்டு மக்களென மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் வார்த்தைகளை நேசிக்க முயலுங்கள்.

### மீண்டும் எமது வாழ்வை ஆரம்பிக்க எமக்கு வழிவிடுங்கள்

உரிமை பறிக்கப்பட்டவர்களும் உரிமை பறிப்பவர்களும் ஒரே சகோதரர்களாக எப்படி வாழமுடியும்? எங்கள் சகோதர்களே மக்கள் சார்பில் மீண்டும் நான் உங்களைக் கேட்பது, மீண்டும் எங்கள் வாழ்வை ஆரம்பிக்க எமக்கு வழிவிடுங்கள். உருளும் உலகப்பந்தின் இந்த அழகிய மாங்கனித் தீவிலே கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால வரலாற்று சிந்தனையை கைவிட்டு, இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய நவீன சிந்தனையின்படி இனப்பிரச்சினையை அணுகவேண்டும். சிங்கள மக்களும் தமிழ்ப் பேசும் மக்களும் இலங்கைத் தீவின் இணை உரிமையாளர்களும் இணைப் பங்காளர்களும் என்ற மனபாங்குடன் ஒரு புதிய அரசியலை அணுக அரசு தயாராக வேண்டும்.

தற்போது சிங்கள மக்களிடம் தமிழரை வெற்றிகொண்ட மனப்பாங்கும், தமி ழரிடம் வேதனையும் வெறுப்பும் நிறைந்த நிலையும் காணப் படுகின்றது. ஒரே நாடு ஒரே மக்கள் என்று சொல்லிக் கொண்டே பூநகரி வெற்றிவிழாவையும், கிளிநொச்சி வெற்றிவிழாவையும், முள்ளிவாய்க்கால் வெற்றி விழாவையும் கொண்டாடிய தினமும், இனிவரும் நாள்களில் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை கொண்டாடப்படவுள்ள இராணுவ வெற்றிவிழாவும், தமிழர்களின் மனங்களை எப்படி உடைத்து சிதறடிக்கப்போகின்றது என்பதை சிந்தியுங்கள். இராணுவத்தால் தீவு நிரம்பி வழிந்து ஒன்றுபட்டதுபோல் காணப்பட்டாலும், மனத்தால் தீவு இரண்டு பட்டே இருக்கின்றது. புத்தபகவான் பரிநிர்வாணம் அடைவதற்காக தவமிருந்தார் என்ற மகிமை சிங்கள மக்களுக்கு தெரியும்.



சுதந்திர இலங்கையில் இதுவரை இரண்டரை லட்சத்திற்கும் மேலான உயிர்களை இழந்து தமிழ்மக்கள் தமது உரிமைக்காக தவமிருக்கின்றார்கள் என்ற உண்மையை சிங்கள சகோதரர்களும் இந்த உலகமும் புரியும் நாள் வந்திருக்கின்றது. தன் சொந்த சகோதர இனத்துடன் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ள தயாரில்லாமல், அந்நிய நாடுகளிடம் கையேந்தி தனது சொந்த தமிழ் மக்களுக்கெதிரான அரசியலை வலைவீசி வரும் அரசு நடத்தியதன் விளைவாய் இலங்கைத் தீவை அந்நிய அரசுகளின் காலடிக்குள் சிக்குண்டிருப்பதையும் ஆட்சியாளர்கள் உணர இன்னும் எவ்வளவு காலம் எடுக்குமோ தெரியாது.

### ஓர் இனத்தை ஒடுக்கும் மற்ற இனம் அமைதியாக வாழ முடியாது

ஓர் இனத்தை எந்த இனம் ஒடுக்குகின்றதோ அந்த இனமும் அமைதியாக இருக்க முடியாது அந்த நாடும் சுபீட்சம் அடைய முடியாது. அத்துடன் எம் ஓரினத்தை ஒடுக்க எடுத்த நடிவடிக்கைகளின் விளைவால் அந்நிய தேசங்களிடம் அடிமைப்பட்டு போக[illegible] நேரும். சுதந்திரமும் சுபீட்சமும் நிறைந்த இ[illegible]கையை கட்டியெழுப்ப வேண்டுமென்றால், அது ஏனைய இனங்களின் தனித்துவ உரிமைகளை அங்கீகரிப்பதிலும் அவர்களுடன் அதிகாரங்களை பங்கிட்டுக்கொள்வதிலுமே அதனை ஆரம்பிக்க வேண்டும். அதற்கான துணிச்சலையும் தூரப்பார்வையையும், இன்றைய அரசாங்கம் முன்னெடுக்குமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

முதிர்ந்த அரசியல் அனுபவமிக்க சம்பந்தர் ஐயா தலைமையில் இதற்கான வாய்ப்பை அளிக்க எமது கட்சி தயாராக உள்ளது. இத்தகைய அரிய வரலாற்று வாய்ப்பை பயன்படுத்தி தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல தீர்வை ஏற்படுத்தி, புதிய இலங்கையை கட்டியெழுப்ப அரசு தயாராக வேண்டும். இதனை தவறவிட்டால், வரலாறு தான் விரும்பும் இன்னொரு திசைக்கு தீர்வை இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

ஆழிப்பேரலையாலும் யுத்தத்தாலும் அழிந்து சின்னாபின்னப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் மனங்களைப் புரிந்து அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்து அவர்களி[illegible] தனித்துவமான உரிமைகளை புரிந்து அதற்கேற்ப நியாய பூர்வமானதும் நீதியானதுமான தீர்வை காணவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. நாம் இரு சுதந்திரமான தேசிய இனங்களாக ஒரு நாட்டின் மக்களாக ஒன்றிணைந்து நம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற பிரகடனத்தை மனமுவந்து நாம் அனைவரும் நினைப்போம் - என்றார்.

(அ-சி)


## மரண அறிவித்தல்



### ப. கருணாநிதி (கண்ணன்)

அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட கருணாநிதி (கண்ணன் - தரீம்சன்ஸ் கட்டட ஒப்பந்தக்காரரின் ஊழியர்) நேற்று (05.05.2010) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2010) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

இல.9, வேலம்[illegible], கனகரட்ணம் [illegible], அரியாலை), யாழ்ப்பாணம். (97828)

[illegible] (பாபு)



## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1942 ★ 11 ★ 04



உதிர்வு 2006 ★ 04 ★ 21

### நாகலிங்கம் கணபதிப்பிள்ளை

(J.L.S. லொறி உரிமையாளர்)

நல்லவராய் வல்லவராய் நாளும் இருந்தே
நல்லாய் நானிலமும் போற்ற வாழ்ந்தே
நல்லாய்க் குடும்பந்தனை நலமாய்க் காத்த
நல்லவரை இழந்தே நித்தம் அழுகின்றோம்.

பொன்.கந்தையா வீதி,
நெல்லியடி.

- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அவசரகால விதிகள் பத்து ரத்து; அரசு நேர்மையைக் காட்டவில்லை!

புதிய நாடாளுமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முதல் நாளாகக் கூடிய வேளை, இனிவரும் காலம் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்காமல் ஆட்சி நடத்தப்படும் என்பதற்கு அரசாங்கம் குட்டிச் சமிக்ஞை ஒன்றைக் காட்டியிருக்கிறது!

ஆம்.சுமார் ஆறு வருடங்களாகத் தொடர்ச்சியாக நடைமுறையிலிருக்கும் கர்ண கொடூர அவசர காலச் சட்டத்தின் விதிகளில் பத்து, தளர்த்தப்பட்டதாக அமைச்சர் பீரிஸ் சபையில் அறிவித்ததையே இங்கு குறிப்பிடுகிறோம்.

சும்மா இருந்த அம்மையாருக்கு காற்பணத்துத் தாலி போதாதா? என்பது பேச்சுவழக்கு மொழி. அவரசகாலச் சட்டத்தின் பத்து விதிகளைத் தளர்த்திய அரசாங்கத்தின் நடவடிக்கையும் அத்தகைய நிலை ஒத்ததே.

அவசரகால சட்டவிதிகளை முற்றாக நீக்கக் கூடிய சூழ்நிலை இப்போது நாட்டில் தோன்றியுள்ளது.ஆனால் மக்களின் உரிமைகளை தட்டிப்பறிப்பதோடு மட்டுமன்றி அவற்றைப் புதைகுழிக்குள் போட்டு மூடியிருக்கும் நிலைமை தொடரப்போகின்றது என்பதற்கும் இது ஒரு சமிக்ஞை!

'பாதுகாப்புப் படையினர் அப்போதெல்லாம் இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்ததால், அவசர காலச் சட்ட விதிகளில் சில அவற்றுக்குத் தேவையாக இருந்ததால், அவற்றை அப்போது தளர்த்த முடியவில்லை என்று பேராசிரியரான வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சப்புக் கொட்டியிருக்கிறார்.

அதாவது,மக்களின் உரிமைகளைப் பறிக்கும் அவசர காலச் சட்டத்தையும் அதன் பல கொடூரமான, மக்கள் விரோத, ஜனநாயக விரோத விதிகளையும் இதுவரை நீக்காமல் இருந்ததை நியாயப்படுத்தும் விதத்தில் கதை 'அளந்திருக்கிறார் அமைச்சர்.

இப்போது போர் முடிந்து விட்டது, விடுதலைப் புலிகளை அரசாங்கம் வெற்றி கொண்டாயிற்று என்று அரசாங்கமும் அதன் ஆட்சிப் பிரதானிகளும் உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச நாடுகளிலும் மேளம் கொட்டி வருகின்றார்கள்!

அவ்வாறிருக்க, ஜனநாயக வாழ்வின் உயிரையே உறிஞ்சி மக்களை வெற்றுக் கோதுகளாக்கி உள்ள அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கக் கூடிய புறச் சூழ்நிலை தோன்றி விட்ட போதிலும் அரசாங்கம் அதனைச் செய்யத் தயங்கி நிற்கின்றது. ஏனோ?

நொண்டிச்சாட்டு ஒன்றை முன்வைத்திருக்கிறார் அமைச்சர் பீரிஸ்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை.ஆனால் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பரப்புவதற்கு இன்னமும் முயற்சித்து வருவதனால் அவசரகாலச் சட்ட விதிகள் அவசியம் - என்று இப்போது நாட்டில் நிலவும் அமைதியை மறைத்துப் பூசி மெழுகியிருக்கிறார் அவர். முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்கும் முயற்சி இது.

நாட்டின் 24 மாவட்டங்களிலும் பூரண அமைதி நிலவுகின்றது. கொந்தளிப்போ, கலகமோ எங்கும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை. அரசாங்கத்தின் கெட்டித்தனத்தாலேயே அந்த நிலை தோன்றியிருப்பதாக தனக்குத் தானே கேடயம் சூட்டிக் கொண்டிருக்கிறது அது.

அவ்வாறிருக்க,நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கு முற்றிலும் அப்பாற்பட்ட, கண்ணுக்குத் தோன்றாத நிலைப்பாடு ஒன்று ஊகித்து முன்வைக்கப்படுகின்றது. அதனைக் காரணம் காட்டியே அவசரகாலச் சட்ட விதிகளை நீக்குவதற்கு அரசாங்கம் பின்னடிக்கிறது.

அதாவது, 'இந்தப் புதிய கண்டுபிடிப்பை' ஆதாரமாக வைத்துக் கொண்டு அவசரகாலச் சட்டம் என்ற ஊஞ்சலில் ஆடுவதற்கு அரசு தீர்மானித்து விட்டது என்பதே உண்மை.

அங்கும் இங்கும் தொட்டு அவசரகாலச் சட்டத்தின் பத்து விதிமுறைகளைத் தளர்த்துவதாகப் பெரிதாகப் பிரமாதப்படுத்தி, அவசரகாலச் சட்டத்தை ஏதோ ஒரு வடிவத்தில் தக்கவைக்கவே - நடைமுறைப்படுத்தவே - அரசு விரும்புகிறது என்பதுதான் மறைமுகமான தேற்றம்.

அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களையே அதிகம் வாட்டி வதைக்கிறது. சர்வதேசத்திற்கு ஒப்புக்குக் கூறிக் கொண்டு, தமிழர்களைத் தொடர்ந்து துன்புறுத்துவதே, அவர் ரின் ஜனநாயக ரீதியான உரிமைகளை நசுக்குவதே, அரசின் அழியா நிலைப்பாடு என்பதனை அதன் பம்மாத்து ஏற்பாடு மிகத் துலக்கமாக எடுத்துக் காட்டுகிறது. அவ்வளவுதான்!

மொத்தத்தில், இந்த விடயத்தில் அரசிடம் பெரிதாக எதனையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

மேலும்,பயங்கரவாதச் சந்தேக நபர் என்ற போலி முத்திரையைக் குத்தி தமிழர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்து, வழமையான சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்தில் நிறுத்தாமலே தடுத்து வைத்து, காணாமற் போக வைக்கப்பட்ட கொடுமைகள் தமிழ்ப் பகுதிகளில் மட்டுமே மிக மிக அதிக எண்ணிக்கையில் நிறைவேற்றப் பட்டன. ஒரு சிறுதுளி மனிதாபிமானமும் இன்றி தமிழ் இளைஞர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே சித்திரவதை செய்யப்பட்டார்கள்.உரியவாறு விசாரிக்கப்படாமல் தடுத்து வைத்துப் பின்னர் பிரேதமாக்கப்பட்டார்கள்.

அது மட்டுமன்றி, சர்வதேச மனித உரிமைகளையும் அடிப்படை வாழ்வுரிமைகளையும் தகர்த்தெறிந்து தமிழ் இளைஞர்களில் பெரும் எண்ணிக்கையானோரை பூவுலகை விட்டுத் துரத்திய பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டம் பெற்றெடுத்த ஒன்றே.

இவற்றைத் தடுப்பதற்கு அல்லது நீக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தின் பத்து விதிமுறைகள் தளர்வு என்ற அறிவிப்பு எந்த வகையில் உதவும்?

# இடம்பெயர்ந்த உள்ளூராட்சி உத்தியோகத்தருக்கான நடமாடும் சேவை 13ஆம் திகதி வன்னியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 6

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வின்போது பாதிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் நலன்காக்கும் பொருட்டு நடமாடும் சேவையொன்று நடைபெறவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சும், உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து இந்த நடமாடும் சேவையை ஏற்பாடு செய்துள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் அறிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 13ஆம் திகதி முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் 14ஆம் திகதி கிளிநொச்சிப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது. மேற்படி சேவை காலை 9மணி முதல் மாலை 4 மணி வரை நடை பெறும்.

இந்த நடமாடும் சேவையின் போது,

*உத்தியோகத்தர்களின் காணாமல் போன / அழிவடைந்து போன சுயவிவரக் கோவையினை பூர்த்தி செய்தல்.

*இடப்பெயர்வுக் காலத்தில் வழங்கப்படாத உத்தியோகத்தர்களின் பதவியினை உறுதிப்படுத்தலும் தற்காலிக ஊழியர்களின் பதவியினை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்தல்.

*இடம்பெற்ற இடப்பெயர்வின் போது மரணமடைந்த அல்லது காயமடைந்த உத்தியோகத்தர்களின் விவரத்தினை திரட்டுதலும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டஈடு மற்றும் அநாதைகள், தபுதாரர் ஓய்வூதியம் பெற நடவடிக்கை எடுத்தல்.

*விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் பெறாதோர் விவரம் சேகரித்தல் என்பன இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

## மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,மே 6

வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தவிருக்கும் மாகாண மட்ட சைக்கிள் ஓட்டம், வேகநடை, மரதன் ஓட்டம் ஆகிய போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக யாழ்ப்பாண மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் இதில் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் தலைவர் மா.இளம்பிறையன் அறிவித்துள்ளார். (50)

# பாப்பரசரின் பிரதிநிதிக்கு ஞாயிறன்று பொதுவரவேற்பு

கொழும்புத்துறை, மே 6

யாழ்.மறைமாவட்டத்திற்கு வருகைதந்துள்ள பாப்பரசரின் இலங்கைக்கான புதிய பிரதிநிதி அதிமேதகு ஜோசப் ஸ்பிறிற்றெறி ஆண்டகைக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.மறைமாவட்ட மக்கள் சாா்பில் பொதுவரவேற்பு நடைபெறவுள்ளது.

யாழ்.மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு இந்த வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு முதல்முறையாக விஜயம் செய்துள்ள பாப்பரசரின் புதிய பிரதிநிதி தலைமையில் அன்று மாலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதன்போது பாப்பரசர் 16ஆம் பெனடிக்ரின் செய்தியையும் ஆசியையும் அவர் வழங்குவார்.

யாழ்.மறைமாவட்டத்திலுள்ள அனைத்துப் பங்கு மக்களும் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் மரியன்னை பேராலய வளாக அரங்கில் பொதுவரவேற்பு நிகழ்வும் கலை நிகழ்வும் இடம்பெறும். (50-135)

## காசநோய் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 6

காசநோய் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று இன்று வியாழக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வைத்தியக் கலாநிதி சுனில் டி அல்விஸ் சிறப்பு விருந்தினராகவும், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எ.இ. ஞானசோதி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக 'காசநோய் சமூக அணுகுமுறை (Tuberculosis Community Approach) என்னும் நூலும் வெளியிட்டு வைக்கப்படும். (50-14)

# வன்னியில் 8 எரிபொருள் நிலையங்கள்; கட்டப்பணிகள் முடிவடையும் நிலையில்

## உதவிப் பொது முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே 06

வன்னிப் பிரதேசத்தில் எட்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பொது முகாமையாளர் எஸ். டபிள்யூ. கமகே தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஏ-9 வீதியினூடாகப் பயணிக்கும் வாகனங்களின் வசதி கருதி இந்த எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அமைக்கும் பணிகள் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன.

மாங்குளம்,கிளிநொச்சி, பளை, புல்மோட்டை, வேலன்குளம், புளியங்குளம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலேயே இந்த எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட இப்பிரதேசங்களில் தேவை ஏற்படும் பட்சத்தில் மேலும் சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன- என்றார்.

(50-224)

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு மேலும் ஒரு பவுசர் வாகனம் வந்தது

யாழ்ப்பாணம், மே 6

குடிதண்ணீர் விநியோகத்திற்கென மேலும் ஒரு பெரிய 'பவுசர்' வாகனம் ஒன்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கென எடுத்துவரப்பட்டுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 7 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீரை எடுத்துச் செல்லக்கூடிய இந்தப் பெரிய பவுசர் வாகனம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இதனை விட ஏற்கனவே மூன்று பவுசர் வாகனங்கள் குடிதண்ணீர் விநியோக் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (50-224)

# பரவலாகப் பெய்துவரும் மழையை அடுத்து சிறுபோகத்துக்குத் தயாராகும் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,மே 06

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாகப் பெய்துவரும் மழையை அடுத்து விவசாயிகள் தமது சிறுபோக விவசாயச் செய்கையை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மழை பரவலாகச் சகல பிரதேசங்களிலும் பெய்து வருகின்றது.

மழையை எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு இந்த மழை ஓரளவு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

சிறுபோக மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது தோட்டங்களை உழுது சீர்செய்யும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (50-224)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 24 | 07.05.2010 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி | : நவமி |
| | பி.இ. 01.49 வரை |
| நட்சத்திரம் | : அவிட்டம் |
| | பி.ப. 04.53 வரை |
| சுபநேரம் | : 05.55 - 07.25 |
| ராகுகாலம் | : 10.25 - 11.55 |

# யாழ். கோட்டையைப் புனரமைத்து பாதுகாக்கும் நடவடிக்கை ஆரம்பம்

## தொல்லியல் திணைக்களம் ஈடுபாடு

யாழ்ப்பாணம்,மே 6

பலவருடங்களாக இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது பல்வேறு வழிகளில் கடும் சேதமடைந்து காணப்படுகின்ற யாழ். கோட்டையை மீளப் புனரமைத்துப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை இலங்கைத் தொல்லியல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

நெதர்லாந்தின் நிதி உதவியுடன் தொல்லியல் திணைக்களத்தினால் கோட்டையின் தூர்ந்துபோன பகுதிகள் செப்பனிடப்பட்டு பாதுகாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கோட்டையின் கிழக்குப் பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகளுக்காக பல்கலைக்கழகத் தொல்லியல் துறையில் பட்டம்பெற்ற எட்டு மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டதாகவும் தொல்லியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் யாழ்.கோட்டையைப் புனரமைக்கும் பணிகள் நிறைவுபெற நீண்ட நாள்கள் எடுக்குமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

பல வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தினால் பல்வேறு அழிவுகளைச் சந்தித்திருந்த கோட்டை நீண்டகாலத்துக்குப் பின்னர் தற்போது பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டத்தைத் தொடர வேண்டிய தேவை இப்போது இல்லை; அது முற்றாக நீக்கப்பட வேண்டும்

## நாடாளுமன்றத்தில் கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு,மே6

அவசர காலச்சட்டத்தைத் தொடர்ந்தும் நடமுறைப்படுத்துவதற்கான காரணம் எதுவும் தற்போது நாட்டில் இல்லை. எனவே அதை முற்றாக நீக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய .தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் பேசுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான எந்தக் காரணமும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. பயங்கரவாதத்தை முடக்க வேறு சட்டதிட்டங்கள் அவசியமெனில் எதிர்க்கட்சி என்ற வகையில் அது பற்றிப் பேச நாம் தயாராக இருக்கின்றோம்.

அவசரகாலச் சட்டம் இருக்கும் போது எம் மீதான உலக நாடுகளின் பார்வை அதிகமாக இருக்கும். அவசரகாலச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் கருத்துச் சுந்திரம், வாழ்வுச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் போன்றன முடக்கப்பட்டதை நாம் பார்த்தோம். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைப்பதற்கு அவசரகாலச்சட்டம் நீடிக்கப்படாமல் இருப்பது முக்கியம்

இதேநேரம், 17ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமுல்படுத்தப்படவேண்டுமென நாம் மீண்டும் வலியுறுத்திக் கேட்கின்றோம். இதன் கீழ்,வரும் பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்துள்ளமையால் பொலிஸ்துறை இன்று அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. ஊமல் மோசடிகளை நிறுத்த தற்போ[illegible] செயலிழந்து காணப்படும் லஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவை செயற்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும்.

அரச ஊடகங்களில் பணியாற்றும் தேசிய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 6 பணியாளர்கள் விலக்கப்பட்டுள்ளனர். எந்த அறிவித்தலும் இன்றியே இது இடம் பெற்றுள்ளது. 3,4மாதங்களின் பின்னரே இது குறித்த கடிதங்களும் கிடைத்துள் ளன. ஊடகவியலாளர் திஸநாயகத்திற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது போன்று இவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டுமெனகேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (சி)

## கடந்த 40 வருடகாலமாக சமுக சேவையில் ஈடுபட்டுவரும் அரசசார்பற்ற நிறுவனமான வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01 பதவி - திட்ட இணைப்பாளர் ஒருவர்
வயது - 25 - 45 வரை

தகைமைகள் - பல்கலைக்கழக பட்டம் அத்துடன் திட்ட அறிக்கை, திட்டவரைவு,திட்டமேற்பார்வை,கணனித்துறை போன்றவற்றில் தகைமை பெற்று இருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் கருமமாற்றக் கூடிய திறமையும், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

02 பதவி - திட்ட அலுவலர் - 02 பேர்
(ஒருவருட ஒப்பந்தம்)
வயது - 25 - 45 வரை

தகைமை - விவசாயத் துறையில் பல்கலைக்கழகப் பட்டம் அல்லது Diploma அத்துடன் திட்ட அறிக்கை, திட்ட வரைவு, திட்டமேற்பார்வை, ஆங்கிலம், கணனித் துறை போன்றவற்றில் தகைமை பெற்று இருத்தல் வேண்டும். அத்துடன் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்

03 பதவி - வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர்
(ஒருவருட ஒப்பந்தம்)
தகைமைகள் -G.C.E.A/L அல்லது G.C.E.O/L இல் குறைந்தது 6 பாடங்களில் சித்தி.

* திட்டங்களை அமுல்படுத்தல்
* திட்டமிடலும் அறிக்கையாக்கலும்
* சமூக அணி திரட்டலுக்கான அனுபவமும் தகைமையும்.
* மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்
* கணனித்துறை சார்ந்த அனுபவம்.

04 பதவி - கணனி லிகிதர் (ஒருவருட ஒப்பந்தம்)
தகைமைகள் - MS Office, Photoshop போன்றவற்றில் அறிவும் அனுபவமும்

* கணனி தட்டச்சு தொடர்பான முன் அனுபவம் மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்.
* HNDA கணக்கியல் கல்வி பயிலுபவர். கணனி பராமரிப்பில் ஓரளவு அனுபவம்.

சுயவிவரக்கோவை இணைக்கப்பட்ட விண்ணப்பங்களை 10.05.2010 இற்கு முன்னர் ''தலைவர் வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம்,தெல்லிப்பழை வீதி,வட்டு.வடக்கு, சித்தன்கேணி'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது vaddudevelop@yahoo.com எனும் முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்பவும்.

(சி/567426)

## நாவுக்கரசர் குருபூஜை

யாழ்ப்பாணம், மே6

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்படுகின்ற திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (50-16)

## பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு, மே6

வலி.தென்மேற்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விரிவுரையாளர் திருமதி வி.சத்தியசீலன் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அங்கத்தவர்களையும், ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு டாக்டர் திருமதி அ.சிவரூபன் தெரிவித்துள்ளார். (ஒ-130)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### த.பேபி சாம்பவி

மலர்வு 31.08.2009 உதிர்வு 06.04.2010

06.04.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புமகள் சாம்பவி சுகயீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையிலும், கொழும்பு (பொறல்ல) லேடி றிட்ஜவே வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்ட வேளையில் உயிர் காக்கப் போராடிய வைத்தியர்கள், தாதிமார் மற்றும் மருத்துவ உதவிகள் தேவைப்பட்ட போது உடனடியாக உதவிபுரிந்தும் இறுதிவரை ஆறுதல் கூறி தோளோடு தோள் கொடுத்து உதவிய யாழ்ப்பாணக் கல்லூரிச் சமூகத்திற்கும், மரணச் செய்தியைக் கேட்டவுடன் தொலைபேசியிலும், மின்னஞ்சல் வழியாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், துண்டுப் பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது உள்ளம் நிறைவான நன்றிகள்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி. (97817) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிப்பிள்ளை இராசலட்சுமி

(கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்)



யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு, கெனடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராசலட்சுமி 04.05.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - தங்கம்மா தம்பதிகளின் ஏகபுதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் துரைராசா, சேனாதிராசா ஆகியோரது அன்புச் சகோதரியும் பாக்கியத்தின் சிறிய தாயாரும் அன்னபூரணம் (லண்டன்), கமலாம்பிகை (லண்டன்), சங்கரலிங்கம் (முன்னாள் ரெலிக்கொம் ஊழியர்), தவமணி, இராசலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), தையல்நாயகி (லண்டன்), இராஜேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நடராசா, புலேந்திரன் மற்றும் இராஜாம்பிகை, செல்வராசா, ஜெகசோதி, ஸ்ரீகரன் (லண்டன்), சண்முகராசா (ஜேர்மனி), உமாதேவி, வசந்தாதேவி, நீதிராசா (லண்டன்), கிஸ்ணராசா, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தவக்குமார் (டென்மார்க்), உருத்திரகுமார் (ஜேர்மனி), சிவக்குமார் (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்), சர்மிளா (லண்டன்), உருத்திரகுமாரி (லண்டன்), துர்க்கா (பிரான்ஸ்), துஸ்யந்தன் (ரெலிக்கொம், மன்னார்), கஜேந்திரன், காயத்திரி, உமாகாந், ஔவை, சிவசுதனி, கிரிதரன்(லண்டன்), கிருபாகரன் , கிரிசாந்தி, விரோஷன் (லண்டன்), தர்ஷிகா (லண்டன்), சியாந்தி(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனத்திற்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
0212221701 (சி/567423)

தகவல்
பிள்ளைகள்.


தற்போது யாழ்ப்பாணத்தில் அமோக விற்பனையில்...

Imported By: Abbe (PVT) LTD, Colombo.

Abbe JOURNEY 48CC




கிடைக்குமிடங்கள்:

JAFFNA ELECTRICAL
141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No. 04,New Market,
Chavakachchri.T.P: 0213908702

Midea Electro Mart
No: 1-1, 1-H, Stanley Road,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கொமர்ஷல் வங்கியின் சுன்னாகக் கிளையில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பரிசில்களைப் பெற்ற மாணவர்களுடன் முகாமையாளர், உதவி முகாமையாளர், வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுவதை முதாவது படத்திலும், தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் அதிபர் கே.காராளசிங்கம் சிறப்புரை நிகழ்த்துவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

# உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 29 கிராம அலுவலர் பிரிவுகளில் பொதுமக்கள் மீளக்குடியமர்வதற்கு இராணுவம் அனுமதி

## குடியமர்வுத்திகதி பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம்,மே 6

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள சில கிராம சேவையாளர் பிரிவுகளில் பொதுமக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை, வடமராட்சி கிழக்கு, நல்லூர், தென்மராட்சி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளின் 29 கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்ய தீர்மானிக் கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றம் தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரமே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:

இளவாலை வடக்கு (ஜே/221), இளவாலை வடமேற்கு (ஜே/222), வித்தகபுரம் (ஜே/223), பன்னாலை (ஜே/224), கொல்லங்கலட்டி (ஜே/225), துர்க்காபுரம் (ஜே/229), தந்தை செல்வாபுரம் (ஜே/230), மாவிட்டபுரம் (ஜே/231), மாவிட்டபுரம் தெற்கு (ஜே/232), கட்டுவன் மேற்கு (ஜே/239) மேற்படி பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றுவதற்கான தொழில்நுட்பக் கணிப்பீடு முடிவடைந்துள்ளது.

நகுலேஸ்வரம் (ஜே/226), தெல்லிப்பளை (ஜே/228), பளை வீமன்காமம் வடக்கு (பகுதி) (ஜே/236), பளை வீமன்காமம் தெற்கு (பகுதி) (ஜே/237), கட்டுவன் (பகுதி) (ஜே/238), வறுத்தலைவிளான் (ஜே/241) இப்பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றுவதற்கான தொழில்நுட்பக் கணிப்பீடு நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கு
உதவி அரசாங்க அதிபர் பிரிவு

செம்பியன்பற்று வடக்கு (ஜே/ 426), செம்பியன் பற்று தெற்கு (ஜே/427), மருதங்கேணி (ஜே/428), வத்திராஜன் (ஜே/429), உடுத்துறை (ஜே/430), ஆளியவளை (ஜே/431), வெற்றிலைக்கேணி (ஜே/432), முள்ளியான் (ஜே/433), போக்கறுப்பு (ஜே/434), நாகர் கோயில் மற்றும் சுண்டிக்குளம் பகுதிகளில் கண்ணிவெடி உடனடியாக அகற்ற முடியாதுள்ளதால் அவற்றுக்கான பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவுள்ளன. ஏனைய பிரதேசங்களில் மீள் குடியேற்றத்திற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள் எப்பட்டு வருகின்றன.

நல்லூர்

அரியாலை கிழக்கு (ஜே/89), அரியாலை தென்கிழக்கு(ஜே/89) மேற்குறிப்பிட்ட சில பிரதேசங்களில் உடனடியாக கண்ணிவெடி அகற்ற முடியாதுள்ளதால் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுவதுடன், ஏனைய பிரதேசங்களில் மீள்குடியேற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

தென்மராட்சி

எழுதுமட்டுவாழ் தெற்கு (ஜே/333), மிருசுவில் தெற்கு (ஜே/336)

இப்பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றுவதற்கான தொழில்நுட்பக் கணிப்பீடு நடைபெற்று வருகின்றது.

மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பகுதிகளில் மீள்குடியேற ஏற்கனவே விண்ணப்பிக்காத குடும்பங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் மீள் குடியேறவுள்ள குடும்பங்களுக்கு மீள்குடியேறுவதற்கான திகதி உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவிக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (50-201)

# பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கள் பாதிக்கப்படாத வகையில் அதிபர்கள் செயற்பட வேண்டும்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே 6

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் சாதாரணதர மற்றும் உயர்தர வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்கள் பொதுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது அந்த மாணவர்களின் உரிமைகள், நலன்கள் மழுங்கடிக்கப்படாத வகையில் அதிபர்கள் செயற்பட வேண்டும்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலைகளில் சாதாரணதர, உயர்தர வகுப்புகளில் கல்விகற்கின்ற மாணவர்கள் பொதுப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது அவர்களுடைய நலன்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் பாடசாலையின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படுவதாகவும் இதனால் மாணவர்கள் பாதிப்படைவதாகவும் எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் சிலரை ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்குத் தோற்றவிடாமல் தடுப்பது ஒரு சில மாணவர்களை பரீட்சைக்குத் தோற்றவிடாமல் தடுப்பது எனப்பல்வேறு பிரச்சினைகள் இடம் பெறுவதாக எம்மிடம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளின் நலனைக்கருத்திற் கொள்ளாது மாணவர்களின் எதிர்கால நலனுக்காகச் செயற்பட வேண்டும்.

மாணவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதிப்புக்குள்ளாகும் போது உடனடியாக வலயக் கல்விப்பணிமனைக்குச் சமூகம் தந்து முறைப்பாடு செய்யப்படுமிடத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முறைகளில் அரச சுற்று நிருபத்திற்கமைய செயற்படாத பாடசாலை அதிபர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (50-9)




# கதிர்காமம் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,மே.6

கதிர்காமக்கந்தனின் வருடாந்த திருவிழாவையொட்டி, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் செல்லும் பாதயாத்திரைக் குழுவைச் சேர்ந்த 10 அடியார்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு இங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

அகில இலங்கை கதிர்காம வேல் முருகக் கந்தனின் பாதயாத்திரைச் சங்கத்தினால் கடந்த 23 ஆண்டுகளாக இந்த பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த திங்கட்கிழமை இந்தக் குழுவினர் புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் பொலிஸ் அனுமதி பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நேற்று முன்தினமே புறப்பட்டுச் சென்றதாக பாதயாத்திரைச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (க-236)

## மாணவர்கள் இருவர் அதிபரால் தாக்கப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே6

பாடசாலை மாணவர்கள் இருவர் அதிபரினால் மோசமாகத் தாக்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான மாணவர்களில் ஒருவர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 3 ஆம் திகதி தென்மராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்தகச்சாய் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

பாலாவி தெற்கைச் சேர்ந்த பூதத்தம்பி நிரோஜன் (வயது 15) மற்றும் விஜிதரன் (வயது 16) ஆகிய தரம் 10 வகுப்பில் கற்கும் மாணவர்களே அதிபரினால் தாக்கப் பட்டவர்களாவர்.

பாடசாலை கிணற்றடியில் பொருத்தப் பட்டிருந்த மின் ஆழி (பியூஸ்) காணாமல் போனதற்காக இவ்விருமாணவர்களை அதிபர் தனது அறைக்குள்பூட்டி வைத்து பிரம்பு மற்றும் கை, கால்கள் ஆகியவற்றினால் தாக்கியதாகவும் தாக்குதல் காரணமாக கதவைத்திறந்து வீட்டுக்கு ஓடியதாகவும், பின்னர் தந்தையுடன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து விட்டு வைத்தியசாலைக்கு வந்ததாகவும் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள பூ.நிரோஜன் தெரி வித்தார். (50 -207)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே6

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை பி.ப. 2 மணிக்கு அதிபர் வே. விநாயகமூர்த்தி தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-207)

# சத்திரச் சந்திக்கு அண்மையில் வீதியின் நடுவே பெரிய குழி

## வாகனம் செலுத்துவோர் சிரமம்

யாழ்ப்பாணம்,மே.6

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சத்திரச் சந்திக்கு அண்மையில் வீதியின் நடுவே பெரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. இதனால் அப் பகுதியால் பயணம் செய்யும் வாகனங்கள் ஆபத்தை எதிர் நோக்குவதுடன் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



வீதியில் இந்தக் குழி ஏற்பட்டு நீண்ட நாள்களாகியும் அதனை மூடுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப் படவில்லை. இந்த வீதியால் கனரக வாகனங்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையான வாகனங் கள் நாளாந்தம் பயணிக்கின்றன.

தற்போது பாதுகாப்புக்காக அந்தக் குழியைச் சுற்றி மண் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழியை விரைவில் மூடி அதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்குமாறு அப்பகுதியில் உள்ள வர்த்தகர்களும் பாதசாரிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (50- 224)

# பொது நூலகத்தின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கு மாநகரசபை முடிவு

யாழ்ப்பாணம்,மே.6

யாழ்.பொது நூலக வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையைக் குத்தகை அடிப்படையில் வழங்கி நவீன முறையில் பராமரிப்பதற்கு யாழ்.மாநகரசபை முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்போது முக்கிய பிரமுகர்கள் மற்றும் [illegible]களின் வருகை அதிக [illegible]ப்படுவதோடு, இவர்களில் அநேகர் பொது நூலகப் பகுதிக்கும் சென்று வருவதால், அங்குள்ள சிற்றுண்டிச் சாலையை நவீன முறையில் பராமரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

எனவே சிற்றுண்டிச் சாலையைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக மாநகர சபை ஆலோசித்து வருவதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார். (க-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகம் உணர்த்தும் உண்மை

இந்த எண்ணத்தை உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு சாதாரண மனிதன் ஜந்து அல்ல. நர்ன் தெய்வீகத்தின் திருவுருவமாகும். இந்தத் திடமான உறுதியை உங்கள் மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களால் உண்மையை உணர முடியும். பிரம்ம வித் பிரம்மைவ பவதி. உன்னை பிரம்மமாக நினைத்துக் கொண்டால் நீ பிரம்மமாகவே ஆகின்றாய். உன்னை நீ மனிதன் மட்டுமே என்று நினைத்தால் மனித ஜந்துவாகவே இருந்து கொள்வாய். மனித உருவில் நீ இருந்தாலும் ஆத்ம தத்துவம் உன்னில் உள்ளது.

தெய்வீகம் ஒன்றே ஒன்று. உங்கள் தெளிவான தெய்வீக உருவில் நிலை நின்று அதைச் சரியாகப் பற்றிக் கொள்ளுங்கள். இதுதான் உண்மையான பக்தி.பலவிதமான இடங்களுக்குத் தேவையில்லாமல் போய்க்கொண்டிருக்காதீர்கள். இது உங்கள் பக்தியை அழித்துவிடும். வளரும் ஒரு சிறு செடியை இடம்மாற்றிக் கொண்டிருக்காதீர்கள். அது எப்படி ஒரு நல்ல பலமான மரமாக முடியும். உங்கள் தெய்வீக வழிகாட்டிகளை அடிக்கடி மாற்றிக் கொண்டீர்களானால் அந்தப் பக்தி ஒரு கலப்படமாகிவிடும். அப்படியான ஒரு வழிக்குப் போகாதீர்கள். கீதை சொல்வது போல் "மமைவாம்ஸோ ஜீவலோகே ஜீவ பூத ஸனாதனஹ" (எனது அம்சமான சனாதனமான நிரந்தர ஆத்மாவே எல்லா உயிரிலும் உள்ளது). கடவுள் எல்லோரிலும் எங்கும் உறைவதாக விசுவாசியுங்கள். ஒரு கடவுளிலிருந்து இன்னொரு கடவுளுக்கு மாறிக்கொண்டிருந்தால் அது ஒரு பிழை யான பக்தி. உங்களுடைய விசுவாசத்தை மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. இந்த நம்பிக்கையில் திடமாக இருந்து கொள்ளுங்கள்.



## சாயி சிந்தனை


## விற்பனைக்கு

நல்ல நிலையில் பாவனையிலுள்ள சிசில் R - 80 குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு

தொடர்பு:

*The Express Institute*
*Irupalai, Kopay.*

## தவறிவிட்டது

11/13, வைரவர் கோயில் ஒழுங்கை, அரியாலையைச் சேர்ந்த ஆ.நேமிநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (601111144 V) மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நீர்வேலிப் பகுதி மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P-4 Computers, Monitor மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு.
(விலை 14750/= மட்டுமே)
தொடர்பு: Sky Computer System
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417
(சி/567148)


## தென்மராட்சிப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள்

யாழ்ப்பாணம்,மே 6

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த இருபாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்களின் மிகுதி வேலைகளும், ஒரு பாடசாலையில் புதிய ஆய்வுகூட நிர்மாண வேலைகளும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

நாவற்குழி ம.வி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி ஆகிய பாடசாலைகளில் ஆய்வு கூடங்களின் மிகுதி வேலைகளும் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் புதிய ஆய்வு கூட நிர்மாண வேலைகளும் மேற்கொள்ளும் பொருட்டு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (க - 207)


## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

**04.05.2010**

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2236

வெற்றி எழுத்து: N
வெற்றி எண்கள்: 4 7 7 3 2 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N | 4 | 7 | 7 | 3 | 2 | 1 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 7 | 7 | 3 | 2 | 1 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 7 | 7 | 3 | 2 | 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 10 |
| 3 பரிசுகள் | | | | 7 | 3 | 2 | 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 123 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 2 | 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1220 |
| 5 பரிசுகள் | | | | | | 2 | 1 | ரூபா. 100/= | பரிசுகள் 12143 |
| 6 பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 119920 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 7 | 7 | 3 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 4 | 7 | 7 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 120 |
| 9 பரிசுகள் | | 4 | 7 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1227 |
| 10 பரிசுகள் | | 4 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12007 |
| 11 பரிசுகள் | N | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 47869 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 10,993,130.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு **Rs. 11,100,354.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## வேலையாள்கள் தேவை

1) விற்பனையாளர்கள்
(முன் அனுபவமுள்ள / பழகவிரும்புபவர்கள் ஆண் / பெண் உடன் தேவை)

2) கணக்குப் பதிபவர்
முன் அனுபவமுள்ள (வயது 45-55) ஆண்

தொடர்புகளுக்கு:
222 9286, 077 6646215 (சி/567419)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி இராணுவ முகாமிற்கு பின்புறமாக 1¼ பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு:
071 4977019

# 2 ஆவது ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு





ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லையம்மா உன் சோகமிங்கு
நீண்ட தூரமெனைப் பிரிந்தெங்கு சென்றாய்.
நிம்மதியிழந்து தவிக்கின்றோமம்மா
வேண்டுதல் எத்தனை எத்தனை செய்தாலும்
வேகுதே எங்கள் நெஞ்சம் மீனாவே
மீண்டொரு தரிசனம் தந்தெமைத் தேற்ற
மேதினிக்கு நீ வரமாட்டாயா?

இன்று (06.05.2010) வியாழக்கிழமை அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் லிங்கம்,
சகோதரர்கள்.

## திருமதி சசிகலா (மீனா) விஸ்வலிங்கம்

இல.45, சங்கிலியன் வீதி, நல்லூர். (97803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான தீர்வைப் பெற்றுகொள்ள பேதங்களை நாம் களைய வேண்டும்

## மட்டு.மாவட்ட எம்.பி. அரியநேத்திரன் வலியுறுத்தல்



மட்டக்களப்பு, மே. 6

''தமிழ்ப் பிரச்சனைக்கு தீர்வு காணும் விடயத்தில் தமிழ்த் தலைமைகள் அனைத்து முரண்பாடுகளைக் களைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்''.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

பட்டிப்பளை பிரதேசசபை கலை இலக்கிய, சமூக அபிவிருத்தி ஒன்றியம் நடத்திய கலைஞர்களுக்கான பரிசளிப்பு விழா கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கலைஞர்கள் வாழும்போதே அவர்களை வாழ்த்திக் கௌரவித்து அவர்களின் கலைத்திறனை மதித்து ஊக்கப்படுத்த வேண்டும். மாறாக கலைஞர்கள் மறைந்த திற்கு பின்பு அவர்களை வாழ்த்துவதும், புகழ்மாலை சூடுவது மட்டும் போதாது.

உலகிலேயே தலைசிறந்த கலைகளின் எமது தமிழர் கலையும் மிகவும் முதன்மையானது. ஆகவே, தமிழர்களின் அடையாளங்களான கலை, கலாசாரங்களை எந்தக் காலத்திலும் கைவிடாமல் காப்பாற்றி வளர்க்க வேண்டிய பொறுப்பு நம் எல்லோருடையதாகும். இன்று எமது சமூகத்தின் மத்தியில் புத்திஜீவிகள் பலர் இருந்தாலும் இவர்களின் இரண்டு வகை யான புத்திஜீவிகள் இருக்கின்றார்கள். சுயநலமான புத்திஜீவிகள் தனக்காகவும், தனது குடும்பத்தின் சுய இலாபங்களுக்காக இனத்தின் நலன் எக்கோடு கெட்டாதும் அக்கறை இல்லாதவர்களாக இருப்பார்கள். இவர்கள் சமூகத்தை வழிநடத்துகின்ற போது சமூகம் இவர்களின் பின்சென்றால் எதிர்காலம் சூனியமாகும். ஆனால், பொதுநலமான புத்திஜீவிகள் இனத்தின், சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டவர்களாக இனத்தின் விடியலுக்காக சிந்தித்துச் செயற்படுகின்ற சமூகப்பற்றுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்களின் வழிகாட்டல் சமூகத்தின் எதிர்காலம் ஒளிமயமான சுபீட்சமானதாக அமைய வழிகோலும். அந்தவகையில் மக்களுக்கு புத்திஜீவிகளை அன்னப்பறவை போன்று தெரிவுசெய்து பின்பற்ற வேண்டும். அது மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த தேர்தல் மூலமும் தெளிவானது.

இலங்கையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றத்தில் பெற்று ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தைக் கூட்டுவதற்கு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கூட்டு ஒப்பந் தத்துடன் செயற்பட்டாலும் நாம் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இரண்டு கட்சிக ளும் பெரும்பான்மை கட்சிகளாகும் இவர்கள் அவர்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால், தமிழ் மக்களின் தீர்வை வழங்குவதில் ஆளுக்காள் எதிர்த்துக் கொண்டு நிற்பார்கள். அதேவேளை, தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களின் நியாயமான தீர்வைப் பெறுவதில் ஒரு மித்து செயற்படாமல் ஆளுக்கொரு கருத்தை கூறிக்கொண்டு முரண்பட்டு நிற்பதுதான் எமது இன்றைய கவலைக்குரிய நிலைமை. இனியேனும் இவர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களின் ஆணையை மதித்து எமது மக்களின் விலைமதிக்க முடியாத அர்ப்பணிப்புக்களுக்கு ஏற்றவகையில் எமது நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் நாங்கள் எல்லோரும் பதவிகளுக்காக மட்டும் விலைபோகாமல் ஒன்று பட்டு நின்று பேரம் பேசி எமது கௌரவமான தீர்வை பெற்றுக்கொள்ள உழைப்போம் -என்றார். (ளி)

# மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி மாவட்ட விளையாட்டுப் போட்டியில் சாதனை

அம்பாறை, மே. 06

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகளில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி மாணவர்கள் பத்து முதலிடங்களையும், இரண்டு இரண்டாமிடங்களையும் பெற்று மாவட்ட மட்டத்தில் சாதனை படைத்து கல்முனைக் கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.




அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய 4 கல்வி வலயங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர்.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியைச் சேர்ந்த 115ற்கு மேற்பட்ட மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களான எம்.பி.எம். றஷீட், எம்.சி.ஏ. நஸார், எம்.ஆர். றபிஅஸாம், ஜ.எல்.எம். முஜீப், எம்.எல்.ஏ. முனவ்வர், ஜ. முஜீபா ஆகியோர் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்கியதாக அதிபர் எஸ்.எம்.எம்.எஸ். உமர்மௌலானா தெரிவித்தார். (ளி)

# கிழக்கு மாகாண ஆளுநராக உதுமாலெவ்வையை நியமிக்குக

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, மே. 06

கிழக்கிலங்கையின் பிரபல சிரேஷ்ட அரசியல் வாதியும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதித் தலைவருமான டாக்டர்.ஏ. உதுமாலெவ்வையை கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்குமாறு கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கை தொடர்பிலான மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது முதலான பிரதேசங்களைச் சேர்ந்த பொது அமைப்புகள், மற்றும் பக்கசார் பற்ற நிறுவனங்கள் பல சார்பில் அவற்றின் தலைவர், செயலாளர், முக்கியஸ்தர்கள் ஒப்பமிட்டு இந்தக் கோரிக்கை மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

''கிழக்கு மாகாணம் மூவின மக்களையும் கொண்ட ஒரு மாகாணமாகும். இங்கு ஆளுனராகப் பதவிப் பொறுப்பேற்கும் ஒருவர் இந்த மூவின மக்களதும் கலை, கலாச்சாரம், பண்பாடுகள் விளங்கிய அல்லது கற்ற ஒருவராகவும், அரசியல் ரீதியாக இலங்கையின் முறைமைகளை அறிந்த அனுபவசாலியான ஒருவராகவும் இருப்பது அவசியமாகும்.

-இவ்வாறு ஆளுநர் பதவிவகிப்பவர் ஜனாதிபதியான உங்களது பிரதிநிதியாகச் செயற்பட வேண்டியுள்ளதால், அவர் தங்களை நேசிக்கும் ஒருவராகவும், நாட்டைப் பிரிவிற்கு உட்படுத்த நினையாத ஒருவராகவும் இருப்பது அவசியமாகும்.

இந்தப் பின்னணியில் கிழக்கின் சிரேஷ்ட அரசியல்வாதியும், தமிழ், முஸ்லிம், சிங்களமக்களால் மிகவும் நேசிக்கப்படுபவருமான டாக்டர். ஏ. உதுமாலெவ்வை, கிழக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு மிகவும் பொருத்தமானவர் ஆவார்.

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மர்ஹீம் எம்.எச்.எம். அஷ்ரபின் பெருநம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்து முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்திலும் பெரும்பங்குகொண்டு செயற் பட்ட இவர் அதன் சிரேஷ்ட பிரதித் தலைவராகவும் இருந்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பவற்றிலும் கடந்த காலங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் டாக்டர்.ஏ. உதுமாலெவ்வையை கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்குமாறு நாம் கோருகின்றோம்.'' -என்றுள்ளது. (ளி)

# தமிழ்மக்களின் உரிமையும் சேவையும்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணியாகும்

## பியசேன எம்.பி தெரிவிப்பு

அம்பாறை, மே 06

''தமிழ்ப் பேசும் மக்களின் உரிமையும், அவர்களுக்கான சேவையும் தான் எமது பணியாகும். எமது பிரதேசத்தில் சகல துறைகளிலும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம். என்பதை இன்றுள்ள இளைஞர்களும், யுவதிகளும் சிந்திக்க வேண்டும். கல்வியில் மிகவும் கீழ் நிலையில் இருக்கிறோம். இந்தப் பிரதேசங்களிலுள்ள உயர் பதவிகளின் எதிர்காலத்தில் இன்றுள்ள இளைஞர்கள் சேவையில் இருக்க வேண்டும் இதற்கான கல்வித் துறையில் பல அபிவிருத்திகளை செய்ய இருக்கிறோம்.''

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறைமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச வர்த்தகர்கள், பொதுமக்கள் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் பி. பியசேனக்கு ஆலையடி வேம்பு சந்தை சதுக்கத்தில் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது இந்நிகழ்விற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் எம்.பி. பியசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

என்னைப் பொறுத்தவரையில் சலுகைகளைப் பெற ஒருபோது இணைந்து சோரம் போக மாட்டேன். நான் இதுவரை மக்களுக்கு என்ன சேவை செய்து வந்தேனோ அந்தச் சேவைகளை விரிவுபடுத்துவது தான் எனது சிந்தனையாகும். நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் போது ஒரு வாக்களிப்பு நிலையத்தில் சட்டவிரோதமாக வாக்களிக்க கூடியிருந்த கூட்டத்தை சம்பந்தப் பட்ட அதிகாரிகளைக் கொண்டு அங்கிருந்து கலைத்தேன். இதைக் கண்ட முக்கிய பிரமுகர்கள் என்னைத் தாக்கி வீதியில் போட்டு மிதித்தார்கள் அப்போது ஒருவர் கூட ஏன் என்றும் கேட்கவில்லை. ஏற்பட்ட படுகாயங்களுக்காக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன் அக்கறைப்பற்று பொலிஸாரிடம் முறையீடு செய்தேன் இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை இதுதான் எமது நாட்டின் ஜனநாயகம் -என்றார். (ளி)

# தமிழ்க் கூட்டமைப்பு தமிழர்களை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்கிறது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் காட்டம்

மட்டக்களப்பு, மே. 06

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை தொடர்ந்து அழிவுப் பாதைக்கே அழைத்துச் செல்கிறது.''

-இவ்வாறு மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கிழக்குமாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டதால் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும்கட்சி ஓர் ஆசனத்தைப் பெற்றது. எமது கட்சி அரசுடன் இணைந்து போட்டியிட்டிருந்தால் மூன்று ஆசனங்களை பெற்றிருக்கும். எனினும் அவ்வாறு ஆசனங்களைப் பெற்றிருப்பதால் அது தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும். ஆளும் கட்சியில் வெற்றிபெற்ற மூவரும் முஸ்லிம்களாகவே இருந்திருப்பர்.

மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லா, முன்னாள் அமைச்சர் அமீர்அலி அலிஸாஹிர் மௌலானா ஆகியோரே வெற்றி பெற்றிருப்பர். ஐக்கிய தேசியக் கட்சியிலும் முஸ்லிம் வெற்றி பெற்றால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 முஸ்லிம்கள் வெற்றி பெற்றிருப்பர். முஸ்லிம்கள் வெல்லக் கூடாது என்று நான் சொல்லவில்லை. கிழக்கில் இதன்மூலம் தமிழ், முஸ்லிம் இனமோதல்கள் உருவாக்கியிருக்கும் அதனால் தான் எமது கட்சி தனித்துப் போட்டியிட்டது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது. தனித்துவமும், தேசியமும் பேசியதன் விளைவுதான் இன்று ஆளும்கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுதற்கு பிரதான காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ்த் தேசியம் பேசியதால்தான் சிங்களவர்கள், சிங்கள தேசியம் போசுகிறார்கள். இதனால் சிங்கள சமூகம் ஆளும் கட்சிக்கு வாக்களித்தனர். -என்றார். (ளி)

# மட்டு. மனித உரிமைகள் சங்கத்துக்கு புதிய பணிப்பாளர்கள் நியமனம்

மட்டக்களப்பு, மே 06

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் மனித உரிமை சங்க புனரமைப்புக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு இந்துக்கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் மனித உரிமைகள் சங்க நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர் டி.எஸ். ஜெயந்த களுபோவில தலைமையில் நடைபெற்றது.

இ தன்போது மட்டக்களப்பு மாவட்ட மனித பாளர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டு பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

தேசிய பணிப்பாளராக டி.எம். சந்திரபால, மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் எம். விவேகானந்தன், அரசியல் சமூக சேவைகள் பணிப்பாளர் எம்.ஏ.எம். றவூப், சர்வதேச பணிப்பாளர் - வி.பி. பிரின்ஸ்லி, திட்டப்பணிப்பாளர் - ஏ. சாந்தகுணம், பெண்கள் சிறுவர் நலன் பேணல் - திருமதி வி. தங்கராசா, ஊடகப்பணிப்பாளர் - புவி நேசராசா கேதீஸ், நிதிப்பணிப்பாளர் - எம். செல்வராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களின் சுதந்திரத்துக்கு ஆபத்தானவர் கோத்தபாய

## இப்படிச் சொல்கிறது சர்வதேச அமைப்பு

கொழும்பு, மே 06

ஊடக சுதந்திரத்துக்கு ஆபத்தானவர்களில் ஒருவராக இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விளங்குகிறார் என எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. அவர் வெளிப்படையாகவே ஊடகங்களுக்கு எதிரான பகைமையுணர்வு கொண்டவராகக் காணப்படுகிறார் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச அளவில் ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலான 40பேர் குறித்த விவரங்களை எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலிலேயே கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

வடகொரிய ஜனதிபதி கிம் - யொங் இல், ஈரான் ஜனாதிபதி மஹமூத் அஹமதி நிஜாட், லிபியா தலைவர் முஹமர் கடாபி ஆகியோரையும் தனது பட்டியலில் சேர்த்துள்ள அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ வெளிப்படையாகவே ஊடகங்களுக்கு எதிரான பகையுணர்வு உள்ளவராகக் காணப்படுகிறார்.

உள்நாட்டு யுத்தம் 2009 மே மாதம் முடிவடைந்த போதிலும் இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை இலக்கு வைப்பது நிறுத்தப்படவில்லை.

பத்திரிகையாளர் ஒருவர் கடத்தப்படும் அல்லது கொலை செய்யப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பாதிக்கப்பட்டவர்களின் நம்பகத்தன்மை குறித்துக் கோத்தபாய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கேள்வி எழுப்புகிறார்.

'லங்கா-ஈ-நியூஸ்' இணையத்தளத்தின் பிரகீத் எகனலிகொட காணாமல் போனது குறித்து கேள்வி எழுப்பிய அவர், 'பிரகீத் தானாகவே காணாமற் போய்விட்டார். அவர் யார், என்ன செய்தார் என்பதே எமக்குத் தெரியாது' எனக் குறிப்பிட்டார்.

படுகொலை செய்யப்பட்ட 'சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க குறித்தும் கோத்தபாய இகழ்ந்து பேசினார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கிய பத்திரிகையாளர் ருவான் வீரக்கோன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் பிரசார காலத்தில் ஜனாதிபதியையும் அவரது சகோதரரையும் விமர்சித்த அனைத்து ஊடகங்களும் பழிவாங்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஐந்து செய்தி இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. பல செய்தியாளர்கள் துன்புறுத்தப்பட்டுள்ளனர். இவை அனைத்தும் ஜனவரி மாதத்திலேயே இடம்பெற்றுள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷவின் தூண்டுதலின் கீழ் அரச ஊடகங்கள் சிவில் சமூகத்தைத் தாக்கி வருகின்றன.

அரச ஊடக நிறுவனங்கள் பலவற்றின் ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்; இடைநிறுத்தப்பட்டுள்ளனர்; அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் பிரசாரக் காலத்தில் அரச ஊடகங்களின் ஆசிரியபீடக் கொள்கையை விமர்சித்தமைக்காகவே அவர்கள் இவ்வாறு தண்டிக்கப்பட்டனர்.

அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்றவரான பாதுகாப்புச் செயலாளர் பத்திரிகைப் பேரவையை மீண்டும் ஏற்படுத்துவதில் உறுதியாகவுள்ளார்.

பத்திரிகைப் பேரவைக்கு, ஊடகவியலாளர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கும் அதிகார முறைமை இருப்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 ★ 05 ★ 1920



மறைவு 12 ★ 05 ★ 2008

### அமரர் தம்பு இரட்ணலிங்கம்

(உரிமையாளர், பொப்பியூலர் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்)

திதி: அட்டமி (06.05.2010)

காலத்தைப் பொன்னாகக் கருதி கடமைகளைக் கண்ணாகக் கருதி
வாழ்ந்தீர்கள் ஐயா..
கண்ணை இமை காப்பதுபோல் எம்மைக் காத்து வந்தீர்கள் ஐயா..
கணப்பொழுதில் எமைப்பிரிந்து எமையெல்லாம் சோகத்தில்
ஆழ்த்தினீர்கள் ஐயா..
காலன் உங்களை அணுகாமல் காக்கும் சக்தியின்றிக்
காலமெல்லாம் கலங்குகின்றோம் ஐயா...
எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்போடும் பண்போடும்
வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய எமதருமைத் தந்தையே!
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்க்கின்றோம்..

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கோயில் வீதி, யாழ்ப்பாணம். (97807)

---

## 33ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### கறுப்பையா கந்தசாமி (கந்தர்)

தோற்றம் 25.07.1967 மறைவு 03.04.2010

திங்கள் ஒன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்
மலர்ந்த உன் அன்பு முகம்
மண்ணில் மடிந்து
போனதுவே!
என்றும் உன் நினைவுகளுடன்
உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:

பழைய மாணவர் சங்கம்,
நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை,
கைதடி.
தலைவர், செயலாளர்,
பொருளாளர், உறுப்பினர்கள்.

---

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் புஸ்பராணி (குப்பிளான்)



குப்பிளான் கம்பித்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் புஸ்பராணி கடந்த 30.04.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா.வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- தங்கராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் சோ.ஜீவறஞ்சினி, வீ.குகநாதன் (ஜேர்மனி- 004 92261588070), பா.டஸ்மலா (டென்மார்க்-004559622428); ம.மனோன்மணி (ஜேர்மனி- 0049597 1899533), இ.சாந்தாதேவி, வீ.இதயகுமார் (நோர்வே- 00477 3945134, றோ.வசந்தமாலா (நோர்வே-004722350224), வீ.ஜெயக்குமார் (சுவிஸ் 0041763059268) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2010) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.
(சி/567232)
தகவல்:
குடும்பத்தினர்.

---

## தவறிவிட்டது

வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆனந்தநடராசன் அமல்ராஜ் என்பவரின் தே.அ.அ. (88328 1020 V), செலிங்கோ இன்சூரன்ஸ் காட், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பை கச்சேரிக்கும், ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல.: 0774405977

## தவறிவிட்டது

கிட்ணன் நாராயணன் என்பவரது தே.அ. அட்டை (592062488V) கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

இல.222, சிவசக்தி ஜுவெல்லறி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள் தேவை

யாழ்.நகரின் மத்தியில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள மூக்குக் கண்ணாடி நிறுவனத்திற்கு முன் அனுபவம் நிறைந்த பணியாளர் தேவை. ஆண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: G.Sarwo
தொலைபேசி இல: 0779365111

## உதவியாளர் தேவை

Smak நிறுவனத்தின் உற்பத்திகளை வாகனத்தில் ஏற்றிச் சென்று விநியோகிக்கக் கூடிய உதவியாளர் உடன்தேவை.

தொடர்பு: 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 3509

## மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங்வகைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மர அுடைப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

### ஸ்ரார் செரமிக்ஸ்

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 5672061, 077 7578277- ராஜா
(சி/567231)

---

## விக்டோரியா-யாழ் மீன் வலை உருவாக்ககம்

### திறப்பு விழா



காலம்: மே 06- 2010
நேரம்: காலை 09.30
இடம்: இல. 647, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

★ ஆசியுரை:
அதி.மேதகு யோசப் ஸ்பிட்டேரி
திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி.

★ தலைமையுரை:
அருட்பணி கி.யோ.ஜெயக்குமார்
இயக்குனர், கியூடெக் கரித்தாஸ்

★ பிரதம விருந்தினர்:
மேன்மை தங்கிய கத்திக் கிளக்மன்
இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்.

★ சிறப்பு விருந்தினர்:
மேன்மை தங்கிய கிறிஸ்டீன் றெபிச்சோன்
இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர்.

மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி
வட மாகாண ஆளுநர்

★ மதத் தலைவர்களின் ஆசிகள்
அதிமேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர், கத்தோலிக்க திருச்சபை

ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்.

★ கௌரவ விருந்தினர்கள்:
அருட்பணி ஜோச் சிகாமணி
தேசிய பணிப்பாளர், கரித்தாஸ் இலங்கை.

அருட்பணி டேமியன் பெர்னாண்டோ
முன்னாள் தேசிய பணிப்பாளர், கரித்தாஸ் இலங்கை.

திரு. க.கணேஷ்
யாழ். அரச அதிபர்.

திரு. ஜோன் பத்திநாதர்
தமிழர் ஒன்றியம், விக்டோரியா, அவுஸ்திரேலியா.

திரு. தியாகராசா பிரபாகரன்
திருமதி. சுமி பிரபாகரன்
தமிழர் ஒன்றியம், விக்டோரியா, அவுஸ்திரேலியா.


★ நன்றியுரை
அருட்பணி அ. தி. ஜெயசேகரம்
[illegible]



HUDEC CARITAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலே! ரயிலே!!




ரயில் நிலையத்தில் வந்து நிற்கும் ரயிலில் மக்கள் பரபரப்போடு ஏறி உட்காருகிறார்கள். கீழே நிற்பவர்களிடம் விடைபெற்றுக்கொள்கிறார்கள். மணி அடிக்கிறது. பச்சைக்கொடி காட்டப்படுகிறது. ரயில் ஊதுகிறது. உடனே வண்டித் தொடர் புறப்படத்தொடங்குகின்றது. அப்போது அதை இழுக்கும் எஞ்சின் அந்த ஊரை விட்டுப் பிரியவோ, அந்த வண்டித்தொடரை இழுக் கவோ மனம் இல்லாததுபோல் மிக மெல்ல நகர்கிறது. அது முக்கி முனகி புஸ் புஸ் என்று பெருமூச்சு விடுகின்றது. ஆயினும் சற்று நேரத்தில் அதே எஞ்சின் மனம் மகிழ விளையாடி விரைந்து ஓடும் சிறுவனைப் போல் உரக்கச் சீட்டி அடித்துக்கொண்டும் கட கட என்று ஓசைப்படுத்திக்கொண்டும் மிகவும் வேக மாக ஓடுகிறது. நிலம் தட தட என்று அதிர காற்று இருபுறமும் வீச மேல் எழும் புகை கொடியைப் போல் பின்புறம் நீண்டு பின்தொடர சக்கரங்கள் கடகடவென்று சுழல விரைந்தோடும் ரயிலானது என்றும் நமக்குக் கண் நிறைந்த காட்சியாகவே இருக்கிறது.

முதன் முதலாக ரயில் ஓடத் தொடங்கிய காலத்தில் பொதுமக்கள் அதன் புதுமையைக் கண்டு அஞ்சினார்கள். அச்சத்தோடு வியப்பும் கலந்திருந் தது. ஆனால் இக்காலத்திலோ ரயில் ஓடுவது நாள்தோறும் நாடெங்கும் காணக் கூடிய காட்சியாக ஆகிவிட்டபடியால் நாம் அதன் அழகைக் கண்டு களிக் கத் தொடங்கிவிட்டோம். ஆயினும் அதன் விந்தையைப் பற்றி அவ்வளவு நினைப்பதில்லை.

பகலொளி வீசும் நீண்ட சமவெளிகளிலும், அபாயம் நிரம்பிய பெரு மலைச் சரிவுகளிலும் அம்மலைகளைக் குடைந்து செல்லும் இருள் நிரம்பிய குகைகளிலும் மேகம் தங்கிவிளையாடும் அம்மலை உச்சிகளிலும் சில் லென்று சில்வண்டுகள் ஓயாது ஒலிக்கும் சோலைகளிலும் நிழல் தூங்கும் காடுகளிலும் நீரோடைகள் சலசலக்கும் பள்ளத்தாக்குகளிலும் மிக அகன்ற பேராறுகளின் மீதும் நாள்தோறும் ரயில் ஓடுகிறது. அது பாம்புபோல் வளைந்து வளைந்து சீறிக்கொண்டு உயரமான மலை உச்சியின் மீது ஏறு கிறது. வெயில், மழை, பனி, வெப்பம், குளிர், பெருங்காற்று ஆகியவை ஒன் றுக்கும் அஞ்சுவதில்லை. 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்று சென்று கொண்டிருக்கின்றது.

நினைத்துப் பார்த்தால் ரயில் நமக்கு எத்தனை வகையாக உதவி புரிகி றது. கண்டம்போல் மிகப்பரந்த நமது நாட்டின் பல பகுதிகளையும் அது நெருங்க இணைக்கிறது. நாட்டின் செல்வத்தைப் பெருக்கியும், மக்களையும் பண்டங்களையும் சுமந்துசென்றும் நாட்டின் பஞ்சத்தின் கொடுமை தாக் காமல் தவிர்த்தும் நாட்டின் பாதுகாப்பைத் தலைமேற்கொண்டும் அது நமக்குப் பெருந்துணை புரிகின்றது. நமது நாட்டின் பல்வேறு பகுதிகளை மட்டு மன்றி உலகத்தின் பற்பல நாடுகளையும் அது ஒன்றாகப் பிணைக்கிறது. 'ஒன்றே குலம்' என்னும் உணர்ச்சியை அது வெகு எளிதாக உலக மக்கள் அனைவருக்கும் அளிக்கிறது.

# சொற்களின் பலம் தெரியுமா?



கர்ம யோகத்தில் பல பகுதிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, ஒரு சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் அமைந்துள்ள தொடர்பை அறிவதும், சொல்லின் ஆற்றலால் நாம் சாதிக்கக் கூடியதும் என்ன என்பதை அறிந்து கொள்வதுமாகும்.ஒவ்வொரு மதத்திலும் சொல்லின் சக்தி உணரப் பட்டுள்ளது.சில மதங்களில் உலகின் தோற்றமே சொல்லில் இருந்துதான் வந்ததாகக் கூறப்படுகின்றது. இறைவனுடைய சிந்தனையின் புறத்தோற்றம்தான் சொல். கடவுள் இந்த உலகத்தைப் படைப்பதற்கு முன்னால், அதைப்பற்றிச் சிந்தித்து முடிவு செய்ததால் படைப்பு சொல்லிலிருந்தே தோன்றிற்று.

சொல்லினுடைய மிக உயர்ந்த, தத்துவ ரீதியான, சமய சம்பந்தமான மதிப்புகளோடு, ஒலி அடையாளங்கள் மனித வாழ்வில் எவ்வளவு பெரிய இடம் வகிக்கின்றது என்பதையும் நாம் காணலாம்.

நான் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன்; உங்களை நான் தொடவில்லை. நான் பேசுவதால் காற்றில் ஏற்படுகின்ற அதிர்ச்சிகள் உங்கள் காதுகளுக்குள் நுழைந்து நரம்புகளைத் தொட்டு உங்கள் மனதில் சில விளைவுகளை ஏற்படுத்துகின்றன. உங்களால் இதைத் தடுக்க முடியாது. இதைவிட மிகவும் ஆச்சரியகரமானது என்ன இருக்கமுடியும்?

ஒரு மனிதன் மற்றொரு மனிதனைப் பார்த்து, 'நீ மடையன்' என்று கூறுகிறான்.இதைக் கேட்டதும் அந்த மனிதன் தன் முஷ்டியை மடக்கிக்கொண்டு, அப்படிச் சொல்லியவன் மூக்கில் ஓங்கி ஒரு குத்துவிடுகிறான். சொல்லின் ஆற்றலைப் பாருங்கள்! ஒரு பெண்மணி அழுது கொண்டும், துன்பத்தால் துடித்துக் கொண்டும் இருக்கிறாள்.மற்றொரு பெண் அவளுடன் வந்து, மென்மையாக சில வார்த்தைகள் பேசுகிறாள்.உடனே வளைந்து கூனிப்போன அந்தப் பெண்ணின் உருவம் நிமிர்ந்து,நேராக நிற்கிறது. அவளுடைய துன்பம் பறந்து, முகத்தில் புன்னகை அரும்ப ஆரம்பிக்கின்றது. சொல்லின் ஆற்றலை எண்ணிப் பாருங்கள்! உயர்ந்த முகத்தில் புன்னகை அரும்ப ஆரம்பிக்கின்றது. சொல்லின் ஆற்றலை எண்ணிப்பாருங்கள்! உயர்ந்த தத்துவங்களிலும் அன்றாட வாழ்விலும் ஒரு மாபெரும் சக்தியாக அவை விளங்குகின்றன. இரவும் பகலும் நாம் சிந்திக்காமலும், ஆராய்ச்சி செய்யாமலும் வார்த்தையின் இவ்வாற்றலைக் கையாண்டு கொண்டிருக்கிறோம்.

சொன்னவர் - சுவாமி விவேகானந்தர்.

# எது விவேகம்



மேக்ஸ் ஆர்ட் என்பவர் ஒரு புகழ் பெற்ற கோடீஸ்வரர். அவர் தனக்கு தன்னுடைய காரை ஓட்டு வதற்கு ஒரு டிரைவர் வேண்டுமென்று செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்திருந்தார். அதற்கு மூன்று பேர் விண்ணபித்திருந்தார்கள்.

முதலில் விண்ணப்பித்தவருக்கு மேக்ஸ் ஆர்ட் முன்னுரிமை அளித்து அழைத்தார்.

''நாம் ஒரு கரடுமுரடான மலைப் பகுதியில் சென்று கொண்டிருக்கிறோம். அது 300 அடி உயர முள்ள பெரிய மலை. அதில் செங்குந்தாகப் பயணம் செய்து உச்சியை அடைகிறோம். அந்த மலை மேடு முடிவதற்கு இன்னும் 4 அடி தூரம் இருக்கும்போது வண்டியை நிறுத்தி நான்கடி கடந்தால் பெரிய பாதாளம். இதற்கு மேல் உங்களுக்கு இந்த வண்டியை நெருக்கமாக முன் னோக்கி ஓட்டக் கூடிய திறமை இருக்கிறதா?'' என்று கேட்டார்.

அவரும் ''ஓ என்னால் மூன்று அடி தூரத்திற்குப் பாதாளத்தை நோக்கி நெருக்கமாக ஓட்டிச் செல்ல முடியும்'' என்றார்.

இரண்டாமவரை அழைத்து மேக்ஸ் ஆர்ட் அதே கேள்வியைக் கேட்டார்.

''அவர், என்னால் மூன்றரை அடி தூரத்திற்குப் பாதாளத்தை நோக்கி நெருக் கமாக ஓட்ட முடியும்'' என்றார்.

மூன்றாமவரிடம் அதே கேள்வியைக் கேட்க,

''என்னால் முடியாது'' என்று பதிலளித்தார்.

''அது ஆபத்தான பாதையாக இருந்தால் வண் டியை ஓட்டி ஆபத்தைச் சந்திக்க நான் தயாராக இல்லை'' என்று கூறினார்.

மேக்ஸ் ஆர்ட் முதல் இருவரை யும் அனுப்பிவிட்டு மூன் றாவதாக ஆபத்தைச் சந் திக்ப் பிடிக்காது என்று பதிலளித்த நபரை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார்.

''தம்பி, யதார்த்தம் வேறு, ரிஸ்க் எடுப்பது என்பது வேறு. வாழ்க்கையில் ரிஸ்க் எடுக்க வேண்டிய விஷயத்திற்கு எடுக் கலாம். வீணான விஷயத்திற்கு ரிஸ்க் எடுத்தால் ஆபத்தைத்தான் சந்திக்க நேரிடும். உன்னுடைய யதார்த்தமான பதில் எனக்குப் பிடித்திருந்தது. அதனால்தான் உன்னை வேலைக்கு அமர்த்து கிறேன்'' என்றார் மேக்ஸ் ஆர்ட்.

*இன்டர்வியூக்களில் உங்களை ரொம்பவும் ஸ்மார்ட்டாகக் காட்டிக்கொள்ளாதீர்கள். எந்த முதலாளியும் அதை விரும்பமாட்டார்.

சுகி.சிவம்.

# நூரெம்பெர்க் விசாரணையிலே!



முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நாஜி ஹிட்லர் ஜேர்மனியின் முக்கியமான 25 போர்க் குற்றவாளிகள் குற்றஞ்சாட்டப்பட்டு நூரெம் பெர்க் நகரில் நடந்த விசாரணையில் பின்வரும் உண்மைகள் மெய்ப்பிக்கப்பட்டு ஆவண ஆதாரங் கள் காட்டப்பட்டன.

ஜேர்மன் நாஜிகள் தொடக்கிய இரண்டாம் உலகப்போரில் 5கோடி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் இராணுவப்படையினர் 1கோடியே 71லட்சம் 20ஆயிரம் பேர். நாஜி சித்திரவதை முகாங்களில் 90லட்சம் பேர் கொல்லப்பட்டனர். கூட்டம் கூட்ட மாகக் குடிமக்களை சுட்டுத்தள்ளியதில் 41லட் சத்து 88ஆயிரம் பேர் மாண்டனர்.

சோவியத் யூனியனில் மட்டும் 1700 நகரங்கள், 70ஆயிரத்துக்கு மேலான கிராமங்கள், 32ஆயிரம் தொழிற்சாலைகள், 1லட்சத்து 27ஆயிரம் பள் ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள் நாசமாக்கப்பட்டன. பிரான்ஸில் 10லட்சம் வீடுகளும் 5ஆயிரம் கிலோ மீற்றர் ரயில் தண்டவாளங் களும் நாசமாக்கப்பட்டன. 21903கலைப் பொருள்கள் மேற்கு நாடுகளிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டன.

இவை நாஜிகளின் குற்றப் பட்டியலிலேயுள்ள ஒருசில சேதிகள்தான்.

# கிழவி கிழவிதான்



ஔவைப்பாட்டி, அதிகம் நடந்த களைப்பில் ஒரு கோயிலில் கால் நீட்டிப்படுத்தாள். கால் நீட்டிய திசையில் காலகாலனான சிவபெருமான் சந்நிதி இருந்தது. பதறிப்போன பக்தர் ஒருவர் ''அபசாரம்! அபசாரம்! சிவன் இருக்கும் திசை நோக்கிக் கால் நீட்டலாமா?'' என்று கத்தினார். நிதானமாக அவரைப் பார்த்து, ''சிவபெருமான் இல்லாத திசை எது என்று சொல், அந்தப் பக்கமாகக் காலை நீட்டிக் கொள்கிறேன்''. என்று அசராமல் அறிவித்தாள் ஔவைக்கிழவி.

நெற்றியைக் காயப்படுத்துவதைவிட முதுகை வளைத்துச் செல்வது நல்லது.

- ஹங்கேரியப் பொன்மொழி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 722 எம்.பிக்கள் உள்ள ஜப்பானில் 20 பேர் மாத்திரமே அமைச்சர்கள்!

**இலங்கை மற்றும் ஜப்பான் அரசுகளின் ஏற்பாட்டில் 'சமாதான முன்னெடுப்பு பயணம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் சமீபத்தில் ஜப்பானுக்கு ஒருவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந் தனர். அவர்களுள் ஒருவரான 'உதயனின்' சகோதரப்பத்திரிகையான 'சுடர்ஒளி' யின் உதவி ஆசிரியர் செ.அற்புதன் தமது அனுபவத்தை இங்கு தொடராகப் பகிர்ந்து கொள்கிறார்.**

பகுதி 4

அங்கு வந்தால் நான் அப்படித்தான் சாப்பிடுவேன்'' என்று சிரித்தபடி கூறிய புகுயாமா, சந்தர்ப்பம் கிடைத்தால் மீண்டும் ஜப்பானுக்கு வாருங்கள் என்று கூறி வழியனுப்பினார்.

**நாடாளுமன்றம் (Diet)**

ஜப்பானின் நாடாளுமன்றத்துக்கும் (Diet) சென்றோம். அங்கு நாடாளுமன்றம் தொடர்பாக எங்களுக்கு விளக்கமளிப்பதற்காக வாசலில் காத்திருந்தார் அங்கு பணிபுரியும் அதிகாரியான யொஷிமிற்சு ஒஷிகோ (Yoshimitsu Oshigoc). பிரமாண்டமான பெரிய வளாகத்துக்குள் பழமையான, ஆனால் அழகான மாடிக்கட்டடம் அது.

''இங்கு கண்ட இடங்களில் எல்லாம் போட்டோ எடுப்பதும், வீடியோ எடுப்பதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் எந்தெந்த இடங்களில் படம் எடுக்கலாம் என்று நான் சொல்கிறேன். அங்கு மட்டும் எடுங்கள்'' என்ற நிபந்தனையுடன் உள்ளே அழைத்துப் போனார் ஒஷிகோ. சபை அமர்வுகள் நடைபெறும் இடத்துக்கு அழைத்துச்சென்ற அவர் பார்வையாளர் கலரியில் எங்களை அமர வைத்து விளக்கம் அளித்தார். ''இந்தக் கட்டடத்தை அமைக்கும் பணி 1920 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதனை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கு 20 வருடங்கள் எடுத்தன. இதனை எந்த வடிவத்தில் அமைப்பது என்பது குறித்து ஜப்பானிய மக்களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. மக்களால் வரைந்து அனுப்பப்பட்ட ஏராளமான படங்களிலிருந்துதான் இந்த வடிவம் தேர்ந்தெடுக்கப்பட்டது'' என்று நாடாளுமன்றக் கட்டடத்தின் வரலாற்றைக் கூறி முடித்தார் அவர்.

அரைவட்ட வடிவத்தில் கதிரைகள் அடுக்கப்பட்டுள்ளன. வலதுபுறம் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடதுபுறம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. நடுவில் சற்றுப் பெரிய கதிரை ஒன்று உள்ளது. அது சபாநாயகரின் ஆசனம். சபாநாயகருக்கு அருகில் உப சபாநாயகருக்கும் அவர்களுக்கு பக்கவாட்டில் இரு புறமும் பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கும், அமைச்சு செயலாளர்களுக்கும் கதிரைகள் போடப்பட்டுள்ளன. முதலாவது பல்கனியில் மேல்சபை உறுப்பினர்களுக்கு (கவுன்ஸிலர்கள்) ஆசனங்கள் உள்ளன. ஊடகவியலாளர்கள், பார்வையாளர்கள், சர்வதேச ராஜதந்திரிகள் ஆகியோருக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சபாநாயகரின் ஆசனத்துக்கு மேலாக - சற்று உயரத்தில் - பெரியளவிலான பல்கனி ஒன்று உள்ளது. அதில் பிரமாண்டமான கதிரை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது மன்னருக்குரியது. (ஜப்பானிய மன்னரைப் பற்றிப் பின்னர் பார்ப்போம்.)

சபை அமர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அதனைப் பார்ப்பதற்காக மன்னர் அங்கு வந்தால் இந்த இடத்தில்தான் உட்கார்ந்திருப்பார். ஆனால் மன்னர் அப்படி வருவது மிகக்குறைவு.எப்பவாவது ஒருதடவை - அவர் அங்கு வந்தால் உறுப்பினர்கள் அனைவரும் கைதட்டி ஆரவாரத்துடன் அவரை வரவேற்பார்கள்.ஒருசில நிமிடங்கள் மன்னர் உரையாற்றுவார். அதுவும் அரசியல் விடயங்கள் எதனையும் அவர் பேசுவது கிடையாது. சும்மா பொது விடயங்கள் பற்றிப் பேசிவிட்டுச் சென்றுவிடுவார். மன்னரின் இருப்பிடத்துக்கு சற்றுத் தொலைவில் - இருபுறமும் - சிறிய பல்கனிகள் உள்ளன.

அவற்றில் ஒன்று அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சபைக்கு வந்தால் அமர்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட பார்வையாளர் கலரி, ஊடகவியலாளர் கலரி என்று வழமையான இடங்கள் அங்கும் இருக்கின்றன.



ஜப்பானிய நாடாளுமன்றக் கட்டடத்தின் முகப்புத் தோற்றம்

**கட்சி சாராத அமைச்சர்கள்**

ஜப்பானில் கீழ்சபை (Upper house) செனட் சபை (Lower house) என்று இருசபைகள் உள்ளன. கீழ்சபை 4 வருட பதவிக்காலத்தைக் கொண்டது. மேல்சபை 6 வருட பதவிக்காலத்தைக் உடையது. இரு சபைகளுக்குமே ஏறக்குறைய சம அளவான அதிகாரங்கள் இருக்கின்றன. இருந்தாலும் ஒப்பீட்டளவில் கீழ்சபை சுற்று அதிகாரம் உடையது. கீழ்சபையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் கட்சி நாட்டில் ஆட்சியில் அமரும். மொத்தமாக அங்கு 20 அமைச்சர்கள் தான் உள்ளனர். இத்தனை உறுப்பினர்களைக் கொண்ட இவ்வளவு பெரிய நாட்டில் வெறும் 20 அமைச்சர்கள்தான். ஆட்சி அமைக்கத் தகுதியான கட்சி, தங்களுக்குள் ஒருவரைப் பிரதமராக நியமிக்கும். அந்தப் பிரதமர்தான் அமைச்சர்களைத் தெரிவு செய்கிறார். அமைச்சர்களில் அரைவாசிக்கும் சற்றும் கூடுதலானவர்கள் ஆளும்கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர்கள். ஏனையவர்கள் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் பொதுச் சேவை செய்பவர்கள், விஞ்ஞான ரீதியான துறைகளில் சிறப்பாகப் பணி செய்பவர்கள். இவ்வாறு அரசியல் கட்சி சாராத பொது சமூகப் பெரியவர்களையும் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளும் முறை பெரும்பாலும் ஏனைய நாடுகளை விட வித்தியாசமானது. பிரதிநிதிகள் சபையில் 480 உறுப்பினர்களும், கீழ் சபையில் 242 உறுப்பினர்களும் உள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் மன்னருக்கென பிரத்தியேக மண்டபமும் அறையும் உண்டு. புதிய அரசுகளின் பதவியேற்பு வைபவம் போன்ற மிகவும் முக்கியமான தருணங்களில் மாத்திரம் மன்னர் அங்கு வருவார். அப்படி வரும் போது அவருக்கு செங்கம்பள வரவேற்பு உட்பட சகல வகையான கௌரவங்களும் வழங்கப்படுவது வழக்கம்.

''விசேட நாட்களில் மன்னர் இங்கு வருவார். அப்போது அவரது வருகைக்காக கீழ்சபை, மேல்சபை பிரதிநிதிகள் மற்றும் பிரபலங்கள் எல்லோரும் வரிசையாக காத்திருப்பார்கள். மன்னரும் அவரது குடும்பத்தினரும் செங்கம்பள வரவேற்புடன் நேரடியாக தமது அறைக்கு வருவார்கள். அங்கு மன்னர் சில நிமிடங்கள் இருந்து இளைப்பாறிவிட்டுச் சென்றுவிடுவார். அந்த ஒரு சில நிமிடங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஏனைய பணியாளர்கள் அத்தனைபேருமே டென்ஷனில் நடுங்கிப் போய்விடுவார்கள்.

அவ்வளவுக்கு எல்லோருமே மன்னர் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார்கள்'' என்று கூறினார் யொஷிமிற்சு.

நாடாளுமன்றக் கட்டடத்தின் பிரதான வாயில் ஊடாக உள்ளே நுழைந்ததும் சதுர வடிவிலான மண்டபம் ஒன்று இருக்கிறது. அந்த மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் சுமார் நான்கு அடி உயரத்துக்கு பீடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மூன்று பீடங்களில் மேல் கருங்கல்லில் செதுக்கப்பட்ட மூவரின் சிலைகள் உள்ளன. ஒருவர் ஜப்பானின் முதலாவது பிரதமர் கிரோபிமி (1841 - 1909) மற்றையவரின் பெயர் ஒக்குமா. இவர் ஜப்பானில் முதன்முதலாக பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியவர். அந்தப் பல்கலைக்கழகத்தின் பெயர் வசேடா (waseda). மூன்றாவது நபர் சிகாகாகி. இவர்தானாம் ஜப்பானின் அரசமைப்பை வரைந்து ஜனநாயகத்தை நிலைபெறச் செய்தவர்.

''அதுசரி, அறையின் நான்கு மூலைகளிலும் பீடங்களை அமைத்து, மூன்று மூலைகளில் மட்டும் சிலைகளை அமைத்துவிட்டு ஒன்றை வெற்றிடமாக வைத்திருக்கிறீர்களே...! என்ன காரணம்...?'' எங்களுடைய கேள்விக்கு ஜப்பானியர்களிடமிருந்து வித்தியாசமான பதில் வந்தது. ''மேற்படி மூவரும் ஜப்பானை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்காக அளப்பரிய பணி செய்தவர்கள். இன்னும் எத்தனையோ பேர் ஜப்பானின் வளர்ச்சியில் முக்கிய பங்காளிகளாக இருந்தாலும் இந்த மூவரும் செய்த அளவுக்கு - அவர்களோடு சமாந்தரமாக வைத்து மதிப்பளிக்கும் அளவுக்கு - எவரும் செயற்படவில்லை. அதனால்தான் நான்காவது மூலையில் ஓர் இடம் வெற்றிடமாகவே இருக்கிறது'' என்கிறார்கள் அங்கிருந்த ஜப்பானிய நாடாளுமன்ற அதிகாரிகள்.

''அதுமட்டுமல்ல, இன்னொரு காரணமும் இருக்கிறது. நான்காவது மூலையில் இருக்கும் வெற்றிடத்தைப் பார்க்கின்ற போது அங்கு சிலை வைக்கப்பட்டிருக்கின்ற ஏனையோரைப் போல தாங்களும் ஜப்பானின் வளர்ச்சிக்கும் ஜனநாயகத்தை பாதுகாக்கவும் ஏதாவது செய்தால் இம்மூவரையும் போல நான்காவது வெற்றிடத்தில் இடம் பிடிக்கலாம் என்ற எண்ணம் ஒவ்வொருவரிடமும் ஏற்படும்'' என்று கூறினார் அங்கு நின்ற அதிகாரி ஒருவர்.

ஐப்பானிய அமைச்சர்கள் இருவர் தவறுசெய்து விட்டார்கள். நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கடும் அமளிதுமளி. எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஆளுங்கட்சி மீது பாய்கிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினரிடம் வாக்குவாதம் செய்யவில்லை. மாறாக, அவர்கள் மன்னிப்புக் கோருகிறார்கள். அதற்குப்.பிறகு பிரதமர் தலைமையில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்படுகிறது. அந்த மாநாட்டிலே பிரதமரும் சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களும் கலந்துகொண்டு தங்கள் தவறுக்காக நாட்டு மக்களிடமும் எதிரணி எம்.பிக்களிடமும் பகிரங்கமாக மன்னிப்புப் கோரியதுடன், குறித்த தவறு எப்படி நேர்ந்தது என்றும் விளக்கினார்கள். இனிமேல் இப்படியொரு தவறு நடக்கவே நடக்காது என்று பிரதமரும் அமைச்சர்களும் அடித்துக் கூறுகின்றார்கள்.

அது சரி.... அந்த இரு அமைச்சர்களும் அப்படி என்ன தவறு செய்துவிட்டார்கள்....? அரச பணத்தைச் சூறையாடினார்களா....? பொதுச்சொத்துகளைத் துஷ்பிரயோகம் செய்துவிட்டார்களா....? ஊடகங்களை மிரட்டினார்களா....? கடத்தல்கள், கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுப் போனார்களா...? அப்படி ஒன்றுமேயில்லை....!

அப்படியென்றால் என்ன நடந்தது? நாட்டு மக்களிடம் அவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக்கோர வேண்டியளவுக்கு அவர்கள் செய்த தவறுதான் என்ன...? நாடாளுமன்றத் திலே 'பட்ஜெட்', கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கின்ற காலப் பகுதியில், ஒருநாள் அந்த அமைச்சர்கள் இருவரும் நாடாளுமன்றத்துக்கு குறித்த நேரத்தை விட 5 நிமிடங்கள் தாமதமாக வந்துவிட்டார்கள். வெறும் ஐந்து நிமிடங்கள். இதுதான் அவர்கள் செய்த குற்றம். இரண்டு அமைச்சர்கள் நாடாளுமன்றத்துக்கு ஐந்து நிமிடங்கள் தாமதமாக வந்தமைக்காகப் பிரதமரும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகிறார்கள் என்றால் நம்பமுடிகிறதா? ஆனால் ஜப்பானில் நடந்த உண்மைச் சம்பவம் இது....!

''அட, வெறும் ஐந்து நிமிடங்கள் தாமதமாக வந்ததற்காகவா இத்தனை கலவரம்? ''என்று எமது மொழி பெயர்ப்பாளர் ஒகாவிடம் கேட்டபோது, அவர் சொன்னார்,''இந்த அமைச்சர்கள் வேறு ஏதாவது தவறு செய்திருந்தால் கூடப் பரவாயில்லை. அவர்கள் நாடாளு மன்றத்துக்கு ஐந்து நிமிடங்கள் தாமதமாக சென்றுவிட்டார்கள். அதுதான் பிரச்சினை.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவரை வற்றா நீர் நிலையும் நவசைலேஸ்வரமும்



(சென்றவாரத் தொடர்ச்சி)

நிலாவரை வற்றா நீர்நிலை தொடர்பாக கர்ணபரம்பரைக் கதைகள் பல கூறப்பட்ட போதிலும் இந்த நீர்நிலையின் ஆழம் தொடர்பாக உறுதியான முடிவு எட்டப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. ஆழம் 382 அடிக்கு மேற்பட்டது என்பது ஒருவகையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது நிலாவரைக்கு வடக்குப் புறமாக அமைந்துள்ளது நவக்கிரிக் கிராமம். நவக்கிரி, நவசைலேஸ்வரம் நிலாவரை என்றும் பதங்களில் கிரி, சைலம்,வரை போன்ற பதங்கள் 'மலை'யைக் குறிப்பதாக அமைந்துள்ள போதிலும் இங்கு மலைகள் இருந்தது தொடர்பான அடையாளங்கள் எதுவும் காணப்படவில்லை.

நிலாவரை வற்றா நீர்நிலைக்கும் யாழ்ப்பாண சுண்ணக்கல் நிலக்கீழ் நிலவுருவங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாடு மயோசின் காலச் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. இந்தக் கற்களுக்கு நீர் உட்புகவிடும் தன்மை உண்டு. மழைநீர் உட்கசிந்து பாறை நீராகத் தேங்கி நிற்கும்.

மழைநீர் வளியினூடாக வரும்போது அதனுடன் காபனீரொட்சைட் $(Co_2)$ கலக்கின்றது. அந்தநிலையில் மழைநீர் காபோனிக் அமிலமாக $(H_2Co_2)$ மாறுகின்றது. இங்குள்ள மயோசின் சுண்ணக்கற்கள் கல்சியம் காபனேற் $(C_2Co_2)$ என்ற இராசயனப் பதார்த்தை உடையனவாகும்.

கல்சியம் காபனேற்றைக் காபோனிக் அமிலம் கரைத்துவிடக் கூடியது. இதற்காரணமாக சுண்ணக்கற் பாறைகளைக் கரைத்து நீர் உட்செல்கின்றது. பாறைகள் கரையும்போது சில இடங்களில் தரையின் கீழ் பெரிய பள்ளங்கள் உருவாகிவிடுகின்றன. இத்தகைய பள்ளங்கள் நீர்நிலைகளாகவும் பெரும் குகைகளாகவும் விளங்கக்கூடும். இந்தவகையில்தான் நிலாவரை, பொக்கணை, அளவெட்டி, மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள நீர்நிலைகளும் தொண்டைமானாறு கெருடாவில் குகையும் தோன்றியது என்பது விஞ்ஞான ரீதியிலான புவியியல் ஆய்வு உண்மைகளாகும்.

நிலாவரை வற்றா நீர்நிலை 52 அடி நீளம் 37 அடி அகலம் கொண்ட நீள்சதுர வடிவில் நிலமட்டத்தில் இருந்து 14 அடி ஆழ்த்தில் நீர்கொண்டதாக உள்ளது. ஆரம்பகாலத்தில் இருந்து நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ் இருந்துவந்தது.


சுற்றிவர சிமெந்துக்கட்டு மற்றும் பாதுகாப்புச்சுவர் கொண்டதாகவும் தெளிந்த நீர் ஆழந்தெரியாத கருநீலக்க...ல் போல காணப்படுவது காண்பேரின் ஆவலைத் தூண்டி நிற்கின்றது.

நிலாவரை வற்றா நீர்நிலையில் இருந்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை வாழைப்பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறையில் இருந்துவந்தது. இந்த நீர்ப்பாசன வாய்க்கால் அமைப்புக்களை இராசவீதியின் கிழக்குப் புறத்தின் வீதியோரமாக சிறுப்பிட்டி மேற்கு வரையும், சுன்னாகம் - புத்தூர் வீதியில் வடக்குப் புற வீதியோரமாக அச்செழு வரையும் அமைந்திருப்பதை இன்றும் காணலாம். இது சிமெந்தால் அமைக்கப்பட்ட 3 அடி ஆழம் 3அடி அகலம் கொண்டது.

பயிர்ச்செய்கைக்கான இந்த திட்டமிடப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம் வலி.கிழக்குப் பிரதேசத்துக்கு தனிப்பெருமை சேர்க்கக் கூடியதாகவும்; யாழ்.குடாநாட்டில் உள்ள முதலாவது பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசனத் திட்டமாகவும் அமைந்திருந்துள்ளது. நீர்ப்பாசன வேலைத்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட நீர் வாழைச் செய்கைக்கு பயன்படுத்தப்பட்டதோடு எஞ்சிய நீர் சிறுப்பிட்டி மேற்கில் உள்ள 'கிரியப்பை' குளத்தில் சேர்க்கப்பட்டு குளத்தில் இருந்து நெல் வயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தக் காலப்பகுதியில் வாழைச் செய்கையாளர்கள் பெரும்பயன் அடைந்துவந்தனர்.

வாழைச்செய்கைக்கான நீர்ப்பாசன வேலைத்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 1949ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கி 1990 ஆம் ஆண்டு வரை சீரான முறையில் நடைபெற்று வந்தன. ஆரம்ப காலத்தில் டீசல் இயந்திரங்களின் துணையுடன் 8 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் நீர் இறைக்கப்பட்டது. பின் மின்சார மோட்டர்களைப் பயன்படுத்தி நீர் இறைக்கப்பட்டது. காலையும் மாலையும் தலா மூன்று மணி நேரம் வரை நீர் இறைக்கப்பட்டது.

(தொடரும்)



# புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

'தலைவர் செல்வம்' பஞ்சாயத்து தலைவர் போன்று கிராமத்துக்குத் தலைமைதாங்கியதோடு உள்ளூர் பிணக்குக்களையும் பிரச்சினைகளையும் பஞ்சாயத்து முறையில் தீர்த்துவைத்ததும் செல்வத்தின் ஆலோசனைகளை வயது வேறுபாடு இன்றி சகலரும் ஏற்றுக்கொண்டு கட்டுப்பாட்டோடு நடந்துகொள்வதும் இன்றும் கண்டுகொள்ளக் கூடியது. இத்தகைய ஓர் அமைப்பு ஒழுங்குமுறைகளை யாழ்.மாவட்டத்தில் எந்தக் கிராமத்திலும் கண்டுகொள்ள முடியாது.

இன்று கலைமதி சனசமூக நிலையம், மக்கள் பொது மண்டபம்,கலைமதி விளையாட்டுக்கழகம், கலைமதி சிக்கனக் கூட்டுறவுச் சங்கம், கலைமதி பாலர் முன்பள்ளி, கலைமதி கிராம அபிவிருத்திச் சங்கம், கலைமதி கல்வி அபிவிருத்திக்கழகம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் கலைமதி என்ற பெயருடன் இணைந்து செயற்படும் கட்டமைப்பும் மிகப்பெரிய விளையாட்டு மைதானமும் யாழ்.மாவட்டத்திற்கே முன்மாதிரியாக எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட கிராமத்தின் அங்க அடையாளங்கள் முழுமையாக மாற்றப்பட்டு வேம்பிராய்க் கிராமம் என இனங்காண முடியாதவகையில் கலைமதிக் கிராமம் மாற்றமடைந்துள்ளது.

கலைமதிக் கிராமத்தின் சமகால பொருளாதார வலுவூட்டலுக்கு இலங்கை வங்கியின் அச்சுவேலிக்கிளை எல்லா வகையிலும் உதவி வருகின்றது. 2008ஆம் ஆண்டு கலைமதிக் கிராமத்தை அச்சுவேலி இலங்கை வங்கி பொறுப்பேற்று 'இலங்கை வங்கி எழுச்சிக் கிராமமாக அறிமுகம் செய்தது'. இந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு இலங்கை வங்கி மேலிடம் சகல மட்டத்திலும் உதவுவதற்கு வழங்கிய முன் அனுமதியின் பேரில் இலங்கை வங்கி அச்சுவேலி கிளையின் முகாமையாளர் த.புவனேந்திரன் சகல மட்டத்திலும் உதவி வருகின்றார்.

இது தொடர்பாக கா.கதிர்காமநாதன் கருத்துத் தெரிவிக்கையில், "கலைமதிக் கிராமத்தின் சகல மட்டத்திலும் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் பொருளாதார வலுவூட்டல் இளையோடி உள்ளது. விவசாயக்கடன், சுயதொழில் முயற்சி, இலகுகடன், வடக்கின் வசந்தம் அபிவிருத்திக்கடன் , பால் உற்பத்தி பசுமாடு வளர்ப்புக் கடன், கல்வி அபிவிருத்திக்கான உதவி, கிராமியக் குழுக் கடன் திட்டம்.

குடியிருப்புக் காணி கொள்வனவுக்கான கடன் உதவி என எல்லா நிலையில் பல மில்லியன் ரூபா இலகுகடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளைக்கு கிராமம் பெரும் கடமைப்பாட்டிற்கு உரியதாக உள்ளது. இந்த வகையில் எமது கிராமம் இலங்கை வங்கி நிர்வாகத்துக்கு நன்றி கூறி மகிழ்கின்றது எனக் கூறிய அவர் ஹற்றன் நஷனல் வங்கியும் 50 விவசாயிகளுக்கு விவசாயக்கடன் உதவியை வழங்கியருப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், 425 குடும்பங்களைக் கொண்ட எமது கிராமத்தில் தனித்துவமானதாக [illegible] கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையத்தை செயற்பட வைப்பதற்கு எடுத்த முயற்சிகள் இதுவரை பலன்தரவில்லை. எதிர்காலத்தில் மேற்கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார்.

தற்போதைய யாழ்ப்பாணச் சமூகச் சூழலில் காணப்படும் கலாசாரச் சீர்குலைவு, பாதுகாப்பு இன்மை, கிராமத்தின் விழிப்புணர்வு, செயற்றிட்ட முன்னெடுப்பு, சிறுவர்களுக்கான கட்டாயக்கல்வி முன்னெடுப்பு என்பனவற்றை உரியமுறையில் முன்னெடுப்பதற்கு 50 இளைஞர்களைக் கொண்ட அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இளைஞர் அணி திட்டமிட்ட முறையில் தமது பணியை மேற்கொண்டு வருகின்றது.

ஒரு காலகட்டத்தில் 90 வீதத்துக்குக் குறையாமல் இருந்த மதுப்பழக்கம் தற்பொழுது 20 வீதத்துக்கு குறைந்ததாக வந்துள்ளது. மதுப்பழக்கம் இளைஞர் மட்டத்தில் இல்லாமல் அருகி வருவதால் அது மேலும் குறையலாம்.

கிராமங்களின் அபிவிருத்தியும் மறுமலர்ச்சியும் நாட்டின் அபிவிருத்தியாகவும் மறுமலர்ச்சியாகவும் பரிணமிப்பதால் எல்லாக் கிராமங்களும் இந்த வகையில் திட்டமிட்ட முறையில் குறுகியகால வேலைத் திட்டங்களின் அடிப்படையில் மாற்றத்துக்கு உள்ளாக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

(முற்றும்)



தொகுப்பு : ஞானஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தில் பன்முகத்தன்மை, அதிகாரப் பகிர்வு அவசியம்

### ஐ.நாவுக்கான முன்னாள் இலங்கைப் பிரதிநிதி கருத்து

கொழும்பு, மே 06

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குப் பன்முகத் தன்மை, அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையிலான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தயான் ஜயதிலக வலியுறுத்தி உள்ளார்.

அவர் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைவரத்தை விளங்கப்படுத்தி, சிங்கப்பூரின் 'த ஸ்ரெய்ட் ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு வலியுறுத்தி உள்ளார்.

அவர் அக்கட்டுரையில் முக்கியமாக மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இலகுவாக அடையும் நிலையில் உள்ளது.

எனவே, அரசமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்து தமிழர் பிரச்சினைக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்வு காணமுடியும்.

மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அமைச்சரவை மிகவும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டில் இன ஐக்கியத்தையும், சமூக நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை இது தருகின்றது.

தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, மனித உரிமைகள் நிலை ஆகிய விவகாரங்கள் வெளிநாடுகளுடனான இலங்கையின் இராஜதந்திர உறவுகளைத் தீர்மானிக்கின்றன. இந்தியாவுடனான இலங்கையின் உறவு தமிழர் பிரச்சினைக் கான தீர்வில் தங்கி உள்ளது. அதேபோல மேலைத்தேய நாடுகளுடனான இலங்கையின் உறவு மனித உரிமைகள் நிலைவரத்தில் தங்கி உள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# மன்னாரில் எண்ணெய் ஆய்வு 2011 இல் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, மே 06

மன்னார்க் கடற்பரப்பில் எண்ணெய் ஆய்வு நடவடிக்கைகள் அடுத்த வருடம் மே மாதமளவில் ஆரம்பிக்கப்படும் - என்று பெற்றோலியவள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிக்கிறார்.

தற்போது மேற்கொள்ளப்படும் ஆரம்பக்கட்ட ஆய்வு நடவடிக்கைகள் அடுத்த வருடம் பூர்த்தியடையுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த ஆண்டு மே மாதம் எண்ணெய் ஆய்வு நடவடிக்கைகளை மன்னார்க் கடற்பரப்பில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இலங்கையில் வடபகுதி காவேரி, மன்னார் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மூன்று கடற்பரப்புகளில் எண்ணெய் வளம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட அமைச்சர், அவற்றுள் மன்னார்க் கடற்பரப்பு 8 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு சர்வதேச நடைமுறைகளுக்கு அமைய ஆரம்பக்கட்ட ஆய்வுகள் நடத்தப்படுகின்றன எனக் கூறினார்.

இந்த ஆரம்பக்கட்ட ஆய்வுகளின் பின்னர் 2011 மே மாதமளவில் எண்ணெய் வள ஆய்வுக்காகக் கடலுக்கடியில் தோண்டப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

# ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களம்?

கொழும்பு, மே 05

சட்ட மா அதிபர் திணைக்களத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்ட மா அதிபர் திணைக்களத்தை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானம் குறித்து தமக்கு இதுவரையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சட்ட மா அதிபர் திணைக்களம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட உள்ளது என சில வதந்திகள் வெளியாகியிருக்கின்றன எனவும், அவ்வாறு மாற்றம் கொண்டு வரப்பட்டாலும் திணைக்களத்தின் கட்டமைப்பு பொறிமுறையில் மாற்றங்கள் ஏற்படா எனவும் நிர்வாக நடவடிக்கைகள் மட்டுமே மாற்றம் கொண்டு வரப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சட்ட மா அதிபர் சுயாதீனமான முறையில் தீர்மானங்களை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. எனவேதான், தற்போது நடைமுறையில் காணப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனக் கோருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட படகுகள் மீனவரிடம் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின் போது கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகள் மற்றும் படகு இயந்திரங்கள் என்பன மீண்டும் அந்தப் பிரதேச மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கருகில் கடற்கரையில் வைத்தே இந்தப் படகுகள் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இவற்றின் பெறுமதி சுமார் 3 கோடியே 50 லட்சம் ரூபா என்று முல்லைத்தீவிலுள்ள படைகளின் பிரதம கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் அதுல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியின் உத்தரவுக்கமைய தான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் எனவும் 100 படகுகளும் 160 படகு இயந்திரங்களும் இவ்வாறு வழங்கப்பட்டன எனவும் அவர் மேலும் கூறினார்.

# திரட்டு நிதியத்திலிருந்து அரச செலவிற்காக 4,4014 கோடி ரூபா ஜனாதிபதியால் ஒதுக்கீடு

### சபையில் ஐ.தே.க. கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 06

அரசின் மூன்று மாதச் செலவிற்காக 44 ஆயிரத்து 14 கோடி ரூபாவைத் திரட்டு நிதியத்திலிருந்து ஒதுக்குவதற்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளார். இதுதொடர்பாக ஜனாதிபதி நடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் ஏற்படும் அரச செலவிற்கே இந்த நிதி ஒதுக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் காலை சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய போது சபாநாயகர் இதை அறிவித்தார். இதற்கு ஐக்கிய தேசிய கட்சி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

நிதி ஒதுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது. ஜனாதிபதிக்கல்ல. ஜனாதிபதியின் இந்தச் செயற்பாட்டின் மூலம் நாடாளுமன்ற அதிகாரம் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது என்று ஐ.தே.க. எம்.பி தயாசிறி ஜயசேகர கூறினார்.

நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு அது நிறைவேற்றப்படாமல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் இவ்வாறு ஜனாதிபதியால் நிதி ஒதுக்க முடியும். அல்லது நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையில் தேர்தல் ஒன்றுக்காக இவ்வாறு நிதி ஒதுக்க முடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் ஜனாதிபதியால் நிதி ஒதுக்கமுடியாது என்று ஐ.தே.க. எம்.பி. விஜயதாஸ ராஜபக்ஷ கூறினார்.

இதை ஏற்க மறுத்த சபை முதல்வர் நிமால் ஸ்ரீபாலடி சில்வா, இது சட்டமா அதிபரின் முழுமையான ஆலோசனையின் படியே செய்யப்பட்டுள்ளது - என் றார்.

எனினும், இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தால் தீர்க்க முடியும் என்றும் சபாநாயகர் இதுதொடர்பில் தீர்ப்புக் கூற வேண்டும் என்று விஜயதாஸ கூறினார்.

# மருந்துத் தட்டுப்பாட்டை உடன் நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சுகாதாரத் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மே 06

நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்புத் தெரிவிக்கிறது.

நோயாளர்கள் முறைப்பாடு செய்யுமளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது எனக் கூட்டமைப்பின் தலைவர் சமன் ரத்தினப்பிரிய குறிப்பிட்டார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, வைத்தியசாலைகளில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக ஆராய்வதற்காகச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்குவது குறித்தும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது என அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வைத்தியசாலைகளில் அவ்வப்போது மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டமை தொடர்பாகப் பதிவானபோதும் எதிர்காலத்தில் எவ்வித தட்டுப்பாடுமின்றி வைத்தியசாலை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டமொன்றைச் செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருந்துத் தட்டுப்பாடு தொடர்பான அறிக்கை யொன்றை நாளை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சர் விசேட குழுவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# ஊடகர் திஸ்ஸநாயகம் நாட்டிலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவாரா?

### தெளிவுபடுத்தக் கோருகிறது ஊடகர்களைப் பாதுகாக்கும் குழு

கொழும்பு, மே 06

ஊடகவியாலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்திற்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கிய நடவடிக்கையை ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழு வரவேற்றுள்ளது.

எனினும் அவரை விடுதலை செய்வதற்கு காரணமான விடயங்களை வெளியிடுவது முக்கியமானது என குழுவின் ஆசிய விவகாரங்களுக்கான இணைப்பாளர் பொப் வியோடிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த பொது மன்னிப்பின் கீழ் திஸ்ஸநாயகம் நாட்டில் இருந்து வெளியில் செல்லும் சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பது பற்றி தெளிவுப்படுத்த வேண்டும் எனவும் ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழு கேட்டுள்ளது.

இந்த பொது மன்னிப்பு தொடர்பில் திஸ்ஸநாயகத்தின் சட்டத்தரணிகள் இதுவரை தெளிவுப்படுத்தபடாததால், அது குறித்த மேலதிக தகவல்களை தமது குழு எதிர்பார்த்துள்ளது எனவும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, திஸ்ஸ நாயகத்திற்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டமை தொடர்பில் அமெரிக்கா மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை அரசு எடுத்த நடவடிக்கை பாராட்டத் தக்கதென இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

# பஸ்களில் பிச்சை எடுப்பதைத் தடுக்க பொலிஸாரின் ஒத்துழைப்புத் தேவை

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரிக்கை

பஸ்களில் பிச்சையெடுப்பது மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பவற்றைத் தடைசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை வெற்றிகரமாக அமுல்படுத்தப் பொலிசாரின் ஒத்துழைப்பு அவசியம் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்தத் திட்டம் நடைமுறையில் உள்ளபோதிலும் அது நூறு சதவீதம் வெற்றியளிக்கவில்லை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கையை உரியமுறையில் செயற்படுத்தினால் அது பயணிகளுக்குச் சௌகரியமாக இருக்குமென்றும் எனவே, பொலிஸாரின் உதவியைப் பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் இதுபற்றிக் கேட்டபோது, இந்த நடவடிக்கையில் பொலிஸார் தலையிடமுடியாத நிலையிருக்கிறது எனக் கூறினார்.

ஆனால் தனியார் [illegible] அல்லது உதவியாளர்களோ [illegible] போது அதுகுறித்து நடவடிக்கை எடுக்கமுடியுமென அவர் கூறினார்.

# கச்சாய் பிரதேச மின்விநியோகத்துக்கு மாதா கோயிலுக்கு அருகில் மின்மாற்றி

கச்சாய் பகுதி மக்களுக்கான 100 கேவி மின்மாற்றி மாதா கோயிலுக்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பொருத்தப்பட்டது.

ஏன்கனவே இவ்விடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றி சேதமாக்கப்பட்டதால் கொடிகாமம் பொலிஸ் நிலைய அருகில் வைக்கப்பட்டிருந்த மின்மாற்றி மூலம் [illegible]க்கு மின்விநியோகம் இது வரை வழங்கப்பட்டது.

கச்சாய் பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாதுகாப்பு காரணங்களால் வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த 21 மின்மாற்றிகளில் கைதடி, நாவற்குழி தவிர்ந்த ஏனைய இடங்களுக்கான மின்மாற்றிகள் பொருத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் தாயார் செய்த குற்றம்தான் என்ன?

பாகம் 2

அனலை நிதிஸ் ச. குமாரன்

**இக் கட்டுரை ஒரு வாரத்துக்கு முன்னர் எழுதப்பட்டது. அதன் பின்னர் தமிழக அரசு கடந்த இரண்டு மூன்று நாள்களுக்கு முன்னர் பெயருக்குச் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.**

ஆனால், பார்வதி அம்மாளை சிகிச்சைக்கு அனுமதிக்காமல் திருப்பி அனுப்பி விட்டனர். இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். பார்வதி அம்மாளுக்கு தமிழகத்தில் சிகிச்சை அளிக்கவும் அவர் வாழ்நாள் முழுவதும் தமிழகத்தில் தங்கியிருக்கவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.''

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியவை வருமாறு:

''விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் ஒரு பயணியாக வந்துள்ளாரே தவிர ஒரு முக்கிய அரசியல் பிரமுகராக அல்லர். இந்த விஷயம் பற்றி தனக்கு தெரிவிக்கவில்லை என்று தமிழக முதல்வர் கருணாநிதி குறைப்பட்டுக் கொள்வதில் அர்த்தமில்லை. சென்னை விமான நிலையத்தில் மத்திய மாநில அரசுகளின் புலனாய்வுத்துறையினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த தகவல் உடனடியாகத் தெரிந்திருக்கும். அப்படியிருக்க தனக்கு தெரியாது என்று முதல்வர் கருணாநிதி சொல்வது நம்பக்கூடிய தாக இல்லை. இந்திய அதிகாரிகள் மூலம் விசா பெற்றுத்தான் பார்வதி அம்மாள் சென்னை வந்திருக்கிறார். சென்னை விமான நிலையத்தில் தன்னை இறங்க விடமாட்டார்கள் என்று அவர் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அவரை இறங்க விடாமல் தடுத்தது இந்திய அரசுதான். ஆகவே இத் தகவல் தெரிந்தும் மௌனம் சாதித்துள்ளது தமிழக அரசு. ஆகவே தடை ஆணை விதித்த இந்திய அரசும் அதற்கு துணை போன முதல்வர் கருணாநிதியும்தான் மீண்டும் பார்வதி அம்மாள் சென்னைக்கு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அதற்குப் பதிலாக பார்வதி அம்மாள் கோரிக்கை வைத்தால் பரிசீலிப்போம் என்று சொல்வது என்ன நியாயம்? 2003ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டதற்கு இணங்க பிரபாகரனின் பெற்றோர்கள் மீண்டும் இந்தியாவுக்கு வர தடை விதித்துள்ளதாக சொல்லப்படுகிறது. அன்றைக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்த சூழ் நிலை வேறு இன்றைய நிலை வேறு. 2003ஆம் ஆண்டு பட்டியலை பல ஆண்டுகள் கழித்துதான் பரிசீலிக்க வேண்டும் என்பதில்லை. தமிழக அரசின் சார்பில் முதல்வர் கருணாநிதி இந்த தகவல் தனக்கு தெரிந்த உடனேயே இன்றைய சூழ்நிலையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்தப் பட்டியலை ரத்து செய்திருக்கலாம். ஏன் இதை இன்றுகூட செய்யவில்லை என்பதுதான் கேள்வி.''

### பா.ஜ.காவின் குற்றச்சாட்டு

சென்னை வந்த பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை திருப்பி அனுப்பியதற்கு மத்திய அரசின் தவறான உள்நோக்கமே காரணம் என்று பா.ஜ.க. குற்றஞ்சாட்டியுள்ளது. இது குறித்து அக்கட்சியின் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

'பார்வதி அம்மாளை பிரபாகரனின் தாயாராக பார்க்காமல் முறையான அனுமதி பெற்று மருத்துவ சிகிச்சை பெற வந்த 80 வயது மூதாட்டி என்ற முறையில் பார்த்தால் அவரைத் திருப்பி அனுப்பிய மத்திய அரசின் செயல் மனிதாபிமானமற்றது. பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்து பலர் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்: நாடாளுமன்றத்தைத் தாக்க சதி செய்த அப்சல் குரு மத்திய அரசால் விருந்தாளி போல் நடத்தப்படுகிறார். மும்பை தாக்குதலுக்குக் காரணமான கசாப்பிற்கு இன்று பல கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் கூட இங்கு ராஜபக்ஷ சகோதரர்களுக்கு மத்திய அரசால் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில் வயதானவர் என்ற முறையிலாவது பார்வதி அம்மாள் சிகிச்சை பெற மத்திய அரசு அனுமதி அளித்திருக்க வேண்டும். மத்திய அரசின் இந்தப் போக்கு ஒரு தவறான உள்நோக்கம் கொண்டதாகவே உள்ளது. மத்திய அரசின் இந்தப் பாரபட்சமான நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது. மத்திய அரசின் இந்த முடிவு தமிழக அரசுக்கோ முதல்வர் கருணாநிதிக்கோ தெரியாமல் இருக்க சாத்தியமில்லை. பார்வதி அம்மாள் தமிழகத்தில் இருந்தபோது பல அரசியல் கட்சித் தலைவர்கள் அவருக்கு ஆதரவாகவே இருந்தனர். இன்று ராஜபக்ஷவை திருப்திப்படுத் துவதற்காக எடுத்துள்ள முடிவு மனிதாபிமான மற்றது என்றுதான் கூற வேண்டும்.''

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் கூறியுள்ளவை வருமாறு: பார்வதி அம்மையார் திருப்பி அனுப்பப்பட்டதற்குக் காரணம் 2003 இல் அ.தி.மு.க. முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா மத்திய அரசுக்கு எழுதி பெற்றுக் கொண்ட கடிதம்தான் என்பதையும் அறிக்கையில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. பிரபாகரனின் தாயார் திருமதி பார்வதி அம்மாள் வேலுப்பிள்ளை அவர்கள் பக்கவாத நோயினால் தாக்குண்டு பெரிதும் உடல் நலம் பாதிக்கப்பட்டு இலங்கையிலிருந்து மலேஷியாவிற்குச் சென்று அங்கு சரியான சிகிச்சைக்கு வழி இல்லை என்பதற்காக விஸா பெற்று இங்கே (தமிழ்நாட்டிற்கு) மருத்துவ சிகிச்சைக்காக வந்துள்ள நிலையில் 16.4.2010 அன்று விமான நிலையத்தில் அவரை இறங்கவிடாமல் திருப்பி அனுப்பியது மனித நேயத்திற்கு விரோதமான செயல் என்பதைச் சுட்டிக்காட்டி அறிக்கை விடுத்திருந்தோம் (17.4.2010). பல கட்சியினரும் உணர்ச்சிபூர்வமாக அறிக்கை விடுத்தனர். அ.தி.மு.க. வைத் தவிர! சட்டப்பேரவையில் இந்நிலை ஏற்பட்டதற்கு மூல காரணம் 2003 இல் பிரபாகரனின் தாய் தந்தையர் இலங்கை சென்றுவிட்ட நிலையில் அவர்கள் மீண்டும் திரும்பி வந்தால் அவர்களை அனுமதிக்கக் கூடாது என்று ஒரு ஆணையை மத்திய அரசுக்கு எழுதிப் பெற்ற பெருமை ஜெயலலிதாவைத்தான் சாரும். அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் இந்தச் சாதனையைச் செய்தார்! நம் அதிகாரிகளுக்கு இப்படி ஓர் இக்கட்டான நிலை இதனால்தான் என்ற உண்மையை தமிழக முதல்வர் கலைஞர் இன்று சட்டமன்றத்தில் அம் பலப்படுத்தியுள்ளார் அதோடு பிரபாகரனின் தாயார் இங்கே வந்து மீண் டும் சிகிச்சை பெற விரும்பினால் மத்திய அரசுக்கு தமது அரசு கடிதம் எழுதி உதவிடத் தயார் என்றும் குறிப்பிட்டிருப்பது மிகவும் மனிதாபிமானத்துடன் கூடிய நல்ல செயல்; நம் முதல்வரின் கூற்றை வரவேற்பதோடு அவர்கள் இம்முயற்சியைச் செய்யவேண்டும் என்றும் உலகத் தமிழர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இதற்குமுன்புகூட ஜெயலலிதா (அ.தி.மு.க.) ஆட்சியின்போது தோழர்கள் பழ. நெடுமாறன் சுப. வீரபாண்டியன் போன்றவர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டு பேசத் தடையை சென்னை உயர்நீதிமன்றத்தில் வாங்கிய நிலை தொடர்வதை ரத்து செய்து அவர்களது வாய்ப்பூட்டை விலக்கிய செயலும் கலைஞர் அரசின் மனிதநேயம் மனித உரிமைக் காப்பைக் காட்டுவதாகும். எனவே இதற்குக் காரணமான அ.தி.மு.க. ஆட்சிபற்றி தமிழ்கூறும் நல்லுலகம் தெரிந்துகொள்வது முக்கியமாகும்.''

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறியதாவது:

''இந்திய குடிவரவைச் சார்ந்த அதிகாரிகள் இவ்வாறு நடந்துகொண்டதற்கு கடந்த 2003ஆம் ஆண்டு இந்திய அரசு வெளியிட்ட எச்சரிக்கைச் சுற்றறிக் கையே காரணம் என்பது தெரியவருகிறது. அதாவது 1980க்குப் பின்னர் தமிழகத் திற்கு வந்த மேதகு பிரபாகரன் அவர்களின் பெற்றோர் 2003ஆம் ஆண்டு வரையில் திருச்சிராப்பள்ளியிலேயே தங்கியிருந்தனர். 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து பலரும் ஈழத்திற்குத் திரும்பினர். அதே போல மேதகு பிரபாகரன் அவர்களது பெற்றோரும் 2003ஆம் ஆண்டு தமது தாயகத்திற்குத் திரும்பினர். அப்போது தமிழகத்தின் முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா பிரபாகரனின் பெற்றோர் மீண்டும் தமிழகத்திற்கு வர தடை விதிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார். அந்த விண்ணப்பத் தின் அடிப்படையிலே தான் அவர்கள் தமிழகத்திற்கு வர தடை விதிக்கப் பட்டு அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. அந்தத் தடையின் அடிப்படையில் தான் அதிகாரிகள் அன்னை பார்வதி அம்மாள் சென்னையில் இறங்க அனுமதிக்காமல் திருப்பி அனுப்பியுள்ள தாகத் தெரிய வருகிறது. அதாவது பார்வதி அம்மாள் அவர்களைத் திருப்பி அனுப்புவ தற்கு அன்றைய அதிமுக அரசு பெற்ற தடையாணைதான் காரணம் என்பது இப்போது உறுதியாகியுள்ளது. எனினும் அதைக் காரணம் காட்டி அவரை இங்கு மருத்துவம் பெறவிடாமல் திருப்பி அனுப்பிய நடவடிக்கையானது வன்மையான கண்டனத்துக்குரியதாகும்.

இந்நிலையில் இந்திய அரசின் அனுமதி மறுப்புப் பட்டியலிலிருந்து அன்னை பார்வதி அம்மாள் பெயரை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழகத்திற்கு அவரை அழைத்து வரவேண்டும் எனவும் தமிழக அரசை வற்புறுத்துகிறோம்.''

இந்தியா தமிழருக்கு எதிரான செயல்களை தொடர்ந்தும் செய்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை நிரூபித்து காட்டியுள்ளதாக சீமான் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:. தமிழீழ தேசியத்தலைவரின் அவர்களின் தாயார் பார்வதி அம்மாள் தனது உடல்நலம் குன்றியதால் சிகிச்சை பெறுவதற்காக முறைப்படி அனுமதி பெற்று இந்தியாவிற்கு வந்தவரை கொஞ்சம்கூட மனிதாபிமானம் இல்லாமல் மத்திய மாநில அரசுகள் திருப்பி அனுப்பியுள்ளமை மனிதாபிமானம் அற்றசெயல் மட்டுமல்ல சட்டவிரோதசெயல் என்றும் தெரிவித்துள்ளார். இந்தியாவில் இந்தியமண்ணிற்கு தொடர்பில்லாத இத்தாலியர் தொடங்கி மாறுபாடி குஜராத்தி மலையாளி தெலுங்காளி வரையில் அனைவரும் உல்லாசமாக வாழவும் அதிகாரத்திலும் இருக்கையில் எங்கள் அன்னையின் உடல்நலத்திற்கு சிகிச்சை பெற இந்த மண்ணில் அனுமதி மறுக்கப் படுகின்றது என்பது வெட்கக்கேடான விடயம் என்றும் தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் சிகிச்சை அளிக்க முடியாது ஆனால், பாக்கிஸ்தான் நாட்டு சிறுவனுக்கு சிகிச்சைபெற இந்தியா உதவி என்று உலகத்திற்கு படம் எடுத்துக் காட்டியவர்கள் இதில் இரட்டைவேடம் போடுகின்றார்கள். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் எங்கள் தேசியத்தலைவர் அவர்களின் தாயாரை மனிதாபிமானம் அற்று திருப்பி அனுப்பியதன் மூலம் இந்திய மாநில அரசுகள் தமிழர்களுக்கு எதிரான தங்கள் செயல்களை தொடர்ந்து செய்துகொண்டு இருக்கின்றதை வெளிக்காட்டி நிற்கின்றது.''

தேசியத் தலைவர் பிரபாகரனை தமது முடிசூடா மன்னனாக போற்றிய பல தமிழ் நாட்டுத் தலைவர்கள் இன்று பல மாறு பட்ட கருத்துக்களை பல வடிவங்களில் கூறுகின்றார்கள். குறிப்பாக வீரமணி இன்று ஜெயலலிதா மீது பழியைப் போட்டுவிட்டு தப்பிக்க முனைகின்றார். இவர் பல காலகட்டங்களில் ஜெயலலிதாவுடன் செயலாற்றியவர். இன்று கருணாநிதியுடன் செயலாற்றிக்கொண்டிருக்கின்றார். ஆக இப்படியான தமிழ் நாட்டுத் தமிழர்களால் தான் இன்று ஈழப் போராட்டம் இந்த நிலையை அடைந்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

புது டில்லியில் இருந்து பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி இந்திய நாடாளுமன்றத்தில் பார்வதி அம்மாளின் நிகழ்வை வன்மையாக கண்டித்து பேசியுள்ளார். இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தானில் இருந்து வரும் பயங்கரவாதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவில் சிவப்பு கம்பள மரியாதை அளித்து அவர்களுக்கு அத்தனை வசதிகளையும் ஏற்படுத்தும் நடுவண் அரசு, பாவம் ஒன்றும் அறியா பிரபாகரனின் தாயார் மட்டும் நாட்டுக்குள் நுழைய விடாமல் திருப்பி அனுப்பியுள்ளனர். இது மனிதாபிமானத்திற்கு விழுந்த பலத்த அடியாகத் தான் பார்க்க வேண்டும் என்று கூறியதன் மூலம் அத்வானி போன்ற வட இந்தியத் தலைவர்கள் தமிழ் நாட்டுத் தலைவர்களிலும் விட பரவாயில்லை போலும். நிச்சயம் பார்வதி அம்மாளை நாட்டுக்குள் விடாமல் செய்ததன் மூலம் இந்தியா மீண்டும் பெரும் தவறை இழைத்துவிட்டது. மனிதாபிமானம் பேசிய புத்தர், காந்தி, நேரு என்று பல தலைசிறந்த தலைவர்கள் பிறந்த இந்திய நாடு இன்று தலை குனிந்து வெட்கப்படும் நிகழ்வை ஏற்படுத்தியுள்ளது. எந்த ஒரு குற்றமும் செய்யாத பார்வதி அம்மாளை நாட்டுக்குள் விடாமல் செய்ததன் மூலம் மீண்டும் ஈழத் தமிழரின் வெறுப்புக்குள்ளாகியுள்ளது. இந்திய நடுவண் அரசு மற்றும் அதற்கு உறுதுணையாக இயங்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கருணாநிதி. இந்தியாவின் ஈழத் தமிழர் விரோத போக்கு எல்லை கடந்து சென்று கொண்டிருக்கின்றது. என்பதை பல கடந்த கால நிகழ்வுகள் மற்றும் இந்த சம்பவம் மூலம் நிரூபணமாக்கப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அகதிகள் தொடர்ந்தும் அவதி!

## பி.பி.ஸி. கருத்து

உள்நாட்டு யுத்தத்தால் வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த அகதிகள் சொல்லொணாத் துன்பங்களைத் தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர் என்று பி.பி.ஸி. சர்வதேச செய்திச் சேவை நேற்றுத் தெரிவித்தது.

பி.பி.ஸி. நிருபர் சார்ள்ஸ் ஹவிலாண்ட் இத்தமிழ் அகதிகளின் அவலநிலையைப் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்த வடக்கு மாகாண மக்களில் சுமார் 80 ஆயிரம் பேர் வரையானோர் இராணுவத்தால் நடத்தப்படும் முட்கம்பி முகாம்களிலேயே இன்னமும் இருக்கின்றார்கள். அவர்களின் சொந்த நிலங்கள் நிலக் கண்ணி வெடிகளால் சூழப்பட்டுள்ளன. பற்றைக் காடுகளாகக் காட்சி தருகின்றன.

அதேநேரம் சுமார் 10 ஆயிரம் பேர் வரையான அகதிகள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். ஆனால், அவர்களின் மீள்குடியேற்றம் கூட இலகுவானது அல்ல. முகாம் அகதிகளில் சிலர் உணவுக்காகவும், பணத்துக்காகவும் நிவாரணப் பொருள்களை விற்கும் பரிதாப நிலையில் உள்ளனர் - என்று தெரிவித்தார். (ஒ-சி)


**புதிய இடத்தில் எமது சேவைகள்**

பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை. உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ள யாழ். நகரில்.
S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோவில் அருகில்)




# வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி
# கேள்வி அறிவித்தல் - 2010

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் (ESDP) - 2010 நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளை பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

1.அ) ஒப்பந்தகாரர் இக்ராட் தரம் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும், பதிவுப் புத்தகம் 2010 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

2.கேள்விப் பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மாரட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக் காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 10.05.2010 ஆம் திகதியிலிருந்து 17.05.2010 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும், வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப்பணம் | மீளளிக்க கூடிய வைப்பு பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தி. நிர்மாணம் செயற்பாட்டறை | 750.00 | 27250.00 | M.7 |
| 2 | யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி. நிர்மாணம் விஞ்ஞான ஆய்வு கூடம் | 750.00 | 27450.00 | M.7 |
| 3 | யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. மிகுதி வேலை 1ஆம் மாடி செயற்பாட்டறை | 750.00 | 11550.00 | M.8 |
| 4 | யா/நாவற்குழி ம.வி. மிகுதி வேலை விஞ்ஞான ஆய்வு கூடம் | 500.00 | 3680.00 | M.9 |
| 5 | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. மிகுதி வேலை விஞ்ஞான ஆய்வு கூடம் | 500.00 | 2500.00 | M.9 |
| 6 | யா/கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை வகுப்பறைத் திருத்தம் | 500.00 | 2550.00 | M.9 |
| 7 | யா/கைதடி குருசாமி வித்தி. தற்காலிக கொட்டகை திருத்தம் | 500.00 | 2890.00 | M.9 |
| 8 | யா/குடமியன் அ.த.க.பாடசாலை தற்காலிக கொட்டகை திருத்தம் | 500.00 | 3650.00 | M.9 |

4.விண்ணப்பங்கள் யாவும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11.30 மணிக்கு கேள்விப்பத்திரப்பெட்டி திறக்கப்படும்.

5.கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளவரும் ஒப்பந்தகாரர் பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளரின் கேள்விப்பத்திரம் பெறுவதற்கான அனுமதிக் கடிதத்துடன் வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

6.கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

திரு.கு.பிறேமகாந்தன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(சி/567405)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 02 ★ 1946



மறைவு 17 ★ 04 ★ 2009

**அமரர் செல்லையா கபிலராஜன் (இராசா)**

திதி: அபரபட்சம் அட்டமி


அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எல்லோரிடமும்
இன்முகம் காட்டி திடீரென மறைந்து
இன்றுடன் ஓர்வருடம் சென்றாலும்
உம் நினைவுடனே வாழ்கின்றோம்

செல்லையா (தந்தை),
மாணிக்கம் சின்னையா.(லண்டன்)
(ஓய்வுபெற்ற ரெயில்வே பிரதம காப்டன்),
அன்னம் அன்ரி (கொழும்பு), செல்வபத்மாவதி,
ரகுலராஜா, விமலராஜா (பிரான்ஸ்), சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

இல.5,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

அன்னை மடியில் 04 ★ 11 ★ 1942



ஆண்டவன் அடியில் 07 ★ 04 ★ 2010

**அமரர் நவரத்தினசிங்கம் பத்மதேவா**

எமது குடும்பத்தலைவர் பத்மதேவா அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு ஓடோடிவந்து உதவிகள் பலபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர் களுக்கும் மற்றும் தொலைபேசியில் அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (06.05.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் வீதி,
மீசாலை.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 08 ★ 06 ★ 1932



இறப்பு 06 ★ 04 ★ 2010

**அமரர் சரஸ்வதி கிருஸ்ணன்**

கடந்த 06.04.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு அனுதாபம் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (06.05.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெருமுடி, மடத்தடி.
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளுடன்......

ஐந்தாம் ஆண்டு



**அமரர் இளையதம்பி சுப்பிரமணியம்**

தோற்றம்: 03.02.1911
மறைவு: 01.05.2005
திதி: 06.05.2010
(சித்திரை அபரபக்க அட்டமி)

எட்டாம் ஆண்டு



**திருமதி கனகாம்பிகை அருணாசலம்**

தோற்றம்: 07.08.1924
மறைவு: 04.05.2002
திதி: 06.05.2010
(சித்திரை அபரபக்க அட்டமி)

இருபதாம் ஆண்டு



**அமரர் செல்லத்துரை வரதலிங்கம்**

(இளைப்பாறிய அதிபர், யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை)
தோற்றம்: 25.09.1929
மறைவு: 12.05.1990
திதி: 01.05.2010
(சித்திரை அபரபக்க திருதியை)

தண்ணொளி பரப்பி தாரகைகளாக எமக்கொளி தந்து
விண்ணொளி நாடி இறையடி இணைந்து ஆண்டுகள் பல கடந்தும்
உள்ளொளி நின்று இயைவுடன் வாழ வைக்கும்
தங்கள் பசுமை நினைவுகள்

திரு.சு.கந்தஞானி
117/4, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

திரு.தி.அருணாசலம்
117/4, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரி வைரஸ் ஏற்படுத்திய குழப்பம்

## மன்னிப்புக்கோரியது மக்கஃபே நிறுவனம்

சர்வதேச ரீதியாக மிகப் பிரபல்யமிக்க அன்ரி வைரஸ் மென்பொருள்களில் ஒன்று மக்கஃபே (McAfee). வைரஸ்களைத் தேடித் தேடி அழிப்பதில் பெயர் பெற்றது இது. தினம் தினம் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படுகின்ற வைரஸ்களை இனங்கண்டு தேடி அழிப்பதற்காக மக்கஃபே நிறுவனத்தினால் தினமும் செய்நிரலுக்கான புதுப்பிப்புக் கோப்புகள் (Antivirus Updates) அதன் இணையத்தளத்தில் வெளியிடப்படுவது வழமை.

மக்கஃபே அன்ரி வைரஸ் மென்பொருள் நிறுவப்பட்டிருக்கும் கணனிகள் இணைய இணைப்பினூடாக இலவசமாக தினமும் புதுப்பித்துக்கொள்ளக் கூடியதாக இருப்பதோடு, இணைய இணைப்பு வசதியில்லாதவர்கள் புதுப்பிப்புக் கோப்புகளை பதிவிறக்கம் (Download) செய்து பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

அந்த வகையில் அண்மையில் மக்கஃபேயின் வைரஸ் புதுப்பித்தலுக்காக வெளியிடப்பட்ட 5958 என்ற Dat வடிவ update file மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

வின்டோஸ் எக்ஸ்பி இயங்கு தளத்தில் இயங்கிய கணனிகளில் குறிப்பிட்ட இந்த 5958 என்ற Dat வடிவக் கோப்பு Reboot loop ஒன்றை ஏற்படுத்தி விட, கணனிகள் கேட்டுக் கேள்வியின்றி திரும்பத்திரும்ப Reboot ஆகிய வண்ணமிருந்ததனால், பல நிறுவனங்களின் கணனிகளினால் தங்களுக்குள் தொடர்பினை ஏற்படுத்த முடியாமற் போய் விட்டது. நெட்வேர்க்குகள் குழம்பிப் போய் இணைய இணைப்புக்களும் துண்டித்துப் போய்விட்டன.

குறிப்பிட்ட அந்த update file வின்டோஸ் இயங்குதளத்தின் Svchost.exe என்ற கோப்பினை "W32/Wecorl.a" என்ற ஒரு வைரஸ் எனக்காட்டியபடி அதனை இயங்க விடாது குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது.

உண்மையில் வின்டோஸ் இயங்குதளத்தின் Svchost.exe என்ற கோப்பு வின்டோஸ் இயக்கத்துக்கு இன்றியமையாததொரு கோப்பாகும்.

இந்நிலையில் பல்லாயிரக் கணக்கான கணனிகள் பாதிக்கப்பட்ட ஒரு சில மணி நேரங்களிலேயே மக்கஃபே நிறுவனத்திற்கு தகவல் கிடைக்க, உடனடியாகவே தனது தவறைத்திருத்தி மாற்றுத் தீர்வை தனது இணையத்தினூடாக வெளியிட்டு, தனக்கிருந்த தனித்துவத்தைக் காத்துக்கொண்டது மக்கஃபே நிறுவனம்.

அதன் மூலம் அன்ரிவைரஸ் துறையில் தனது முன்னிலையை உறுதிப்படுத்தியிருப்பதோடு, எந்த விதமான சவால்களையும் சமாளிக்க முடியும் என நிரூபித்திருப்பது மக்கஃபே நிறுவனத்தின் சிறப்பியல்பு என்றே சொல்ல வேண்டும்.

அத்துடன் குறிப்பிட்ட பாதிப்புக்காகச் சரித்திரத்தில் முதன் முறையாக மக்கஃபே நிறுவனம் பெருந்தன்மையுடன் தனது வாடிக்கையாளர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

கடந்த வாரமளவில் மக்கஃபே அன்ரி வைரஸை அப்டேட் செய்தவர்கள், கணனியில் பாதிப்பேதாவது ஏற்பட்டாலும் சரி, ஏற்படாவிட்டாலும் சரி மீண்டுமொரு முறை புதிதாக அப்டேட் செய்து கொள்வது நல்லது என்கிறார்கள் வல்லுநர்கள்.

# 6 ஆவது வயதையடையும் யூ - ரியூப்

கே.ஜெயமாலா - யாழ்ப்பாணம்

எது தேவையென்றாலும் தேடித்தரும் "கூகிளை"ப்போல இன்று வீடியோக் கோப்புக்களுக்கென தனித்துவமாய் - பல்லாயிரக் கணக்கானவர்களின் விருப்பத்துக்குரிய ஒரு தளமாக விளங்குவது You Tube என்ற தளம்.




முதலாவது யூ ரியூப் வீடியோவும் ஜாவர் கரீமும்

இந்தத் தளத்தில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக இணையலாம், எந்த இடத்திலிருந்தும் வீடியோ பைல்களைப் பதிவிறக்கலாம்,பதிவேற்றலாம்.

பல லட்சம் வீடியோ பைல்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் யூரியூப் தளத்துக்குக் கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி ஐந்தாவது பிறந்த நாள் கொண்டாடப் பட்டது.

இந்தத் தளத்தை நிறுவியவர்களுள் ஒருவரான "ஜாவர் கரீம்" என்பவர்தான் முதன் முதலாக 2005 ஆம் ஆண்டு தனது விலங்கியல் பூங்காவுக்கான விஜயத்தினை *"Me at the Zoo"* என்ற பெயரில் 19 நிமிட நேரத்துக்கு வீடியோ வடிவில் யூரியூப்பில் இணைத்ததோடு அதன் முதலாவது பாவனையாளராகவும் விளங்கினார்.


அதன்பின் ஐந்தாண்டுகளில் மிகப் பிரம்மாண்டமாக வளர்ச்சி கண்டுவரும் யூரியூப்பில் இப்போது முழு நீளத் திரைப்படங்களைக் கூட கண்டுகளிக்கும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. திரைப்படத் தயாரிப்பாளர்கள் கூட தங்களது திரைப்படங்களை யூரியூப் ஊடாக வாடகைக்கு விடும் புதிய திட்டமொன்றினை அமெரிக்காவில் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இத்திட்டம் மிக விரைவில் ஏனைய நாடுகளுக்கும் பரவும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

# Skype பல்பேசியின் புதிய பதிப்பு

ஆர்.ஷோபனா - யாழ்ப்பாணம்

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகளின் மத்தியில் தொலைபேசிச் செலவைக் குறைப்பதற்காக உலகின் எந்த மூலையில் இருந்தாலும் இணைய இணைப்பு மூலம் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் வசதியைத் தருவதில் இணையப் பல்பேசி மென்பொருளாக "ஸ்கைப்"




முன்னணியில் திகழுகின்றது. அத்துடன் இதனை எந்த வகையான கணனிகளிலும் பயன்படுத்தத்தக்கதாக மிக எளிமையான பயனர் இடை முகத்தைக் கொண்டு அண்மையில் இதன் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இலவச இணையத் தெலைபேசி வசதி, "முகம் பார்த்துப் பேசும்" வீடியோவுடன் கூடிய பல பேருடனான கொன்பரன்ஸ் வசதி, மற்றும் பெயர் தெரிந்த பயனர்களைத் தேடிப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி போன்ற பல வசதிகளுடன் புதிய "ஸ்கைப்" பதிப்பு வெளி வந்துள்ளது. எல்லாவற்றையும் விட கணனியிலிருந்து கணனிக்கு இலவசமாகப் பேச "ஸ்கைப்" வழி செய்கின்றது.

இதனை *www.skype .com* என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து உங்கள் கணனிகளில் நிறுவிக் கொள்ளலாம். இதன் அளவு 1.6 எம்.பி தான்.

## ஆங்கில - தமிழ் தகவல் தொழில்நுட்ப கலைச்சொல் அகரமுதலி

C

| | |
|---|---|
| *C / C# / C++* | - கணனி மொழிகள் |
| *Cable* | - வடம் |
| *Calculate* | - கணக்கிடு |
| *Calculus Boolean* | - யூலியன் வகையீடு |
| *Call accepted packet* | - அழைப்போர் பெட்டலம் |
| *Call clearing* | - அழைப்புத் தடுப்பகற்றி |
| *Cancel* | - நீக்கு |
| *Canned Software* | - தயார்நிலை மென்பொருள் |
| *Capacity* | - கொள்ளளவு |
| *Capacity memory* | - நினைவுக் கொள்திறன் |
| *Caps Log* | - தலையெழுத்துப் பூட்டு |
| *Capturer data* | - தரவுக்கவர்வு |
| *Carbon Ribbon* | - கரிநாடா |
| *Card Punched* | - துளைத்த அட்டை |
| *Carrier Signal* | - கொண்டேகி சைகை |
| *Cascade Connection* | - விழுதொடர் இணைப்பு |
| *Central Processing Unit* | - மைய முறை வழி |
| *Cell* | - சிற்றறை ஃ கலம் |
| *Center* | - மையம் |
| *Certification* | - தகுதிச் சான்றளிப்பு |
| *Character* | - வரியுரு |
| *Chart* | - வரைபடம் |
| *Chat Page* | - உரையாடு பக்கம் |
| *Check digit* | - சரிபார்ப்பு இலக்கம் |
| *Chief Programmer* | - முதன்மைச் செய்நிரலர் |
| *Chip Card* | - சில்லட்டை |
| *Character recognition* | - வரியுருக் கண்டு அறிதல் |
| *Chroma* | - நிறம் |
| *Cipher* | - மறையீடு / சுழி / பூச்சியம் |
| *Circulating register* | - கணக்கீட்டுப்பதிவேடு |
| *Click* | - அமுக்கு / கிளிக் செய் |
| *Client* | - சேவைப்பயனர் |
| *Client Server* | - சேவைப்பயனர் வழங்கி |
| *Clipt Art* | - ஆயத்தப்படம் |
| *Clock Digital* | - இலக்கக்கடிகாரம் |
| *Clock Wise* | - வலஞ்சுழியாக |
| *Closed File* | - மூடிய கோப்பு |
| *Coaxial Cable* | - இணை அச்சு வடம் |
| *Code Binary* | - இருமக்குறிமுறை |
| *Coherence* | - இசைவிணைப்பு |
| *Cold Fault* | - தண் பழுது |
| *Combination Logic* | - சேர்மானத்தர்க்கம் |
| *Column Split* | - பத்தி நிரல் பிரிப்பு |
| *Command Language* | - கட்டளை / ஆணை மொழி |
| *Complement* | - இட்டு நிரப்பு |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தவறு என தெரிந்தும் சில காரியங்களை துணிச்சலாக செய்வீர்கள். பெண்கள் கணவர் மற்றும் குடும்பப் பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். தொல்லையாக நினைத்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

### இடபம்



புதியவர்கள் சிலர் உங்களைத் தேடி வந்து யோசனை கேட்கலாம். உறவினர்கள் வருகையை எதிர்பார்த்து உங்களின் வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வாகன பராமரிப்பல் அக்கறை காட்டுவீர்கள். வயிறு உபாதை உண்டாகலாம்.

### மிதுனம்



சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் அமையலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று நடக்காமல் போகலாம். கண்டிப்பாகப் பேசுவதன் மூலம் உறவினர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மறதியைக் தவிர்க்கவும்.

### கடகம்



உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலர் கேட்காமலேயே அவர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது வேகத்தை தவிர்ப்பது நல்லது. விரும்பிய உணவு வகைகளை சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

### சிங்கம்



குறுக்கு வழி சிந்தனைகளை விரட்டி எதிலும் நேர்மையாக நடக்க நினைப்பீர்கள். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் இழுபறிகள் காணப்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உறவினர் ஒருவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.

### கன்னி



சில வேலைகளைச் செய்து விட்டு, அதில் திருப்தி இல்லாத சூழ்நிலை காணப்படும். அண்டை அயலாரிடம் பழங்கதைகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். பண விடயங்களில் பிறரை நம்புவதை தவிர்க்கவும். ஏதோ ஒரு காரியமாக சிலர் வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும். கனவுத் தொல்லையுண்டு.

### துலாம்



மாமன், மைத்துனர்கள் உங்களின் முயற்சிகளுக்கு துணையாக இருப்பர். அவசர செலவுகள் நெருக்குவதால், கடன் மிகுதி ஒன்றை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் நீங்களாக தலையிடுவதைத் தவிர்க்கவும். திட்டமிட்ட வேலை ஒன்றில் மாற்றங்களைச் செய்யலாம்.

### விருச்சிகம்



சூழ்நிலைக்கு தகுந்த வகையில் பேசி சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். இளைய உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் தொடர்பான வேலையாக அவர்களுடன் வெளியில் செல்லலாம். உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். பணவரவு உண்டு.

### தனுசு



கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சிலரிடம் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். ஒரு வகையில் சிக்கனமாக இருந்து விட்டு மற்றொரு வகையில் தாராளமாக செலவு செய்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சோம்பல் கூடும்.

### மகரம்



பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம். பிள்ளைகள் உங்களின் சொல்படி நடந்து பெருமைப்பட வைப்பர். உறவினர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். எதிலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். சந்தோஷ அனுபவம் பெறலாம்.

### கும்பம்



ஆடம்பரச் செலவுகளைச் செய்வீர்கள். மற்றவர்களுக்காக எடுத்த முயற்சி ஒன்றில் பிரச்சினைகளை, தடைகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். ஒருவர் உங்களிடம் தங்களின் பிரச்சினைகளைச் சொல்லி யோசனை கேட்கலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

### மீனம்



உதிரி வருமானங்களைப் பெறலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நண்பர்களுக்கு தெரியாமல் அவர்களின் ரகசியம் ஒன்றை அறிந்து கொள்வீர்கள். பல நாட்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன்றை செய்து முடிப்பீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்கவும்.

---

# சாதாரணப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டக் கல்வித்துறையில் புகழ்சேர்த்த மாணவர்கள்

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## லக்சனா விஜயகுமாரன்
### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

தரம் ஒன்றிலிருந்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றேன். நான் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறாகிய 9ஏயைப் பெற்றுக்கொண்டேன். நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்காக விடாமுயற்சியில் ஈடுபட்டேன். அன்றாடம் படித்த பாடங்களை வீட்டில் சென்று மீட்டல் செய்வதன் மூலமும், கடந்த கால வினாத்தாள்களை செய்து பார்ப்பதன் மூலமும் நான் என்னைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்திக் கொண்டேன்.

நான் பரீட்சை எழுதிய பின்னர் 9ஏ சித்தியை பெறுவேன் என்ற நம்பிக்கை என்னிடம் காணப்பட்டது. அவ்வாறே நான் சிறந்த பெறுபேற்றையும் பெற்றுக்கொண்டேன். இவ்வாறு நான் சிறந்த பெறுபேற்றைப் பெற எனது பெற்றோர்கள், எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நான் பயின்ற தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோர் ஊக்கமளித்து உதவினார்கள்.

இப்பெறுபேற்றைப் பெற்றதற்காக நான் இறைவனுக்கும் எனக்கு உதவிய அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்து கற்று வருகின்றேன். உயர்தரத்திலும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தி யடைவதே எனது நோக்கமாகும்.



## ஜெனி கெப்சீபா ஜெயக்குமார்
### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நான் தரம் ஒன்றிலிருந்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கிறேன். எதிர்பார்த்த இப்பெறுபேற்றை இயேசுவினுடைய கிருபையினால் பெற்றுக் கொண்டேன். இப்பெறுபேற்றை அடைய திட்டமிட்டுக் கல்வி கற்றேன். பரீட்சையை எழுத முன்னர் சிறிதளவு பயந்தாலும் பரீட்சை ஆரம்பித்தபோது பயம் போய்விட்டது. பரீட்சை எழுதிய பின்னர் திருப்தியான மனநிலை இருந்தது. எனது இப்பெறுபேறு கிடைக்க உதவிய பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

ஆசிரியர்களின் வழிகாட்டலின் மூலம் இப்பெறுபேறைப் பெறமுடிந்தது. உயர்தரத்தில் கணிதத்துறையில் கல்வி கற்கிறேன். எதிர்காலத்தில் பொறியியலாளராக வருவதே எனது இலட்சியமாகும்.



## மதுறமி சாந்தன்
### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையானது ஒவ்வொரு மாணவனையும் உயர் கல்விக்குத் தரப்படுத்துவது. அத்தகைய ஒரு பரீட்சையை ஆங்கில மொழி மூலம் எதிர்கொண்டு 9ஏ பெறுபேற்றினைப் பெற்றமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

நான் இப்பெறுபேற்றினைப் பெறுவதற்குத் தூண்டுகோலாகவும், பக்கத் துணையாகவும் இருந்த எனது பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும் குறிப்பாக எனது தாத்தாவிற்கும் முதற்கண் நன்றிகள்.

மேலும் நான் சோர்வுற்றபோதெல்லாம் ஊக்கப்படுத்தி வழிப்படுத்திய எமது கல்லூரி அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

தரம் ஒன்றிலிருந்து இக்கல்லூரியில் கல்வி கற்றிருப்பினும் இடையே இடப்பெயர்வு காரணமாக மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையில் தற்காலிகமாகக் கற்றேன். அப்பாடசாலைச் சமூகத்துக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். நான் இரவிலும் அதிகாலையிலும் பாடங்களை அட்டவணையிட்டுக் கற்பேன். மனனம் செய்ய வேண்டியவற்றை அதிகாலையில் மனனம் செய்வேன். அத்துடன் கடந்த கால வினாத்தாள்களை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்தேன். பயிற்சியும், சுயகற்றலுமே என்றுமே எமக்கு உதவும்.

எந்தப் பாடத்தையும் உள்வாங்கிக் கற்கவேண்டும். அப்போது தான் அவை மனதில் இலகுவாகப் பதியும். தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால் நாம் எதனையும் சாதிக்கலாம்.

உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்துள்ளேன். ஒரு வைத்தியராகி நலிந்த மக்களுக்கும் நாட்டுக்கும் சேவை செய்வதே எனது இலட்சியம். எல்லாவற்றுக்கும் மேலாக எல்லாம் வல்ல இறைவனின் ஆசியையும், அருளையும் வேண்டிநிற்கிறேன்.



## தாரணி திருநாவுக்கரசு
### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலத்தில் 8ஏ,பி பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். நான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைத்துள்ளது. பாடசாலைக் கற்பித்தலும் எனது சுயகற்றலுமே இப் பெறுபேற்றை எனக்குப் பெற்றுத்தந்துள்ளது.

இப்பெறுபேற்றைப் பெற்றதற்குக் காரணம் நான் பாடசாலையில் கற்பிக்கும்போது கவனமாகக் கிரகித்தேன். வீட்டில் அன்றாடம் சுயகற்றலை மேற்கொண்டேன். எனது பெறுபேற்றை உயர்த்த கடந்த கால வினாத்தாள்களையும், மாதிரி வினாத்தாள்களையும் செய்து பயிற்சி எடுத்துக்கொண்டேன்.

பரீட்சை எழுதும் முன்னரும், பரீட்சை மண்டபத்திலும் பரீட்சை பற்றிப் பயப்படாது அமைதியான மனநிலையில் இருந்தேன். பரீட்சை எழுதிய பின்னர் நல்ல பெறுபேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். இப்பெறுபேறு கிடைத்ததையிட்டு நானும் பெற்றோரும் கற்பித்த ஆசிரியர்களும் நண்பர்களும் மகிழ்ச்சியடைந்தோம்.

எனது இப்பெறுபேற்றிற்கு பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களும் எனது பெற்றோருமே முக்கிய காரணமாவர். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். எதிர்காலத்தில் விஞ்ஞானத்துறையில் கல்வி கற்க உத்தேசித்துள்ளேன். உயர்தரத்தில் நல்ல பெறுபேற்றைப்பெற முயற்சிப்பதே எனது எதிர்கால இலட்சியம் ஆகும்.

நேர்காணல்: பிரதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவாக...




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**16.01.1991**

✱குவைத்திலிருந்து தனது படைகளை ஈராக் விலக்கிக் கொள்ள ஐ.நா.சபையின் பாதுகாப்புக் கவுன்ஸில் விதித்த காலக்கெடு இன்றுடன் முடிவடைவதால் வளைகுடாவில் எந்நேரமும் போர் வெடிக்கும் அபாய நிலை தோன்றியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

✱ கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட யாழ். அரச அதிபரை மதவாச்சியில் வைத்துப் பாதுகாப்புப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிப்பு.

**17.01.1991**

✱அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்குமானால் இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு நாடு இந்த உலகில் இருக்காது என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேன் எச்சரிக்கை.

**18.01.1991**

✱வளை குடாவில் அழிவுப் போர் நேற்று வெடித்தது. ஈராக் மீது பன்னாட்டுப் படைகள் மூர்க்கத்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ ஈராக் மீது போர் தொடுத்தமைக்காக அமெரிக்கா விரைவில் வருத்தப்படும் என 'பாக்தாத்'வானொலி அறிவிப்பு.

**19.01.1991**

✱ அரசின் புதிய சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற விண்ணப்பித்தவர்களில் பலருக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்கப்படவுள்ளதாக அறிவிப்பு.

✱இஸ்ரேல் மீதும் ஈராக் நேற்றுத் திடீரென ஏவுகணைத் தாக்குதல் மேற்கொண்டதால் உலகப்போரொன்று வெடிக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

**20.01.1991**

✱ இஸ்ரேல் தலைநகர் மீது நேற்று ஈராக் இரண்டாவது தடவையாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருப்பதால் ஈராக்குக்குப் பதிலடி கொடுப்பது தவிர்க்க முடி யாதது என இஸ்ரேல் அறிவிப்பு.

**21.01.1991**

✱வல்வெட்டித்துறை கடலோரப் பகுதிகளில் நேற்று மாலை நடத்தப்பட்ட அகோர விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் எட்டுப் பொதுமக்கள் பலியானதாகவும் முப்பதுக்கும் அதிகமானோர் படுகாயமுற்றதாகவும் தெரிவிப்பு.

✱உலகின் கவனம் முழுவதும் வளைகுடாப்பக்கம் திரும்பியிருக்கும் இன்றைய சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி வட பகுதியில் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் அரச படைகள் மோசமான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக விடுதலைப்புலிகள் தரப்பு குற்றச்சாட்டு.

**22.01.1991**

✱ வளைகுடாப் போரில் எவரும் வெற்றியடைய முடியாதெனவும், யுத்த நிறுத்த மொன்றை அங்கு கொண்டுவர முயற்சிக்கும்படி தாம் அணிசேரா நாடுகளைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

✱சிங்கள அரசின் உளவியல் யுத்தத்தை முறியடிப்போம் என்ற தலைமையில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள தாகத் தெரிவிப்பு.

**23.01.1991**

✱யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இலங்கை விமானப் படையினர் விமானத் தாக்குதல்களை முழு அளவில் தீவிரப்படுத்தியுள்ளதாகக் குற்றச்சாட்டு.

✱ இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதைத் தவிர வேறு வழியேதும் கிடையாது என இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் நாகேந்திரநாத்ஜா கொழும்பு ஆங்கில வார இதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

**24.01.1991**

✱ இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்புக்களுக்கும் இடையில் சமரசம் செய்துவைக்க பொது நலவாய நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் ரம்பாவின்பெயரை அவுஸ்திரேலியாசிபார்சு.

✱ யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை அம்புலன்ஸ்சேவை வாகனங்களுக்கான டீசல் எரிபொருள் வழங்க கூட்டுத்தாபனத் தலைமையகம் மறுத்து விட்டதாகத் தெரிவிப்பு.

**25.01.1991**

✱பொருள்கள் பதுக்கல்,கள்ளச்சந்தை மற்றும் வியாபாரிகளின் சுரண்டல் என்பவற்றைக் கண்டித்து குடாநாட்டு மக்கள் ஆயிரக்கணக்கானோர் ஒன்று திரண்டு நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் நிறைவேற்றப்படாத அம்சங்கள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடன் நடத்தப்படும் பேச்சில் ஆராயப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவிப்பு.

**26.01.1991**

✱தமிழகத்திலுள்ள சில போராளிகளின் செயற்பாடுகளை வைத்து ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தை நான் களங்கப்படுத்த விரும்பவில்லை என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு.

✱ அரசின் கெடுபிடி, போக்குவரத்து நெருக்கடி என்பவை காரணமாக யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை நிவாரணமாக அனுப்புவது கஷ்டமாக உள்ளதாக யாழ்ப்பாணம் வந்துள்ள ரெட்பானா அமைப்பின் அதிகாரி தெரிவிப்பு.

**27.01.1991**

✱இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் வகிக்க நோர்வே உட்பட ஐந்து வெளிநாடுகள் விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் இலங்கை அரசு அது குறித்து அக்கறை காட்டாதிருப்பதாக சுவீடிஸ் உப்சால் பல்கலைக் கழகப் பேராசிரியர் விமர்சிப்பு.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் அவசரகாலச் சட்டத்தை இரத்துச் செய்ய இடமளிக்கக் கூடியதான சட்டத்திருத்தமொன்று அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

**28.01.1991**

✱மன்னாரில் தள்ளாடிப்பகுதியில் அரசின் யுத்த விமானங்கள் நடத்திய தாக்குதல்களுக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் ஹெலிகொப்ட ரொன்று விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

✱இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா உத்தியோகபூர்வ விஜயமாக இன்று கொழும்புக்கு வருவதாக அறிவிப்பு.

**29.01.1991**

✱ இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதுடில்லி அரசு தயாரித்த புதிய யோசனைகள் இலங்கை அரசிடம் சமர்பிக்கப்படுமென இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா கொழும்புக்குப் புறப்பட முன்னர் மதுரையில் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

✱ யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் நேற்றுப் பகல் முழுவதும் விமானப் படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

**30.01.1991**

இலங்கையில் இடம்பெற்று வரும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தியா எந்தக்கட்டத்திலும் பங்காற்றும் நிலையில் இல்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லாவுடன் கொழும்பு வந்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் துபே தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் அறிவிப்பு.

**31.01.1991**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியின் தலைமையிலான தமிழ்நாடு மாநில அரசு இந்திய ஜனாதிபதியால் நேற்றுத் திடீரெனக் கலைக்கப்பட்டதாகத் அறிவிப்பு.

# அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டும்

## நாடாளுமன்ற கன்னி உரையில் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே 06

அவசரகாலச் சட்டம் படிப்படியாக நீக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதியின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஹம்பாந்தோட்டை மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எனக்கு அதி கூடிய விருப்பு வாக்குகளை அளித்து என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். அதற்கு நான் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இங்கு விவாதிக்கப்படும் அவசரகாலச் சட்டம் எனது வயதைவிடவும் பழைமை வாய்ந்தது. 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பையடுத்து அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போது நாம் விவாதிக்கும் அவசரகாலச் சட்டம் 2005 ஆம் ஆண்டு லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்டதாகும்.

இந்த அவசரகாலச் சட்டம் எதிர்காலத்தில் முற்றாக நீக்கப்படவேண்டும். நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ஏற்ப இந்தச் சட்டம் படிப்படியாக நீக்கப்படவேண்டும்.

பிழையான அரசியல் கருத்துகளால் வடக்கு, கிழக்கில் அதிகமான இளைஞர்கள் பயங்கரவாத செயற்பாட்டில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இனிவரும் காலம் எமது நாட்டு இளைஞர்களுக்கு சுபீட்சமான காலமாக அமையவேண்டும் - என்றார்.(சி)

# தடுப்புக்காவலிலுள்ள பாலித தேவபெருமவை சபையில் கலந்துகொள்ள அனுமதி வழங்குக!

## சபாநாயகரிடம் ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, மே 06

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட எம்.பி. பாலித தேவபெரும நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள அனுமதி வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று சபாநாயகரிடம் கோரியது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் கூடிய போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அக்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

ஜோன் அமரதுங்கவே இந்த அனுமதி கோரலை முதலில் சபாநாயகரிடம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குக் கூட நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எமது கட்சியின் எம்.பி. பாலித தேவபெருமவுக்கும் அனுமதி வழங்கப்படவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இதுதொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவை எடுப்பார் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்தார். (சி)

# 6 கோடி உலகத் தமிழர்களால் 3 லட்சம் ஈழத்தமிழரைக் காக்க முடியாதுபோனதே!

## உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் கவலை

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்குச் சொந்த நாடும் அரசும் இல்லாதமை பெரும் குறையென உலக தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் கொடூரமான முறையில் நடத்தப்படுகிறார்கள். இதனைக் கண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு மௌனம் சாதிக்கிறது என்றும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள அம்பாங்கில் நடைபெற்ற உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டின் எழுச்சி முகாம் சந்திப்புக் கூட்டத்தில் கிருஷ்ணசாமி இவற்றைத் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு சொந்த நாடு வேண்டும் எனப் போராடிய தலைவனின் தாயாருக்கு மருத்துவம் பார்க்ககூட அனுமதியில்லை. இதனைக் கண்டு மனம் வேதனையடைகிறது.

6 கோடி தமிழர்களால் 3 லட்சம் தமிழர்களை காப்பாற்ற முடியாது போனமை வேதனை மிக்க கொடுமையாகும் எனவும் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இங்கு உரையாற்றிய மலேஷியாவின் பினாங்கு மாநில துணை முதல்வர் பேராசிரியர் டாக்டர் பீ. ராமசாமி, உலகத் தமிழினத்திற்கு முற்போக்குச் சிந்தனை மிகவும் அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

சிந்தனை பரிமாற்றங்களை உலகளாவிய நிலையிலுள்ள தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். தமிழினத்திற்கு அதிகமான தலைவர்கள் தேவையில்லை. சிறந்த தலைமைத்துவமே வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மே 6

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பிவைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்**

சீ.சிறிகவுதமி - 6ஏ2பிஎஸ், பா. சயந்தன் - 5ஏபி3சி, க.நேமினா - 4ஏபிசி2எஸ், ர.சோபனா - 2ஏபி4சி2எஸ், ர.யசோதரன் - 2ஏ2பி2சி2எஸ்.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தமிழ்மொழிமூலம்**

குலாங்கனா தெய்வேந்திரராஜா - 6ஏ2பிசி, கோபிகா செல்வக்குமரன் - 5ஏ2பி2சி, ஹம்சவேகினி தங்கவேல் - 5ஏ2பி2சி, செல்விழி தெய்வேந்திரம் 3ஏ3பி3சி, சுகன்யா குமாரலிங்கம் - 3ஏ3பி2சிஎஸ், வினோ தங்கவேல் - 4ஏ2சி3எஸ், பிரமிளா செல்லத்துரை - 3ஏ2பி3சிஎஸ், உஷானி ஜெயான்ந்தகுமார் - 3ஏ4சி2எஸ், சோபிதா சிவனேஸ்வரன் - 2ஏ4பி2சிஎஸ், வானுயா தெய்வந்திரம் 2ஏபி2சி4எஸ், பகீரதி கணேசமூர்த்தி - 2ஏ4சி2எஸ், வாஹினி சுப்ரமணியம் - 2ஏபி3சி2எஸ்.

**ஆங்கில மொழி மூலம்**

பாமிலா ஸ்ரீமுருகமூர்த்தி - 4ஏ2பி2சிஎஸ், ஹீரா பன்னீர்செல்வம் - 3ஏ2பி3சிஎஸ், றோகிதா அற்புதராஜா - 2ஏபி4சிஎஸ், பிரியதர்ஷனா ஆனந்தகுமார் 2ஏபி4சி2எஸ்.

**கரணவாய் மகாவித்தியாலயம்**

பு.தாஜ்மோகன் - 6ஏ2பிஎஸ், சி.மயூரன் - 4ஏ3சிஎஸ், பா.துவாரகா - 4ஏ4பிஎஸ், கு.விஜிக்கா - 2ஏ5சி2எஸ், கு.அஜந்தா - ஏ2பி2சி3எஸ், பா.உதயதர்சிக்கா - 2பிசி3எஸ், த.தர்சிக்கா - ஏபிசி3எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர்களின் அறிவுரை

* மௌனம் எதிரிகளை வெல்ல மட்டு மல்ல
பல தடைகளைத் தாண்டவும் உதவக்கூடிய சாதனம். - பிரேம் சந்த் -

* அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான்
உண்மையான விவேகம் என்கிறோம்.
- நெப்போலியன் -

* 'முடியாது' என்ற சொல்லே என் அகராதியில் கிடையாது
- நெப்போலியன் -

* எந்த நேரத்தில் எது நடந்தாலும் எதுவும் நடக்காதது போல் உங்கள் மன உறுதியைக் காட்டிக் கொள்ளுங்கள், அதன்படி மன உறுதியுடன் அடுத்த காரியத்தைக் கவனியுங்கள்.
- ஆர்னால்ட்பென்னட் -

* மிகச்சாதாரண மனிதர்கள்தாம் பிற்காலத்தில் மேதைகளாக மாறியிருக்கிறார்கள், அதற்கு அவர்களின் திறமையல்ல உயர்ந்த இலட்சியம்தான் காரணம். சாதனை புரிய வேண்டும் என்ற விருப்பத்தைவிட தொடர்ந்து உழைக்க வேண்டும் என்ற உறுதியும் நிதானமாகத் தொடர்ந்து உழைத்த அவர்களின் செயல்வேகமும்தான் இலட்சியத்தை அடைய வைத்தது. அதன் மூலமே அவர்கள் மேதையாக உலகிற்கு அறிமுகமானார்கள்.
- புல்வர் லிட்டன் -

* சொல்வது போலவே செயற்படுங்கள். செயற்படுவது போலவே சொல்லுங்கள். குறிப்பிட்ட இலட்சியத்தை நோக்கி உறுதியாய் நடந்து செல்லுங்கள். ஆனால், இயல்பாகவே அடக்கத்தை மீறிவிடாமல் இருக்கப்பழகிக் கொள்ளுங்கள்.
- ஷேக்ஸ்பியர் -

அ.ஜீன்கார்த்திகா
யாழ்.பல்கலைக்கழகம்.

# அதிக வேலை மூளைக்குப் பாதிப்பு

இன்றைய சமுதாயத்தில் சொந்தமாகத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அடுத்தவர்களிடம் வேலை பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட அளவில்தான் உழைக்க வேண்டும். வாழ்க்கையே உழைப்பு. ஆனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஒரு வாரத்திற்கு 40 மணி நேரம்தான் உழைப்புக்குச் செலவிடவேண்டும். உடல் உழைப்பை வெளிப்படுத்திச் செய்யும் வேலையாக இருந்தாலும், சிந்தித்துச் செய்யும் வேலையாக இருந்தாலும் இந்தக்கால அளவைத் தாண்டி ஒருவர் வேலை செய்வது அவருக்கு நல்லதல்ல என்கிறது இந்த ஆய்வு.

வாரத்திற்கு 40 மணி நேரத்தையும் தாண்டி வேலை செய்தால், அதனால் ஏற்படும் பாதிப்பு உடனே தெரியாது என்று கூறியுள்ள ஆய்வை மேற்கொண்டவர்கள், நடுத்தர வயதைக் கடந்த பின்புதான் இந்தப் பாதிப்பு உங்களுக்குத் தெரியவரும். குறிப்பாக, மூளையின் சுறுசுறுப்புக் குறைய ஆரம்பிக்கும் என்றும் எச்சரிக்கிறார்கள்.

அவர்கள் மேலும் கூறும்போது, சாப்ட்வேர் நிறுவனங்களில் வாரத்திற்கு 5 நாள்கள் வேலை செய்பவர்கள் தினமும் 10 மணி நேரத்துக்குக் குறையாமல் வேலை செய்கின்றனர். இதனால்தான் இவர்கள் எளிதில் சோர்வடைகின்றனர். மன அழுத்தத்துக்கும் ஆளாகின்றனர். அதில் இருந்து விடுபடத்தான் விடுமுறை நாள்களை ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று கழிக்கின்றனர் என்றனர்.

நீங்களும் 40 மணி நேரத்தையும் தாண்டி,
அலுவலகத்தையே கட்டி
அழுபவர் என்றால் இப்போதே உஷாராகிவிடுங்கள்.
இல்லையென்றால் பிரச்சினை
உங்களுக்குத்தான்.


தரு,
கொடிகாமம்.



# முற்றத்து முருங்கைமரம்

முற்றத்து முருங்கை மரம்
பூத்துக் கிடக்கின்றது
அணில் கோதிய பூக்கள்
இறைத்துக் கிடக்க,
பசுந் தளிர்கள் தலையாட்டும்
தழைத்த கிளைகளில்
தடித்தடியாய் காய்கள்
விதவிதமாய் ருசியூட்டும்
வறுவலாய், சுண்டலாய், குழம்பாய்
தாது விருத்திக்கும் சோகைக்கும்
மருத்துவனாய் உயர்வு பெறும்
அயலவர்க்கு உதவியாகும்
முன்னரும் இப்படித்தான்
பூரணமாய் பொலிந்து நின்ற
மரம் முறிந்து வீழ்ந்ததுவும்,
நகர் நீங்கிப் புகலிடம் தேடிப்
புறப்பட்டுச் சென்றதுவும்,
வரலாறாய் நினைவையூட்டும்
இன்றும் பயம் தோற்றம் கொள்ளும்
இரண்டு வருடங்கள் சென்றதும்
மீளவும் குடியேற்றம்
எதிர்பார்ப்புகள் எண்ணிலடங்கா
முற்றத்து முருங்கை மீண்டும்
விருட்சமாய் காட்சி பெற
எங்கிருந்தோ பற்றி வந்த
மயிர்க் கொட்டிகளின் தொல்லை
அடி மரத்தில் கரும் பட்டாய்
கனல் மூட்டிய சூளினோடு
மனைவியின் யுத்த பிரசன்னம்
மறு பொழுதில் அவை
மறுபடியும் மரத்தில் தோன்றும்
முருங்கை மரத்தின் கனவுகளில்
மனம் அல்லாடுகிறது
நித்தமும் பார்க்கையிலே
நீண்ட பயணத்தின் நினைவு
கிலேசத்தை உருவாக்கும்.

வே.ஐ.வரதராஜன், அரியாலை.



# இளவல்கள் வட்டம்

YOUTH

## கேள்விக்கென்ன பதில்?- 69இன் சரியான விடை

தனிநாயகம் அடிகள்.

## கேள்விக்கென்ன பதில்?- 69 இல் பரிசு பெறுவோர்

1. யோகநாதன் யசோதா, மணியம்பாடசாலை வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
2. ஸ்ரீ.சொரூபிகா, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
3. வே.குமாரசுவாமி, பரமந்தர் வளவு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

## கேள்விக்கு என்ன பதில்?-71

தேசியக் கொடியை முதன்முதலில்
உருவாக்கிய நாடு எது?
(சரியான விடையை 13.05.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

### இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங் கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-....................................
முகவரி:-....................................
:-....................................
........................ ....................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இந்த வாரம் வரலாற்றில்

**ஏப்பிரல் 31**



ஜேர்மனியின் எழுச்சிக்கு வழிவகுத்தவரும் சர்வாதிகாரியுமான அடோல்ஃப் ஹிட்லர் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி தன்னுடைய காதலியுடன் சேர்ந்து இரகசிய இடம் ஒன்றில் தற்கொலை செய்து கொண்டார்.

**மே 01**

நியூயோர்க்கில் புகழ்பெற்ற 'எம்பயர் ஸ்ரேட்ஸ்' கட்டடம் 1931 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி கட்டி முடிக்கப்பட்டு பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது.



**மே 02**



பிரிட்டிஷ் நாட்டின் பிரதான கட்சியான 'கொன்சர் வேட்டிவ்' கட்சியின் தலைவர் பதவியிலிருந்து தாம் விலகுவதாக 1997ஆம் ஆண்டு மே 2ஆம் திகதி ஜோன் மேஜர் அறிவித்தார்.

**மே 03**

பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் ஒன்றாக 1841ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி நியூசிலாந்து பிரகடனப் படுத்தப் பட்டது.



**மே 04**



கடற் பயணங்களை இலகுவாக்கு வதற்காக வெட்டப்பட்ட பனாமாக் கால்வாய் தொடர்பான வேலைகள் 1904 ஆம் ஆண்டு மே 4ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமானது.

**மே 05**

ஜெருசலேம் நகரின் முதலாவது அரசராகக் கொள்ளப்படுகின்ற நோர்மன் புனிதப் போராளி கொட்ஃப்றே' 1061ஆம் ஆண்டு மே 5ஆம் திகதி பிறந்தார்.



**மே 06**




பிரித்தானியாவின் முதல் தபால் தலையான 'பென்னி பிளாக்' 1840ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி வெளியிடப்பட்டு விநியோகிக் கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமநிலையில் முடிவடைந்த 'இந்துக்களின் போர்' துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை இணைந்துபெற்ற யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்கள் அதிபர், ஆசிரியர், விருந்தினர்களுடன்......
(படங்கள் : நேசன்)

## கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு விழா

கோப்பாய்,மே 6

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளயர் எஸ்.அண்ணாத்துரை, சிறப்பு விருந்தினர்களாக 511ஆம் படையணியின் கட்டளைத் தளபதி கேணல் ஜி.பி.கே.டபிள்யூ.கீர்த்தி கொஸ்தா, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எஸ்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-72)

## வடமாகாண துடுப்பாட்ட அணிக்கான வீரர்கள் தெரிவுப் பயிற்சி நாளை மறுதினம்

யாழ்ப்பாணம்,மே 6

வடமாகாண துடுப்பாட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் வடமாகாண துடுப்பாட்டப் பயிற்றுநர் ரவீந்திர புஸ்பகுமார தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 1991.09.01 இற்குப் பின்னர் பிறந்த நான்கு வீரர்களை ஒவ்வொரு பாடசாலையும் அனுப்புதல் வேண்டும்.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளும் வீரர்கள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டிகளில் அடைந்த பெறுபேறுகளை கல்லூரி அதிபரால் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்கவேண்டும்.

இப்பயிற்சிகள் யாழ்.மாவட்ட பாடசாலை துடுப்பாட்டச் சங்க அனுமதியுடன் நடைபெறுகிறது என யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் எஸ்.நிஷாந்தன் தெரிவித்துள்ளார். (6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 6

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'கரப்பந்தாட்ட புதிய விதிகள்' தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் இணைந்த கழகங்கள் தங்களுடைய கழக வீரர்களையும், பயிற்றுவிப்பாளர்களையும் மேற்படி கருத்தரங்குக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (201)

## இலங்கை ரெலிக்கொம் நிறுவனம் நடத்தும் மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, மே 6

இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மாபெரும் வலைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுடன் ரெலிக்கொம் நிறுவன அணிகளும் இப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

இப் போட்டிகளில் வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணிகளும்-

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி-

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆகியனவும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன. (6-86)

## ஜொலிஸ்ரார் வி.க. நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,மே 6

ஈ.எஸ்.பி.நிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010 ஆம் ஆண்டிற்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையோன 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் மாலை 5 மணியளவில் இடம்பெறவுள்ளது.

ஆகவே அழைக்கப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு போட்டி ஏற்பாட்டளர்கள் கேட்டுள்ளனர். (6-23)

## தென்மராட்சிப் பிரதேச கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 6

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட 16 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றுவதாக பிரதேச செயலகத்தின் விளையாட்டு அலுவலர் க.முகுந்தன் தெரிவித்துள்ளார். (6-207)

## யாழ்.பிரதேச செயலக உதைபந்தாட்டம்; நாவாந்துறை சென்.மேரிஸ் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரைஇறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்டம் தொடங்கியது முதல் விறுவிறுப்பாக ஆடினர். ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 பெனால்டிகள் வழங்கப்பட்டன. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (6-23)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## மென்பந்துச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே் 6

இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் புலம்பெயர் வாழ் உறவுகளின் அனுசரணையுடன் 'இந்துவின் கிண்ணம்' மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

அணிக்கு ஏழுபேர் கொண்ட 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டி விரைவில் இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-224)



நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அஞ்சல் ஓட்டப்போட்டியில் ஒரு காட்சியையும் அலுவலர்கள் கயிறு இழுப்பதையும், சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கு கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

வலி.மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும் கலை, இலக்கிய விழாவின் இரண்டாம்நாள் நிகழ்வுகள் நாளையதினம் சங்கானை கலாசார மண்டப திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளன.

வலி.மேற்குப் பிரதேச செயலரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வலி.தென்மேற்குப் பிரதேச செயலர், வலி.மேற்கு பிரதேச சபைச் செயலர், சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இந்த நிழ்வில் வாத்திய விருந்து, ஆடல் அபிநயம், இசையரங்கு, கிராமியப் பாடல், கிராமியநடனம், குழுப்பாடல், வெடியரசன் வட மோடி நாட்டுக் கூத்து போன்ற பல கலாசார நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன. (க-29)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1187 நீலம்

04-05-2010

15 16 22 28

கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா. 5,922,325/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 204,241 | 20/- | 4,084,820/- |
| 2 இலக்கங்கள் | 18,775 | 40/- | 751,000/- |
| 1 இல. + லக்கினம் | 18,558 | 60/- | 1,113,480/- |
| 2 இல. + லக்கினம் | 1,700 | 200/- | 340,000/- |
| 3 இலக்கங்கள் | 512 | 1000/- | 512,000/- |
| 3 இல. + லக்கினம் | 39 | 10,000/- | 390,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,922,325/- | - |
| மொத்தம் | | | 7,791,300/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 243,833 | | 8,291,300/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,378,550/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுகள்.

| | |
|---|---|
| கம்பஹா | 401216945-1-45 |
| கண்டி | 401209952-4-20 |
| கண்டி | 401203351-6-07 |
| கொழும்பு | 401204925-8-10 |
| பதுளை | 401211032-2-44 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



HAPPY BIRTHDAY

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி தவநேசன் - செல்வமலனி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

# அபினேஷ்

தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (06.05.2010) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அபினேஷ், அம்மன் துணை கொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, நந்து, அபி, நிவி, தூரி, வர்ணா, மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், தம்பிமார், மைத்துனன்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

செல்வஸ்தான்,
இமையாணன்.



## தேவை

யாழ்.நகரில் Travels இற்கு ஏற்ற கடை தேவை. தொடர்பு கொள்ளவும். 0773525375, 0772222083.



## முகாமையாளராக ஓர் அரிய சந்தர்ப்பம்

வாழ்க்கையின் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்க்கும் துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் O/L, A/L சித்திபெற்றவராயின் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது Canadian நிறுவனத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முகாமைத்துவப் பயிற்சி பெறுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும்பெற ஓர் அரிய சந்தர்ப்பம். பயிற்சிக்காலம் 6 மாதமாகும்.

Note: சிங்கள மொழி தெரிந்திருந்தால் அதனை மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்

*Contact:* V.Udayarajan 0717494735


## 'தென்றல் குயில்' நிகழ்ச்சிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்மக்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் புதிய நிகழ்ச்சிகள் பலவற்றை காலத்துக்குக்காலம் அறிமுகப்படுத்துகின்றது. அந்தவகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் சேவை தென்றலின் நட்சத்திரக்குயில் (தென்றல் ஸ்ரார்) என்னும் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தவுள்ளது.

தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளிடையே மறைந்து இருக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் வகையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாடும் திறமை கொண்ட தமிழ்பேசும் இளைஞர், யுவதிகள் இந்நிகழ்ச்சிக்கு விண்ணப்பிக்க முடியும். சுருதியுடன் தாளம் பிசகாது நல்ல குரல் வளத்துடன் பாடக்கூடியவர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியும். குறிப்பாக நாடளாவிய ரீதியில் இளைய தலைமுறையினரின் கலையார்வத்தை ஊக்குவிக்கவும், இசைத்துறையில் திறமைகளை நிரூபிக்கவும் நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும். விண்ணப்பங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்பதாக 'தென்றலின் நட்சத்திரக்குயில், தென்றல் ஸ்ரார், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், த.பெ.இல.574, கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். (50-201)


# மண்ணகப் பிறப்பின் 17 ஆவது பிறந்தநாள் நினைவும் விண்ணக நுழைவின் 54 ஆவது நாள் நெஞ்சகலா நினைவுகளும்

இறைவன் படைப்பில்:
06.05.1993

ஈனர்கள் நெருப்பில்:
14.03.2010

கண்ணுக்குள் கண்ணாக
பண்புடன் பாசத்துடன்
உனை பாரில்
வளர்த்தோமே....
பொல்லாத காலனவன்
இடை நடுவே
உனை பிரித்துவிட்டான்
ஏதுமறியா பச்சிளம்
பாலகனாய் - நீ
துள்ளித் திரிந்த
காலங்கள் - நிழல்போல்
மனதில் தோன்றுதே....
நாம் பார்க்கும் இடமெங்கும்
உன் உருவம்
தெரிகின்றதே...
நீ-சிந்திய
சிரிப்பொலிகள்
எமைவிட்டு
அகலவில்லையே....
சின்னஞ்சிறு
பாலகனாய் - எங்கள்
கைகளில் தவழ்ந்த
அந்த தருணங்கள்
இன்று உயிரூட்டி
எமை அழவைப்பதேன்?
பதினேழு வயதானாலும்
நீ எமக்கு பச்சிளம்
பாலகன் தானடா....
காலங்கள் கரைந்தோடினாலும்...
உன் நினைவுகள்
என்றுமே எம்மைவிட்டு
அகலவே அகலாது....



அமரர்
## திருச்செல்வம் கபிலநாத்
( O/L மாணவன், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

(சி-567424)

நினைவால் துயருறும் :
குடும்பத்தினர்.

அருள்விநாயகர் ரேடர்ஸ்
அருள்விநாயகர் மோட்டோர்ஸ்
பெரிய அரசடி, சாவகச்சேரி.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இந்தியாவுக்கான விஸா விண்ணப்பங்களை ஏற்பதற்கான முகவர் அலுவகம் யாழ்.பிறவுண் வீதியில் நேற்று திறந்து வைக்கும் நிகழ்வு இடம் பெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா வைபவரீதியாக நாடாவைவெட்டி அலுவலகத்தைத் திறந்து வைப்பதை முதற் படத்திலும், யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் லியூகே, 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி சரத் விஜயசிங்க, வி.எம்.எஸ். குளோபல் முகவர் நிறுவனத்தின் தென் ஆசியாவுக்கான உதவி பதில் தலைவர் சுனில் கட்டோச் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை அடுத்துள்ள படங்களிலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவுடன் உரையாடுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள் : உமா)

# யாழ்ப்பாண - இந்திய மக்களின் பிணைப்பை விஸா அலுவலகம் மேலும் வலுவுறச் செய்யும்

## நேற்றைய அங்குரார்ப்பண நிகழ்வில் தூதுவர் காந்தா

யாழ்ப்பாணம்,மே6

யாழ்ப்பாண மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே நிலவும் நெருங்கிய பிணைப்பை இன்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படும் இந்திய விஸா விண்ணப்ப அலுவலகம் மேலும் வளர்ச்சியுறச் செய்யும்

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இந்திய விஸா விண்ணப்ப முகவர் அலுவலகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தபின் உரையாற்றிய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

பிறவுண் வீதி, 89 ஆம் இலக்கத்தில் இந்திய விஸா அலுவலகம் நேற்றுப் பிற்பகல் இந்தியத் தூதுவரால் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய இந்தியத் தூதுவர் -

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் இந்த அலுவலகம் இப்பிரசேத்தில் வசிக்கும் மக்களில் அதிகமானோரை விஸா பெற்று அடிக்கடி இந்தியா செல்வதை ஊக்கப்படுத்தும். இதனால் யாழ்ப்பாண மக்களினதும் இந்திய மக்களினதும் உறவுகள் பலமடையும்.

அத்துடன் எதிர்காலத்தில் இந்தியத் துணைத் தூதரகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கும் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் மற்றும் கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையே கப்பல் போக்குவரத்துச் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கும் இந்திய மத்திய அரசு இணங்கியுள்ளதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி சரத் விஜயசிங்க, வடமாகாணத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் லியூகே ஆகியோரும் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-க)

# சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள பிரி. நாடாளுமன்றத் தேர்தல் இன்று!

## கருத்துக்கணிப்பீட்டில் கன்சர்வேடிவ் கட்சிக்கு வெற்றிவாய்ப்பு



தொலைக்காட்சி விவாதத்தில் கோர்டன் பிறவுண், டேவிட் கெமரூன், நிக்கிளிக்.

லண்டன்,மே6

650 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தல் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. இத்தேர்தலில் மும்முனைப் போட்டி நிலவுகிறது. வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கும் இரவு 10 மணிக்கும் இடையில் இடம்பெறும்.

சர்வதேசத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ள இத்தேர்தலில், தொழிற் கட்சித் தலைவர் கோர்டன் பிறவுண், கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் டேவிட் கெமரூன், லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் நிக் கிளிக் ஆகியோருக்கிடையே மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

ஆளும் தொழிற்கட்சி நான்காவது தடவையாகவும் ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என அதீத நம்பிக்கை கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரொனி பிளேயர் தமது பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து, தொழிற்கட்சியின் தலைவரான கோர்டன் பிறவுண் பிரதமரா னார்.

கோர்டன் பிறவுண் இத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் டேவிட் கமரூன், லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் நிக்கிளிக் ஆகியோரின் பலத்த போட்டிக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளார்.

இந்த பிரிட்டிஷ் தேர்தலில் முதன்முதலாக முக்கிய இம்மூன்று தலைவர்களும் தொடர்ச்சியாக தொலைக்காட்சி விவாதங்களில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். கருத்துக்கணிப்பீட்டில் கன்சர்வேடிவ் கட்சிக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என தெரியவந்துள்ளது.

கொம்ரஸ் லிமிட்டெட் மேற்கொண்ட கருத்துக்கணிப்பீட்டில், கன்சர்வேடிவ் கட்சிக்கு 37 சதவீத வாக்குகளும், தொழிற்கட்சிக்கு 29 சதவீத வாக்குகளும், லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 26 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

யுசொவ் மேற்கொண்ட கருத்துக்கணிப்பீட்டில் கன்சர்வேடிவுக்கு 35சதவீத வாக்குகளும், தொழிற்கட்சிக்கு 30 சதவீத வாக்குகளும், லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 24 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

கருத்துக்கணிப்பீட்டின்படி, கன்சர்வேடிவ் கட்சிக்கு மொத்த ஆசனங்களில் 294 ஆசனங்கள் கிட்டலாம் என கொம்ரஸ் கருத்து வெளியிட்டுள்ளது.

# பிரபாவின் தாயாருக்கு தமிழகத்தில் சிகிச்சைக்கு மத்திய அரசு அனுமதி?

புதுடில்லி,மே6

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் தமிழகத்தில் சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவார் என்று தெரிகிறது. இதற்கான அனுமதியை மத்திய அரசு அளிக்கும் என்று உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது பிரபாகரனின் தாய் பார்வதி அம்மாள் மலேஷியாவில் உள்ளார். நோயாளியான அவருக்கு சிகிச்சையளிப்பதற்காக கடந்த மாதம் 16ஆம் திகதி சென்னைக்கு அழைத்து வரப்பட்டார். ஆனால் சென்னை விமான நிலையத்தில் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டு மீண்டும் மலேஷியாவுக்கு அனுப்பப்பட்டார். இந்த விவகாரம் தமிழகத்தில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. இது சட்டப்பேரவையிலும் எதிரொலித்தது. இதையடுத்து மத்திய அரசுக்கு முதல்வர் கருணாநிதி கடிதம் எழுதினார்.

80 வயதான பார்வதி அம்மாள் தமிழக அரசு பரிந்துரைக்கும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும். சிகிச்சை முடிந்தவுடன் அவர் எந்த நாட்டிலிருந்து வந்தாரோ அங்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு அனுமதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு விரைவிலேயே தமிழகத்துக்கு கடிதம் அனுப்ப உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழக அரசு பரிந்துரைக்கும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டும். சிகிச்சைக்கான தொகையை தமிழக அரசே ஏற்கும் என்ற நிபந்தனைகளை பார்வதி அம்மாள் ஏற்றுக் கொண்டால் அவருக்கு அனுமதி அளிக்கப்படும் என்று திங்கட்கிழமை டில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமிழக முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டார்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால், அவருக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கும் என்று தெரிகிறது.

# ரஷ்ய குண்டுத் தாக்குதலில் 11 பொலிஸ்காரர்கள் காயம்

மொஸ்கோ,மே6

ரஷ்யாவின் இன்குஷெட்டியா மாநிலத்தில் உள்ள நஸ்ரான் என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நிலையம் மீது கைஎறி குண்டுகள் வீசப்பட்டன. இதில் 11 பொலிஸ்காரர்கள் காயமடைந்தனர். காயமடைந்த 11 பேரும் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

ரஷ்யாவில் செசன்யா மாநிலத்தைத் தனிநாடாகப் பிரிக்கக்கோரித் தீவிரவாதிகள் ஆயுதப்போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த மாநிலம் அருகே உள்ளது இன்குஷெட் டியா மாநிலம்.

# கொழும்பு பட விழாவை வேறு நாட்டுக்கு மாற்றக்கோரி சென்னையில் போராட்டம்!

மதுரை,மே6

கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவை வேறு நாட்டுக்கு மாற்றக் கோரி சென்னையில் 'தமிழர் களைக் காப்போம்' இயக்கத்தின் தகவல் தொழில்நுட்பத் துறையினர் சார்பில் வரும் சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

தமிழர் இனப்படுகொலை நடந்த இடத்தில் இன்னும் குருதிச் சுவடுகள் கூட காயாத நிலையில், ஹிந்தி திரையுலகினர் தமிழினப் படுகொலையை மறைத்து களியாட்டத்தில் மூழ்கிடத் திட்டமிடுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும் இந்த விழாவுக்கு அமிதாப் பச்சன் செல்லக் கூடாது என்று கோரி அவரது வீட்டை முற்றுகையிட்டு தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில், விருது வழங்கும் விழாவின் இடத்தை கொழும்பில் இருந்து வேறு நாட்டுக்கு மாற்றக் கோரி 'தமிழர் களைக் காப்போம்' இயக்கத்தின், தகவல் தொழில்நுட்பத்துறையினர் 8ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம்
ப.நோ.கூ.சங்கத்தின்
கணக்காளராக
கடமையாற்றி பதவி
உயர்வுபெற்று
கூட்டுறவுப்
பரிசோதகராக நியமனம்
பெற்றுள்ள

**திரு.நா.குமணதாசன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம்.
(சி/567434)

## நல்லூர் பிரதேச சபை

## அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை தனது மக்களுக்கு சேவைகளை வழங்கும் பொருட்டு ஆயுள்வேத வைத்தியசாலை, கலாசார மண்டபம், விளையாட்டு மைதானம், வாகனத்தரிப்பிடம் போன்றவற்றை நிறுவும் நோக்குடன் பின்வரும் ஆதனங்களை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே அவ் ஆதனங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பொதுமக்கள், நிறுவனங்கள் யாரும் ஈடுபட வேண்டாம் என அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் அவ் ஆதனங்களின் உரிமை தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் ஏதாவது இருப்பின் உடனடியாக எமது அலுவலகத்திற்கு தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

1. இல.281, இருபாலை வீதி, கோண்டாவிலில் உள்ள ஆதனம்.
2. இல.21/1, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தியிலுள்ள ஆதனம்.

மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.
04.05.2010 (சி/567431)

## கண்ணீர் அஞ்சலி



சரவணை சேவா மன்றத்தின் கனடா
கிளையின் இணைப்பாளர்
சி.சண்முகராசன் அவர்களின்
பாசமிகு சகோதரி

**திருமதி மங்கையர்க்கரசி ஜெயபாலன் (கேதீஸ்)**

பிரான்ஸில் 29.04.2010 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது சேவா மன்றம் ஆழ்ந்த கவலை அடைகின்றது. அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
சரவணை சேவா மன்றம், சரவணை.
(97523)

## கண்ணீர் அஞ்சலி



பண்பின் சிகரம், அன்பின் உருவம்

**மாணிக்கம் இராஜேஸ்வரன்**

(உரிமையாளர், வேல்முருகன் ரேடர்ஸ்)

அவர்களது பிரிவு குறித்து ஆற்றொணாத் துயருறுவதுடன் அவர் தம் குடும்பத்தினர் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

க.கிருஷ்ணராஜா
ஏசியன் பெயின்ற்ஸ் லங்கா லிமிட்டட்
யாழ்ப்பாண விநியோக நிலையம், 32, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சுந்தரலிங்கம் தனுஷன்



மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும், ரான்ஸ்போமர் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் தனுஷன் நேற்றுமுன்தினம் (04.05.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் (சுறுளி) - ஜெனிற்றா (சாந்தி) தம்பதியரின் அன்பு மகனும், சர்மிளா, சயறூபன், கயறூபன், நிறோயன், ரூவிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (06.05.2010) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரான்ஸ்போமர் வீதி,
உடுவில். (97825)
தகவல்:
குடும்பத்தினர்.

## பவள விழா

யாழ்ப்பாணம், மே. 06

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் பவள விழா நிகழ்வுகள் நாளை வெள்ளிக் கிழமை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் புலவர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளைத் தொடர்ந்து வித்தியாலய பழைய மாணவி திருமதி விஸ்வலிங்கம் சசிகலாவின் நினைவாக அன்னாரின் குடும்பத்தினரால் வித்தியாலய மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வித்தியாலய பவள விழாவையொட்டி நூல் வெளியீடும் இடம்பெறும். (ஒ-207)

## கண்டெடுக்கப்பட்ட பணம் யாருடையது?

யாழ்ப்பாணம், மே. 06

யாழ். மேல் நீதிமன்றின் அருகில் ஒருதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டு யாழ். மேல் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ)


**SHAMROCK**
சுச்சமோட்டை, யாழ்.
**O/L REPEAT**
(மீண்டும் எடுப்பவர்களுக்கு ஆரம்பமாகியுள்ளது)

## தேவை

சாவகச்சேரி, சங்கத்தானையில் இயங்கும் மருந்தகத்திற்கு உதவியாளர் தேவை. Pharmacist க்கு படிக்க ஆர்வமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொ.பே.0773460150

## O/L DAY CLASS

புதிய பாட அலகில் இருந்து
மீண்டும் மீட்டல் ஆரம்பம்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மே 10இற்குப் பின்னர் அனுமதிகள்
வழங்கப்படமாட்டாது.
அதிபர்.
The Express Institute
irupalai, Kopay.

## காணி விற்பனைக்கு

யாழ்.நகர் மத்தியில்
2 ¾ பரப்பு
அளவு கொண்ட
வெறும் காணி
விற்பனைக்குண்டு.
தொ.பே.0213215812

## உடன் விற்பனைக்கு

புறொயிலர் வகை சேவல் கோழிகள்
மொத்தமாக உடன் விற்பனைக்குண்டு.
சராசரி நிறை 900 கிராம்
விலை ரூபா 200.00 மட்டும்.
இதே இன குஞ்சுகளும் மொத்தம்
மற்றும் சில்லறைக்கு
விற்பனைக்குண்டு.
ஒரு மாதக்குஞ்சுகள் விலை ரூபா 60
மட்டுமே. உடன் தொடர்பு
கொள்ளுங்கள்.
தொ.பே. 021 7200616

## தவறிவிட்டது

சங்கானையை வதிவிடமாகக் கொண்ட மாரிமுத்து அருணகிரிநாதன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மாகணிப்பாய்க்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே.0774215858-ஆஸ்பத்திரிவீதி.சங்கானை.

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, இராசபாதைக்கு மிக அருகில் கிணற்று வசதியுடன் வீடு கட்டக்கூடிய 4 ½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: தொ.பே.இல. 0779814551





## உலகக் கிண்ணப் பரிசுப் போட்டி

உலகக் கிண்ணத்தை முன்னிட்டு 'உதயன்' தனது விளம்பரதாரரின் அனுசரணையுடன் தனது வாசகர்களுக்கிடையே நடத்தும் மாபெரும் பரிசுப்போட்டி.



**விதிகள்:**

1. நாளாந்தம் ஒரு வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவர்.
2. ஒவ்வொரு வெற்றியாளருக்கும் உரிய பரிசுப் பொதி 1500/- இற்கு மேற்பட்டதாக இருக்கும்.
3. ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
4. மேலும் இவற்றுடன் அனைத்துப் போட்டியாளர்களில் இருந்து மூன்று மேலதிக வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். இவர்களுக்கான பரிசு விபரம்:

★முதலாம் பரிசு 5000/- ★இரண்டாம் பரிசு 3000/-
★மூன்றாம் பரிசு 2000/-

★'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனில் மட்டுமே விடைகள் அனுப்பப்படவேண்டும்.

★ஒரு போட்டி தொடர்பாக ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.

★அனைத்துப் போட்டிகளுக்குமான முடிவு திகதி 20.05.2010

★வெற்றிபெற்றவர்களின் விவரம்: தபால் மூலமும் பத்திரிகை வாயிலாகவும் அறிவிக்கப்படும்.

★இப்போட்டி தொடர்பாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னர் சின்னப்பிள்ளை



அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சின்னப்பிள்ளை நேற்று (05.05.2010) புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னரின் அன்பு மனைவியும், தங்கராசா, அழகரத்தினம், திரவியம், சந்திராதேவி, அன்ன லக்ஷ்மி ஆகியோரின் தாயாரும், முருகேசு கிருஷ்ணபிள்ளை (அல்லாரை ஐயா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம். (சி/567428)
தகவல் : கிருஷ்ணபிள்ளை
(மருமகன்).

### நாகலிங்கம் நாகேஸ்வரி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வதிவிடமாகவும், கொக்குவில் கிழக்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட நாகலிங்கம் நாகேஸ்வரி நேற்று (05.05.2010) புதன் கிழமையன்று காலமானார்.

அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை (அப்போதிக்கர், மூளாய் வைத்தியசாலை)- இராசம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- செல்லாச்சி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, இராஜேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி (கனடா), விக்கினேஸ்வரி, திலகேஸ்வரி (கொழும்பு), தவராசா, பத்மராசா (சுவிஸ்), குணலட்சுமி (லண்டன்), காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி (அச்சுவேலி), துரைராசா (சுவிஸ்), இரண்ட குபேரன் (கனடா), விசாகரத்தினம், துரையப்பா (கொழும்பு), யாழினி, அமுதா (சுவிஸ்), காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, மற்றும் நாகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்மசிறி,நாகரூபன் (லண்டன்), நாகசுமிதினி, நாகதர்ஷினி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), நிஷாந்தன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உமாதேவி, துசித்தா (லண்டன்), சரவணபவன் (விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்), பாமினி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், விஜிதரன், தினேஷன், கிருஷாந், ஜனனி, சரண்யன், அஷ்வர்யா வருண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நாகலிங்கம் (கணவர்)
சரவணபவன் (மருமகன்)
கலைவாணி மில் வீதி,
கொக்குவில்,கிழக்கு, கொக்குவில். 0718565659. (97820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்கள் பயங்கர உணர்வின் மத்தியில் அங்கு சிவில் நிர்வாகம் நடைபெறவில்லை....!

## நல்லெண்ணத்தைக் காட்டி அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோருகிறார்



அ.விநாயகமூர்த்தி

கொழும்பு, மே. 06

"அரசு தனது நல்லெண்ணத்தை வெளிக் காட்டி தடுப்புக் காவலில், சிறைச்சாலைகளில் இருக்கின்ற சகல தமிழ்க் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்யவேண்டும்" -இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட செய்தி ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். அதனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் ஏற்றுக் கொண்டு ஆமோதித்தும் இருந்தார். அண்மையில் வெளியான 'ஐலண்ட்' பத்திரிகைச் செய்தியின் பிரகாரம் இந்த நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக் குறித்தும் பேசியுள்ளார்.

அரச துறையில் சிரேஷ்ட பதவி வகிக்கும் அலுவலர்கள் அரசியல் ஈடுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதுடன் அவர்கள் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதே மரபாகும். மேலும் தாபன விதிக்கோவையானது சிரேஷ்ட அரச அலுவலர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அண்மையில் மாற்றம் பெற்றுள்ளதா என்று எனக்குத் தெரியவில்லை.

இந்த விடயத்தை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

14 உறுப்பினர்களைக் கொண்டு வடக்குக் கிழக்குத் தமிழர்களின் குரலாக அவர்களை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இந்த அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதை மிகத் தீவிரமாக எதிர்க்கின்றது. ஒரு நாட்டில் அவசர கால நிலை காணப்படும் பொழுது மட்டுமே அவசரகால விதிகள் பிரகடனம் செய்யப்படும். அதன்படி இந்த அவசர கால ஒழுங்கு விதிகள் தற்போது தேவையற்றவை. பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால ஒழுங்கு விதிகள் போன்ற விசேட சட்டங்கள் படையினருக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கியுள்ளதுடன் அதன் விளைவாக மனித உரிமை மீறல்கள் வலுவாக இடம் பெறுகின்றன.

### யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பயங்கர உணர்வு

சட்டத்துக்கு முரணான கைதுகள், ஆள் கடத்தல்கள், கப்பம் கோருதல், கொள்ளைச் சம்பவங்கள், அநீதியான கொலைகள் ஆகியன இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தொடராக இடம்பெற்று வரும் கடத்தல்கள், கொலைகள், கற்பழிப்புச் சம்பவங்கள் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களாலேயே நடத்தப்படுகின்றன என்ற பயங்கர உணர்வு யாழ்ப்பாண மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

பொலிஸாருடைய அறிக்கையை பொறுத்தவரையில் கடந்த மாதத்தில் மட்டும் இரண்டு கொலைச் சம்பவங்கள், ஒரு கற்பழிப்புச் சம்பவம் மற்றும் இரண்டு கடத்தல் முயற்சிகள் என்பன இடம்பெற்றுள்ளன என அறிய முடிகிறது. கடந்த மார்ச் மாத முற்பகுதியில் மாணவன் கபிலநாத் கடத்தப்பட்டு அவன் விடுதலைக்காக மூன்று கோடி ரூபா கப்பமாகக் கோரப்பட்டது எனினும் அவனது பெற்றோர் நிராகரித்த போது கொடூரமான முறையில் அவன் கொலை செய்யப்பட்டான்.

இந்த வாரம் மோட்டார் பொறியியலாளரான பி. மகேஸ்வரன் இலத்திரனியல் பொறியியலாளரான எஸ். மகேந்திரன் ஆகியோர் ஒரு குழுவினரால் கடத்தப்பட்டு முறையே ரூபா 50 லட்சம், ரூபா 20 லட்சம் கப்பம் கோரப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, உறவினரால் மேற்கொள்ளப்பட்ட உடனடி நடவடிக்கையால் கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டு யாழ். நகருக்கு அண்மையில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து கடத்தப்பட்டவர்கள் மீட்கப்பட்டனர்.

மேலும் இம் மாத முற்பகுதியில் இடம்பெயர்ந்து மானிப்பாயில் தனது உறவினர் வீட்டிற்கு வந்த இளம் பெண் பிள்ளை ஒருவர் குழுவாக வந்த முரடர்களால் கற்பழிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

கோண்டாவிலில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஓர் இளம் பெண்பிள்ளையைக் கட்டிப் பிடித்துக் கடத்த முற்பட்ட போது அயலவர்கள் தலையிட்டதால் அம் முயற்சி முறியடிக்கப்பட்டு அவர்கள் தப்பி ஓடியிருந்தனர்.

இச் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் இராணுவத்தினர் இதன் பின்னணியில் இருக்கலாம் எனப் பொலிஸார் விசாரணைகளின் போது சந்தேகிப்பதாகத் தெரிய வருகின்றது.

மேலும் 13 வயது நிரம்பிய ரி. அஜித்குமார் என்பவர் மானிப்பாய் முகாமிற்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த போது கறுப்பு வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டுப் பின்னர் அவன் கூச்சலிட்டபோது விடுவிக்கப்பட்டான்.

யாழ்.வடமராட்சி தும்பளை வாசியாகிய மகாலிங்கம் சதீசன் 02.05.2010 இல் நெல்லியடியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### யாழ்ப்பாணத்தில் நடப்பது சிவில் நிர்வாகம் அல்ல

அநீதியாக இடம்பெறும் கொலைகள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மலிந்து விட்டன என்றே கூற வேண்டும். அத்துடன் அங்கு நடைமுறையில் இருப்பது இராணுவ ஆட்சியே தவிர சிவில் நிர்வாகம் அல்ல என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன்.

இக் கொடுஞ்செயல்கள் யாவும் அவசர கால ஒழுங்கு விதிகளின் பலாபலன்களாகவே இடம்பெறுகின்றன என்பதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

### நாடாளுமன்றில்...

சர்வதேச மன்னிப்புச் சபை பல சந்தர்ப்பங்களில் இத்தகைய அவசரகாலச் சட்டங்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டுமென்றும் அவர் அதில் காணப்படும் சில கொடுமையான விதிகள் மிகப் பரந்தளவிலான மனித உரிமை மீறல்கள் பல ஆண்டு காலமாக இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

மிகக் கொடுமையான விதிகள், பிரமாணங்கள் அடங்கிய தொகுதிக்குப் பதிலாக மனித உரிமையுடன் சிநேகித பூர்வமான சட்டங்களை மாற்றீடு (24 ஆம் பக்கம் பார்க்க)

T/20 WORLD TWENTY20 WEST INDIES 2010

## கிரிக்கெட் கோலாகலம் 30.04.2010 – 16.05.2010

# மழையினால் ஆட்டம் ரத்து சுப்பர் - 8 க்குள் இங்கிலாந்து!

கஜானா, மே6

இங்கிலாந்து - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழைகாரணமாக கைவிடப்பட்டதால் இங்கிலாந்து அணி சுப்பர் - 8 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சி.சியின் 3 ஆவது ருவென்ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அயர்லாந்து இங்கிலாந்து அணிகள் மோதின.



இதில் நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் களமிறங்கிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவல்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து சார்பில் துடுப்பெடுத்தாடிய லும்ப் 3 பௌண்டறிகளுடன் 14 ஓட்டங்களையும் மோர்கன் 5 பௌண்டறிகளுடன் 45 ஓட்டங்களையும் றைற் 1 சிக்ஸருடன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

அயர்லாந்து சார்பில் பந்து வீசிய ரன்கீன், ஓபிறைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸ்ரன், போத்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 1.2 ஓவர்களுக்கு 4 ஓட்டங்களைப்பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

பின்னர் துடுப்பெடுத்தாடியபோது போர்ரர்பீல்ட் 4 ஓட்டங்களையும் ஸ்ரைலிங் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்க அடுத்து வந்த ஓபிறைன் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களைப்பெற்றிருந்தார்.

அயர்லாந்து அணி 3.3 ஓவர்களை எதிர்கொண்ட நிலையில் 14 ஓட்டங்களுக்கு ஒருவிக்கெட்டை இழந்திருந்தது. இந்நிலையில் மழை தொடரவே ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இதன் மூலம் இங்கிலாந்து அணி சுப்பர் - 8 சுற்றுக்கு தகுதி பெற்றது.

**போட்டி இல.05**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

* அனுப்புபவர் பெயர் : ..........
* முகவரி : ..........
* தொ.பே.இல. : ..........

**கேள்வி:**

1. கடந்த சர்வதேச ருவென்ரி-20 உலக்கிண்ணப் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டங்களைக் குவித்த வீரர் யார்?
..........
2. 3 ஆவது உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டியில் பங்குபற்றும் அணிகளின் எண்ணிக்கை யாது?
..........
3. இல.252, 254, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ABHI கணனி (PC PARADISE இன் கிளை நிறுவனம்) நிறுவனம் வழங்கிய சேவைகள் எவை?
..........

போட்டி இலக்கம் 05 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு ABHI கணனி நிறுவனத்தினால் ரூபா 2000/- பெறுமதியுள்ள பரிசுப்பொதி ஒன்று வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன்பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

Barnabas இன் மலிவு விற்பனை
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
★ 40 % Special Offer, 40% கழிவுடன்...
★ 14" Wega Sony, 21" Wega Sony, 29" Wega Sony மற்றும் G 21 T.V. கள்
★ DVD Player, Amp, Box, Dish Antenna, Home தியேட்டர் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மிகக்குறைந்த விலையில்
5 வருட உத்தரவாதம்
Life Time Free Service
உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு...
மதன் எலக்ரோனிக்ஸ் சுதுமலைச் சந்தி, மானிப்பாய். 0217901574, 0777448668.
பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ் 360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217900728, 0777448668

சாரங்கன் பூஞ்சோலை
★ கண்ணைக் கவரும் குரோட்டன்கள்.
★ கண்ணைக் கவரும் சைப்பிரஸ்கள்.
★ இதர பூக்கன்றுகள்.
★ சீமெந்து, பிளாஸ்ரிக்கிலான பூஞ்சாடிகள்.
★ பூக்கன்றுகளுக்கு பாவிக்கப்படும் மருந்துகள், பசளைகள்.
★ வீட்டினை அலங்கரிக்கும் மாபிளிலான பூவாசுகள்.
குறிப்பு: சீமெந்திலான பெரிய சாடி 160/-
இவைகள் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள சாரங்கன் பூஞ்சோலை
295, பலாலி வீதி, ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

Sunny Auto பெயின்ற் கூடிய விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
Sunny HI Build Lacquer
Pearl/Metalic HI Build Lacquer
Causeway பெயின்ற் வகைகளையும் கட்டடப்பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
GOWTHAM & CO
பருத்தித்துறை வீதி, அச்சுவேலி.
தொ.பே: 0776527147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தனது பெரும்பான்மையைப் பயன்படுத்தி தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

## விஜயகலா மகேஸ்வரன் நாடாளுமன்றில் கன்னி உரை



கொழும்பு, மே. 06

பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கும் அரசு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதற்கு தயங்காமல் முன்வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தனது கன்னி உரையை நிகழ்த்திய போதே திருமதி மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது கணவர் மகேஸ்வரன் தமிழ் மக்களுக்காக அயராது குரல் கொடுத்தமையினாலேயே சிவதலத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் போட்டியிட்டு மக்களின் ஆணையைப் பெற்று இந்த உயரிய சபைக்கு வந்தவர் எனது கணவர் மகேஸ்வரன். அவர் விட்டுச் சென்ற பணியை, சேவைகளைத் தொடர வேண்டும் என்ற அவாவிலேயே நான் இங்கு வந்துள்ளேன்.

யுத்தத்தின் போது குடாநாட்டு தமிழ் மக்கள் உட்பட ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் துன்பத்தை அனுபவித்தனர். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள போதும் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்கள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சும் செயற்பாடுகள் இன்னும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

### 12,000 தமிழ் இளைஞர்களின் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைப்பு

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியேற்றப்படவில்லை. யுத்தம் முடிவடைந்து இந்த மாதத்துடன் ஒரு வருடம் நிறைவடையப் போகின்றது. யுத்தத்தின் போதும் பின்னரும் கைது செய்யப்பட்டும் சரணடைந்த நிலையிலும் உள்ள பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளின் பெற்றோர் உறவினர்கள் நாள் தோறும் கண்ணீர் வடித்தப்படி அலைகின்றனர். எனவே இவர்களை விடுதலை செய்ய வேண்டும் இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடாநாட்டில் வலிகாமம் ,வடக்கு உட்பட அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். அதற்கான செயற்திட்டங்களை அரசு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். குடாநாட்டை பொறுத்தவரையில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் வேலையின்றி நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர். எனவே இவர்களின் வாழ்வில் ஒளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான செயற்திட்டத்தை அரசு வகுத்து வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது இன்றியமையாததாகும். தமிழ் தலைமைகளின் அகிம்சைப் போராட்டம், 30 வருடகால யுத்தம் என்பவற்றின் பின்னரும் தமிழர்களுக்கு உரிய தீர்வை கொடுக்க அரசு முன்வராமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

பெரும்பான்மை பலத்துடன் அரசு பதவியேற்றுள்ளது. எனவே தமிழர்களின் தேசிய இனப்பிரசினை தீர்வுகளை காண்பதற்கு சிறந்த சந்தர்பம் தற்போது உருவாகியுள்ளது.

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்க அரசு முன்வருமானால் ஆனால் அதற்கு பூரண ஆதரவு அளிக்க நாம் தயாராகவே யுள்ளோம். தமிழ் பேசும் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டும். அந்தப் பேச்சு தமிழ் மக்களுக்குரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குரிய நம்பிக்கையை உருவாக்க வேண்டும் - என்றார். (அ-சி)

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூச்சலிட்டு சபை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர்.

இதனால் சபையை நடத்திச் செல்ல முடியாத நிலைக்கு சபாபீடம் தள்ளப்பட்டது. சபாபீடம் தெரிவித்த கருத்துகளை ஏற்றுக் கொள்ள எதிர்க்கட்சியினர் மறுத்தனர். பொன்சேகாவை இப்போதே சபைக்கு அழைத்து வர வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் கோரினர்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்றத்திற்கு அழைத்து வரவேண்டும் என்ற பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சி எம்.பிக்கள் 21 பேரின் அங்கீகாரத்துடன் எதிர்க் கட்சிகள் சபாபீடத்திடம் ஒப்படைத்தன.

பொன்சேகா கட்சியின் எம்.பி. அநுர குமார திஸாநாயக்க நேற்றுக்காலை இந் தப் பிரச்சி னையைக் கிளப்பினார். பொன்சேகா இன்று (புதன்) நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள் கின்றமையைத் தடுப்பதற்காக சிலர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் எம்.பி. ஒருவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளும் உரிமையை சபாநாயகர் பாதுகாக்க வேண் டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எதிர்க் கட்சி எம்.பிக்கள் பலர் இதே கோரிக் கையை சபா நாயகரிடம் முன்வைத்தனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பார் என சபாநாயகர் கூறினார்.

பிறகு பிற்பகல் 2.30 மணியளவில் அநுர குமார திஸாநாயக்க மீண்டும் இதை ஞாபகப்படுத்தினார். இன்னும் பொன்சேகா சபைக்கு அழைத்துவரப்படவில்லை என்று கூறினார். இப்போதே அவர் அழைத்து வரப்பட வேண்டும் என்று அவர் கூறி னார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் இதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வரின் உரிமையைப் பாதுகாக்க இந்தச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களும் இந்த விடயத்துக்கு ஆதர வாகக் குரல் கொடுத்தனர். இருப்பினும், இந்த விடயம் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்று அப்போது சபாபீடத்தில் இருந்த அஸ்வர் எம்.பி. கூறினார்.

பொன்சேகாவை சபைக்கு அழைத்து வரவேண்டும் என்ற பிரேரணையை எதிர்க் கட்சி எம்.பிக்கள் 21பேரின் அங்கீகாரத்துடன் சபாபீடத்திற்கு சமர்ப்பிக்கப்போகிறோம் என்று ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர அஸ்வரிடம் கூறினார். அதனை ஏற்கமுடி யாது என்று அஸ்வர் கூறினார்.

இதனால் சபை நடவடிக்கைகளுக்கு இடை யூறு விளைவிக்கும் வகையில் எதிர்கட்சியி னர் கூக்குரலிட்டு சபையை அசாதாரண நிலைக்குக் கொண்டுவந்தனர். இருப்பினும், அந்தப் பிரேரணையை சுசில் ஹந்துன் நெத்தி சபாபீடத்தில் ஒப்புவித்துவிட்டு வந்தார். பிறகு ஒருவாறு இந்தச் சர்ச்சை அடங்கியது. (அ-சி)

## யாழ்ப்பாண மக்கள் பயங்கர உணர்வில்...

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டுமெனவும் இப் புதிய நாடாளுமன்றத்தை அது கேட்டுள்ளது.

இலங்கையில் நடைறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டம், பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம், அவசர கால ஒழுங்கு விதிகள் ஆகியவை படையினர் திட்டமிட்ட முறையில் மனித உரிமைகளை மீறி நடப்பதற்கு வழி செய்கின்றன என மன்னிப்புச் சபையின் பிரதிப் பணிப்பாளர் மடுமல்கொல்ரா தெரிவித்துள்ளார்.

மேலும் அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

### 1971 ஆம் ஆண்டிலிருந்து நாடு தொடர்ச்சியாக அவசரகாலச் சட்டத்தின் கீழ்

முன்னாள் ஜனாதிபதியுடைய காலத்தில் தளர்த்தப்பட்டிருந்த காலம் தவிர 1971ஆம் ஆண்டிலிருந்து எமது நாடு தொடர்ச்சியாக அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே இயங்கி வருகின்றது.

கிளர்ச்சியாளர்களுக்கு 1981ஆம் ஆண்டு மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்பு தமிழ்க் கைதிகள் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அதே பாணியிலே இந்த அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டி தடுப்புக் காவலில், சிறைச்சாலைகளில் இருக்கும் சகல தமிழ்க் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென உருக்கமாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மிருகங்களைப் போல் முள் கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் 3 லட்சம் பேரில் 10 ஆயிரம் பேர் வெளியில்திரியாதவாறு மறைவிடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களும் விடுவிக்கப்படல் வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன்.

கொடுமையான விதிகளைக் கொண்டமைந்த இந்த அவசர கால ஒழுங்குப் பிரமாணங்கள் தமிழருக்கு மட்டுமே கட்டவிழ்த்து விடப்படுவதால் அச்சட்ட நீடிப்புக்கான இப் பிரேரணையை ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு இரு பகுதியிலும் அமர்ந்திருக்கும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென மிக வினயத்துடன் வேண்டுகின்றேன்.

அனைத்து எதிர்க்கட்சிகளையும் இதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன். -என்றார். (அ-சி)

## ஊடகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சராக நியமித்தமைக்கு ஊடக சுதந்திர அமைப்புகள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## அகதிமுகாம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு கொண்டுவரப்பட்ட விசேட பிரிவுகளில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை.

### படையினரிடம் பொலிஸ் அதிகாரங்கள்

படையினரிடம் இன்னும் பொலிஸ் அதிகாரம் உள்ளது. இது மேலும் சிக்கலை ஏற்படுத்தக்கூடியது அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகள் நிறைவேற்றப்பட்டாலும் அரசு சட்டத்தை மீறிச் செயற்படும் சந்தர்ப்பங்கள் அதிகளவில் உள்ளன.

அகதிமுகாம்களில் உள்ள 80 ஆயிரம்பேரில் ஒருவருக்கேனும் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்படவில்லை. அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகள் இந்த விடயத்தில் மீறப்பட்டுள்ளன.

உண்மைகளைக் கண்டறிவதற்காக தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் என்று பிரதமர் இந்த சபையில் கூறினார். இது வரவேற்கத்தக்கது என்றாலும், உண்மையைக் கண்டறிய மக்கள் மத்தியில் சிந்தனை ரீதியான மாற்றம் ஏற்படவேண்டும்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் படையினருக்கும், ஆயுதக்குழு ஒன்றுக்குமிடையிலானதல்ல. இதனால், இனங்களிடையே இடைவெளியேற்பட்டது. மீண்டும் அவர்களிடம் ஒன்றுமை ஏற்பட இனங்களிடையே சிந்தனை ரீதியான மாற்றம் ஏற்படவேண்டும்.

மே மாதம் 12 முதல் 18 ஆம் திகதி வரை யுத்தவெற்றி கொண்டாடப்படவுள்ளது. இது யாருடைய மனதையும் புண்படுத்தாமல் கொண்டாடப்படவேண்டும் - என்றார். (அ-சி)

## முல்லைத்தீவு ஆசிரியர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,மே06

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றி வரும் முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள் தமது சம்பளப் பத்திரத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை மறுநாள் ஞாயிறு, திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்களிலும் -

யாழ்.மேலதிக மாகாணக் கல்வி அலுவலகத்தில் கையொப்பமிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித்துள்ளார். (ஒ)

## அவசர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா ஆகியோர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களித்தது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்றுமுன்தினமும் நேற்றும் இடம்பெற்றன. (அ-சி)

## புலிகளுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நாடாளுமன்ற விளையாட்டு மைதானத்துக்கு எதிர்ப்பக்கமாக அமைந்திருக்கும் போர் வீரர்கள் நினைவுத் தூபி முன்பாக சம்பிரதாய வைபவம் ஒன்று இடம் பெற உள்ளது. இச்சம்பிரதாய வைபவத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகிப்பார்.

இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

அத்தினத்தில் மாலை 6 மணிக்கு நாட்டு மக்கள் அனைவரும் வீடுகளில் தீபம் ஏற்றி, போரில் உயிரைத் தியாகம் செய்த படையினரை நினைவுகூரவேண்டுமென்று இராணுவ சேவைகள் அதிகாரசபை கோரி உள்ளது. (அ-சி)

## சரணடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு இனவாதத்தை உள்ளடக்கிய கீழ்த்தரமான மனோநிலையில்தான் செயற்படுகிறது. அடுத்தவர்களுக்கு மரியாதை வழங்க அரசு தவறிவிட்டது. இனங்களை மதிக்காதவர்களை ஒற்றுமைப்படுத்த இந்த அரசிடம் ஆற்றல் இல்லை.

படையினரின் தியாகத்தால் பெறப்பட்ட யுத்த வெற்றியின் பலன்கள் இந்த மக்களிடம் சென்றடையவில்லை. இது எமது நாடு என்ற உணர்வை அரசு தமிழ் மக்களிடையே இன்னும் ஏற்படுத்தவில்லை.

படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் விவரங்கள் எவற்றையும் அரசு வெளியிடவில்லை.

தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா என்று தேடி அந்த இளைஞர்களின் பெற்றோர்கள் புகைப்படங்களுடன் அகதி முகாம்களில் ஏறி இறங்குகின்றனர்.

அந்தப் பெற்றோர்களுக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை அரசு உடனடியாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும். - என்றார். (அ-சி)

வான் விற்பனைக்கு
47-ISSUZU-250 தொடரிலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள கூலர் வான் உடன் விற்பனைக்குண்டு. தொ.இ:0772336321

PAPER CLASS
A/L-2011 LOGIC
By: P.கமல்
(புதிய பாடத்திட்டத்திற்கமைய பல்தேர்வு வினாக்கள் (MCQ))
ஆரம்பம்: 07.05.2010 வெள்ளி 3.15pm
A/L - 2012 ஆரம்பம் 8.05.2010 சனி
வெளி மாணவருக்கும் அனுமதி உண்டு.
யூனிவேர்சல்

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel:021 222 4459 - 021 4590775
0774192275.Fax:021-222 4460.
VACANCY
Post of Lecturers
Microsoft Office
Desktop Publishing
கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
விவரங்களுக்கு நேரில் (கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)

Networking Engineer
Government Scholarship
System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
*Carrier Guidance, Student Visa, Work Permit
செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்
Per Module- 15000/= 4800/=
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
Free Diploma in Hardware Technology-DHT, Diploma in English, COMPUTER DRIVING LICENCE-ICDL
இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே
MCS 324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்
Supported By. UNDP/JRRP
T.P-772395895

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org